கடவுளும் சைத்தானும்

சாரு நிவேதிதா

உயிர்மை பதிப்பகம்

கடவுளும் சைத்தானும்

சாரு நிவேதிதா

மின்னூலாக்கம் : செல்லா

உயிர்மை
பதிப்பகம்

மின்னூலாக்கம்
செல்லா

www.minnoolakam.blogspot.com

விலை ரூ. 60

உயிர்மை பதிப்பக வெளியீடு: 312

கடவுளும் சைத்தானும் ✓ கட்டுரைகள் ✓ ஆசிரியர் : சாரு நிவேதிதா ✓ © சாரு நிவேதிதா ✓ முதல் பதிப்பு : டிசம்பர் 2010 ✓ வெளியீடு : உயிர்மை பதிப்பகம், 11/29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை-600 018 தொலைபேசி : 91 - 44 - 24993448, மின்னஞ்சல் : uyirmmai@gmail.com, இணையதளம் : www.uyirmmai.com ✓ அச்சாக்கம் : மணி ஆஃப்செட், சென்னை 600 005

KadavuLum saiththaanum ✓ Essays ✓ Author charu nivedita ✓ © charu nivedita ✓ Language: Tamil ✓ First Edition December 2010 ✓ Demy 1x8 ✓ Paper 18.6 kg maplitho ✓ Pages: 96 ✓ Published by Uyirmmai Pathippagam, 11/29 Subramaniam Street, Abiramapuram, Chennai - 600 018, India. Tele/Fax 91- 44 -24993448, e-mail : uyirmmai @gmail.com, Website: www.uyirmmai.com ✓ Printed at Mani Offset, Chennai 600 005 ✓ Price Rs. 60

ISBN : 978-93-81095-01-0

சாரு நிவேதிதா

சாரு நிவேதிதா 1953இல் நாகூரில் பிறந்தார். 1978இலிருந்து 1990 வரை தில்லிவாசி. தமிழில் மட்டுமல்லாது மலையாளத்திலும் இவரது எழுத்துக்கள் தொடர்ச்சியாக வெளிவந்து பரவலான கவனத்தைப் பெற்றிருக்கின்றன. தற்போது சென்னையில் வசிக்கிறார்.

நாவல் (உயிர்மை பதிப்பக வெளியீடு)

1. தேகம்
2. ஸீரோ டிகிரி
3. ராஸ லீலா
4. காமரூப கதைகள்
5. எக்ஸிஸ்டென்ஷியலிஸமும் ஃபேன்சி பனியனும்

சிறுகதைத் தொகுப்பு

1. ஷேக்ஸ்பியரின் மின்னஞ்சல் முகவரி (உயிர்மை)
2. மதுமிதா சொன்ன பாம்பு கதைகள் (உயிர்மை)
3. கர்னாடக முரசும் நவீன தமிழ் இலக்கியத்தின் மீதான ஓர் அமைப்பியல் ஆய்வும் (ஸில்வியா மற்றும் நாகார்ஜுனனுடன் இணைந்து வெளியிட்ட சிறுகதைத் தொகுப்பு)
4. நேநோ
5. ஊரின் மிக அழகான பெண் (மொ.பெ. சிறுகதைகள்)-(உயிர்மை)

கட்டுரைத் தொகுப்பு (உயிர்மை பதிப்பக வெளியீடு)

1. சரசம்-சல்லாபம்-சாமியார்
2. கனவுகளின் நடனம்
3. கலையும் காமமும்
4. மழையா பெய்கிறது
5. கடவுளும் சைத்தானும்
6. எனக்குக் குழந்தைகளைப் பிடிக்காது
7. திசை அறியும் பறவைகள்
8. கடவுளும் நானும்
9. தீராக்காதலி
10. சினிமா சினிமா
11. மூடு பனிச்சாலை
12. ஆஸாதி. ஆஸாதி. ஆஸாதி
13. தப்புத்தாளங்கள்
14. கலகம்-காதல்-இசை
15. வரம்பு மீறிய பிரதிகள்
16. சினிமா அலைந்து திரிபவனின் அழகியல்

விலை ரூ. 60

உயிர்மை பதிப்பக வெளியீடு: 312

கடவுளும் சைத்தானும் ⁄⁄ கட்டுரைகள் ⁄⁄ ஆசிரியர் : சாரு நிவேதிதா ⁄⁄ © சாரு நிவேதிதா ⁄⁄ முதல் பதிப்பு : டிசம்பர் 2010 ⁄⁄ வெளியீடு : உயிர்மை பதிப்பகம், 11/29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை–600 018 தொலைபேசி : 91 – 44 – 24993448, மின்னஞ்சல் : uyirmmai@gmail.com, இணையதளம் : www.uyirmmai.com ⁄⁄ அச்சாக்கம் : மணி ஆஃப்செட், சென்னை 600 005

KadavuLum saiththaanum ⁄⁄ Essays ⁄⁄ Author charu nivedita ⁄⁄ © charu nivedita ⁄⁄ Language: Tamil ⁄⁄ First Edition December 2010 ⁄⁄ Demy 1x8 ⁄⁄ Paper 18.6 kg maplitho ⁄⁄ Pages: 96 ⁄⁄ Published by Uyirmmai Pathippagam, 11/29 Subramaniam Street, Abiramapuram, Chennai - 600 018, India. Tele/Fax 91- 44 -24993448, e-mail : uyirmmai @gmail.com, Website: www.uyirmmai.com ⁄⁄ Printed at Mani Offset, Chennai 600 005 ⁄⁄ Price : Rs. 60

ISBN : 978-93-81095-01-0

சாரு நிவேதிதா

சாரு நிவேதிதா 1953இல் நாகூரில் பிறந்தார். 1978இலிருந்து 1990 வரை தில்லிவாசி. தமிழில் மட்டுமல்லாது மலையாளத்திலும் இவரது எழுத்துக்கள் தொடர்ச்சியாக வெளிவந்து பரவலான கவனத்தைப் பெற்றிருக்கின்றன. தற்போது சென்னையில் வசிக்கிறார்.

நாவல் (உயிர்மை பதிப்பக வெளியீடு)

1. தேகம்
2. ஸீரோ டிகிரி
3. ராஸ லீலா
4. காமரூப கதைகள்
5. எக்ஸிஸ்டென்ஷியலிஸமும் ஃபேன்சி பனியனும்

சிறுகதைத் தொகுப்பு

1. ஷேக்ஸ்பியரின் மின்னஞ்சல் முகவரி (உயிர்மை)
2. மதுமிதா சொன்ன பாம்பு கதைகள் (உயிர்மை)
3. கர்னாடக முரசும் நவீன தமிழ் இலக்கியத்தின் மீதான ஓர் அமைப்பியல் ஆய்வும் (ஸில்வியா மற்றும் நாகார்ஜுனனுடன் இணைந்து வெளியிட்ட சிறுகதைத் தொகுப்பு)
4. நேநோ
5. ஊரின் மிக அழகான பெண் (மொ.பெ. சிறுகதைகள்)-(உயிர்மை)

கட்டுரைத் தொகுப்பு (உயிர்மை பதிப்பக வெளியீடு)

1. சரசம்-சல்லாபம்-சாமியார்
2. கனவுகளின் நடனம்
3. கலையும் காமமும்
4. மழையா பெய்கிறது
5. கடவுளும் சைத்தானும்
6. எனக்குக் குழந்தைகளைப் பிடிக்காது
7. திசை அறியும் பறவைகள்
8. கடவுளும் நானும்
9. தீராக்காதலி
10. சினிமா சினிமா
11. மூடு பனிச்சாலை
12. ஆஸாதி. ஆஸாதி. ஆஸாதி
13. தப்புத்தாளங்கள்
14. கலகம்-காதல்-இசை
15. வரம்பு மீறிய பிரதிகள்
16. சினிமா அலைந்து திரிபவனின் அழகியல்

(பிற வெளியீடுகள்)

17. லத்தீன் அமெரிக்க சினிமா
18. கோணல் பக்கங்கள்-1
19. கோணல் பக்கங்கள்-2
20. கோணல் பக்கங்கள்-3
21. பாலியல்: நளினி ஜமீலாவுடனான உரையாடல்
22. மனங்கொத்திப் பறவை

இவரது இணையதளம்: www.charuonline.com

புவனேஸ்வரிக்கு

1.	கடவுளும் சைத்தானும்	9
2.	தவத்தைக் கலைத்த தவசீலன்	13
3.	குமுதத்தின் அவதூறு	16
4.	அஞ்ஞாநியின் அராஜகம்	19
5.	தனிமையும் கொண்டாட்டமும்	26
6.	இளைய தலைமுறையும் அடியேனும்	28
7	வாழ்விலே முதல்முறை...	31
8.	முதல் மழை, முதல் கனவு....	35
9.	முதல் மழை, முதல் கனவு....(2)	42
10.	கொஞ்சம் சுயபுராணம்	47
12.	மன்னனின் வாழ்க்கை	51
13.	மீண்டும் காலை வணக்கம்	54
14.	சிவகாம சுந்தரி	62
15.	ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு...(1)	65
16.	ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு...(2)	69
17.	ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு...(3)	75
18.	ஓர் நற்செய்தி	78
19.	ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு...(4)	82
20.	ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு...(5)	88
21.	ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு...(6)	91

கடவுளும் சைத்தானும்

சில நண்பர்களைப் பார்த்திருக்கிறேன். தம் மனைவியைப் பற்றி ஆகா ஓகோ என்று ஆரவார மாகப் பேசுவார்கள். உள்ளே போய் பார்த்தால் தயிர் கடையும் மத்து பார்த்திருக்கிறீர்களா, அந்த மத்தாலேயே தர்ம பத்தினியிடம் அடி வாங்கிக்கொண்டிருப்பார்கள். நான் இங்கே எழுதப் போவது அப்படி அல்ல. என்னைப் பொறுத்தவரை என் உறவினர்கள் யாராக இருந்தாலும் – என் அம்மாவாகவே இருந்தாலும்– உள்ளது உள்ளபடி மட்டுமே சொல்லுவேன்

இவ்வளவு முஸ்தீபு எதற்கு என்றால், நான் இங்கே சொல்வதை பலருக்கும் நம்ப முடியாமல் போகலாம். அப்படிப்பட்டவர்கள் நேரில் வந்து சோதித்துக் கொள்ளலாம்.

சுமைதாங்கி என்ற படத்தில் கண்ணதாசன் எழுதி பி.பி.ஸ்ரீனிவாஸ் பாடிய அந்த அற்புதமான பாடலை தினமும் ஒருமுறையாவது கேட்டு விடுவேன். 'மனிதன் என்பவன் தெய்வமாகலாம்; வாரி வாரி வழங்கும்போது வள்ளலாகலாம்; வாழை போல தன்னை தந்து தியாகி ஆகலாம்; உருகி ஓடும் மெழுகு போல ஒளியை வீசலாம்'

என்று துவங்கும் அந்தப் பாடல் வரிகளை தன்னுடைய வாழ்வில் உயிர்மூச்சாய் கடைப்பிடிக்கும் ஒருவரை உங்களுக்குத் தெரியுமா? அதுவும் அவர் உங்கள் மனைவியாகவே இருந்தால் அந்த அனுபவம் எப்படி இருக்கும்? அதைத்தான் இப்போது சொல்லப் போகிறேன்.

மனிதனின் துக்கத்துக்கெல்லாம் அடிப்படை காரணம் ஆசை என்றார் புத்தர் ஆசையை அறுத்தால் அதுதான் மனிதன் தெய்வமாகும் நிலை. சரியா? நான் மைனராக இருந்தபோது ஒரு மைனர் செயின் போட்டிருந்தேன். பிறகு என் மகன் கார்த்திக்கின் படிப்புக்காக அந்த செயின் அடிக்கடி அடகுக் கடைக்குப் போய்க்கொண்டிருந்தது. அப்படி ஒருநாள் போனபோது என் தலையைப் பார்த்ததுமே சேட் என் பெயர் மற்றும் முகவரியை கடகடவென்று எழுத ஆரம்பிக்கவே ரொம்பவும் லஜ்ஜையாகி அப்போதே அந்த செயினை அவரிடம் விற்றுவிட்டேன்.

கார்த்திக் வேலைக்குப் போய் முதல் சம்பளம் வாங்கியவுடன் என்னையும் என் மனைவி அவந்திகாவையும் நகைக் கடைக்கு அழைத்துப் போனான். எவ்வளவோ சொல்லியும் அவந்திகா நகை வேண்டாம் என்று சொல்லிவிட்டாள். ஒரு மோதிரம் கூட வாங்கிக் கொள்ளவில்லை. எனக்கோ ஸ்டண்ட் மாஸ்டரைப் போல் நெஞ்சு நிறைய சங்கிலி அணிந்துகொள்ள விருப்பம் என்பதால் அவளுடைய பங்குக்கும் சேர்த்து நானே வாங்கிக்கொண்டேன்.

நகை மட்டும் அல்ல; எதிலுமே ஆசை இல்லாதவள் அவந்திகா ஒருநாள் கார்த்திக் சொன்னான்; அம்மாவுக்கு ஒரு வீடு வாங்கித் தர வேண்டும் என்று. அதற்கு அவந்திகா சொன்ன பதில்: "எனக்கோ உஞ்ச விருத்தி செய்து சாப்பிட்டு கடவுளுக்கு சேவை செய்ய வேண்டும் என்று ஆசை. எனக்கு எதற்கடா வீடு?" உஞ்சவிருத்தி என்றால் சன்னியாசிகள் எடுக்கும் பிச்சை. மற்ற பிச்சைக்கும் இதற்கும் என்ன வித்தியாசம் என்றால், ஒரு வீட்டில்தான் கேட்க வேண்டும். அதுவும் ஒருமுறைதான் கேட்க வேண்டும். கிடைக்காவிட்டால் அன்றைய தினம் பட்டினி.

இல்லறத்திலேயே துறவறத்தைப் பேணிக்கொண்டிருப்பவள் அவந்திகா. இதன் அர்த்தம் ரொம்பப் பெரியது. சிலர் சைவ உணவுப் பழக்கம் உள்ளவர்களாக இருப்பார்கள். உடனே வீட்டில் உள்ள அத்தனை பேரும் சைவமாக மாற வேண்டும். ஒரு முட்டை கூட உள்ளே வரக் கூடாது. மன்னன் எந்த மதத்தைத் தழுவுகிறானோ அந்த மதத்துக்கே பிரஜைகளும் மாற வேண்டும் என்பது அரசர் காலத்து மரபு. அது இன்றும் வழக்கில் இருப்பது நம்முடைய குடும்பங்களில்தான் என்று நினைக்கிறேன். நம்முடைய வீட்டுத் தலைவர்தான் மன்னர்; தலைவியாக இருந்தால் அவர்தான் ராணி. நாமெல்லாம் பிரஜைகள்!

அவந்திகாவிடம் இந்தப் பிரச்சினையெல்லாம் இல்லை. அவளுடைய நம்பிக்கையை எங்கள் மீது திணிக்க மாட்டாள் அவள் தீவிர

சைவம். ம்ஹூம். இப்படிச் சொன்னால் சரி வராது. புலனடக்கம் என்றால் அது மந்திரத்தால் வருவதல்ல. அது ஒரு கடும் தவம். காலையில் ஆப்பம் ஆட்டுக்கால் பாயா, மதியம் ஹைதராபாத் பிரியாணி, இரவில் கொத்துப் பரோட்டா, சிக்கன் டிக்கா என்று சாப்பிட்டால் புலன்கள் எப்படி அடங்கும்? தறி கெட்டு அல்லவா பாயும்? அதனால் அவந்திகா சுத்த சைவம் என்பதோடு, உப்பு, புளி, மிளகாய், மிளகு, வெங்காயம், பூண்டு என்று எதையுமே தொட மாட்டாள். குழம்பு ரசம்கூட கிடையாது. இட்லி சாப்பிட்டால் வெறும் இட்லி. எதுவுமே தொட்டுக்கொள்ள மாட்டாள். மற்றபடி உப்பு போடாமல் அவித்த காய்கறி மற்றும் பழம்.

ஆனால் நானோ ஒரு சாப்பாட்டுப் பிரியன். மேலே சொன்ன ஆட்டுக் கால் பாயா பார்ட்டி. ஒரு துண்டு கருவாடாவது இல்லாவிட்டால் சாப்பாடு உள்ளே இறங்காது. கருவாடு என்றதும் ஞாபகம் வருகிறது. எனக்கு உயர் ரத்த அழுத்தம் இருப்பதால் உப்பு அதிகம் கூடாது. கருவாட்டிலோ உப்பு கன்னாபின்னா என்று இருக்கும். அதனால் அவளே நொச்சிக்குப்பம் போய் மீன் வாங்கிக்கொண்டு வந்து, அவளே அறுத்து கழுவி, மிதமான உப்பு போட்டு காய வைத்து கருவாடு செய்வாள் அவந்திகா. சரி, மார்க்கெட்டிலேயே அறுத்து வாங்கிக் கொண்டு வரலாமே என்று கேட்டால், நாமே செய்தால் இன்னும் சுத்த மாக செய்யலாமே என்று பதில் வரும்.

இவ்வளவு சிரமப்படுகிறாளே என்று ஒருநாள் நானே கருவாடு வாங்கிக்கொண்டு வந்தேன். 'ம்ஹூம், தப்பு தப்பு' என்று சொல்லி அதை பணிப்பெண்ணிடம் கொடுத்துவிட்டாள். இவ்வளவுக்கும் அவந்திகாவுக்கு யாரும் அசைவம் சாப்பிடுவது பிடிக்காது. உயிரைக் கொலை செய்வது பாவம் என்று சொல்லுவாள். தென்கலை ஸ்ரீவைஷ்ணவ இனத்தைச் சேர்ந்த பெண்!

'ஓ, தன் கணவனுக்காக இவ்வளவும் செய்கிறாள் இந்தப் பெண்' என்று நீங்கள் நினைத்தால் அதுவும் தவறு. அவளைச் சுற்றியிருக்கும் அத்தனை பேருக்கும் இதே பணிவிடைதான் காய்கறி விற்கும் பெண், பால் போடும் பெண், துப்புரவுத் தொழிலாளர்கள், இளநீர் விற்கும் பையன் என்று இந்தப் பக்கம் யார் வந்தாலும் இந்த வீட்டுக் கதவைத் தட்டினால் இலை போட்டு சாப்பாடு பரிமாறுவாள். (ஆமாம், வீட்டில் வாழை மரம் உள்ளது).

ஒருநாள் அவசர அவசரமாக வீட்டில் இருந்த பழங்கள் அவ்வளவையும் எடுத்து பைகளில் வைத்துக்கொண்டிருந்தாள். நான் பதற்றத்துடன் எழுந்து என்ன என்று வெளியே வந்து பார்த்தேன் ஒரு இளம் பெண் நான்கு குழந்தைகளுடன் நின்றுகொண்டிருந்தாள் நல்ல் குடும்பத்துப் பெண் போலிருக்கிறது. புருஷனிடம் கோபித்துக்கொண்டு வந்துவிட்டாள் போல. எனக்கு அந்த இடத்தில் தெரிந்தது ஒரு சிறுகதை. ஆனால் அவந்திகாவுக்கு அவர்களின் ப்சித்த கண்கள் தெரிந்திருக்கிறது.

இப்படித் தன் புலனை அடக்கி, அடுத்தவர் வலியைத் தன் வலியாய் உணர்ந்தால் மனிதனும் தெய்வமாகலாம்.

சில சமயங்களில் மகா அவ்தார் பாபாவுடன் பேசி இருக்கிறாள். 2000 ஆண்டுகளாக இமயமலையில் வாழும் ஞானி. ரஜினி சொன்ன போது கிண்டல் செய்தேன். இப்போது என் வீட்டுக்குள்ளேயே பார்க்கிறேன்.

எல்லாம் சரி; இருந்தாலும் எனக்கு ஒரு தீராத சந்தேகம். இவ்வளவு தெய்வாம்சம் பொருந்திய ஒரு பெண் எப்படி ஒரு சைத்தானை கணவனாகத் தேர்ந்தெடுத்தாள்?

தவத்தைக் கலைத்த தவசீலன்

1. உண்மைக்கும் சத்தியத்துக்கும் இருக்கும் வித்தியாசம் அல்லது இடைவெளி என்ன?

2. உண்மையைச் சொல்வதால் ஏற்படுவது பாதிப்பா அல்லது மன நிறைவா?

ர.ராஜராஜன்

நான் சொன்னால் நம்புவீர்கள் சென்னையிலேயே என்னை மிகவும் ஈர்த்த இடமான டென். டெனிங் பக்கம்கூட செல்லாமல் எடிட்டிங், ப்ரூஃப் ரீடிங் செய்துகொண்டிருக்கிறேன் காலையில் நடைப்பயிற்சி, தியானம் என்று அன்றாட வேலைகள் எதையும் செய்வதில்லை. எழுத்து தவம் என்று சும்மாச்சுக்கும் சொல்வதில்லை. தவம் என்றால் தவம்தான். தவம் செய்துகொண்டிருக்கும்போது 'இதோ போய் ஒரு மணி நேரம் வாக்கிங் முடித்துவிட்டு வருகிறேன்' என்று சொல்ல முடியாது. இந்த உலகத்திலேயே கொடுமையானது ப்ரூஃப் ரீடிங் வேலைதான். இதை ஒரு எழுத்தாளனாகிய நான் ஏன் செய்கிறேன்? என் வாசகர்கள் மீது நான் கொண்டுள்ள எல்லையற்ற அன்புதான் காரணம். எவ்வளவு

திறமையான ப்ரூஃப் ரீடரும் என் எழுத்தில் பிழை திருத்தம் செய்யமுடியாது. காரணம், மூார் பத்தாய் என்று நான் எழுதினால் அவருக்கு என்னவென்று புரியும்? நூறு விதமான சாத்தியங்கள் அவருக்குத் தோன்றும். எத்தனையோ ப்ரூஃப் ரீடர்கள் மனநோயாளிகளாய் மாறியதை நான் பார்த்திருக் கிறேன். என்னால் அப்படி யாரும் ஆகிவிடக்கூடாது.

நேற்று இரவு ஒரே ஒரு மணி நேரம்தான் தூங்கினேன். தலையெல்லாம் கிறுகிறு என்று சுற்றுகிறது. என் வீட்டிலிருந்து பத்து நிமிடம் நடந்தால் மெரீனா கடற்கரை. இந்தக் காலை நேரம் - அதுவும் மழை ஓய்ந்த வேளை சொர்க்கம் மாதிரி இருக்கும். மனம் ஏங்குகிறது. நான் இங்கே வேலை செய்துகொண்டிருக்கிறேன். இன்னும் ஒரே ஒரு புத்தகம்தான் பாக்கி.

நேற்றுகூட டென்.டி. ஓடி விடலாம் என்று தோன்றியது. அதோடு டென்.டியிலிருந்து ஒரு குறுஞ்செய்தி வேறு வந்திருந்தது. "இன்று Halloween Day. ஏகப்பட்ட மோகினிப் பிசாசுகள் வருகின்றன. நீங்களும் வந்து கலந்துகொண்டு இந்த பயங்கரத்தை அனுபவியுங்கள். வாழ்வின் மிக மோசமான தினமாக இது உங்களுக்கு இருக்கும்" என்றது குறுஞ் செய்தி. அப்போதுதான் அது அக்டோபர் மாதம் என்றே என் மனதில் உறைத்தது. அக்டோபர் 31 அன்று கொண்டாடப்படுவது ஹலோவீன் டே.

நேற்று இரவு டென்.டி. சென்றிருந்தால் ஒரு கொண்டாட்டமான இரவை அனுபவித்திருக்க முடியும். ஆனால், வேலை வேலை வேலை என்று மனம் ஜெபித்துக்கொண்டிருந்தது.

அதனால் டென்டியும் வேண்டாம், ஹலோவீன் கொண்டாட்டங்களும் வேண்டாம் என்று மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டேன். ஒயின் அருந்தி எத்தனையோ நாட்கள் இருக்கும். இந்த நிலைமையில் உங்கள் கடிதம் மீண்டும் என்னை டென்.டி. பக்கம் செலுத்துகிறது.

கடைசி தடவை டென். டி. சென்றிருந்தபோது – அது தீபாவளிக்கு முந்தின தினம் – நிக்கியும் நானும் ஆன்மீக விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தபோது எங்கள் கவனத்தைக் கலைப்பதுபோல் நிறைய மோகினிப் பிசாசுகள் வந்து சேர்ந்தன. ஆன்மீகத்தை விட்டு விட்டு அவர்களின் வயது 16 இருக்குமா, 17 இருக்குமா, அல்லது பதினெட்டா என்ற ஆராய்ச்சியில் இறங்கும்படி ஆகிவிட்டது. அதுவாவது பரவா யில்லை. ஒரு பெண் ஜீன்ஸை ரொம்ப அபாயகரமான முறையில் அணிந்திருந்தாள். நிக்கி என்னை ரகசியமாக அழைத்து "உடனே பார்த்துவிடாதே; இதோ எழுந்து நின்று சோம்பல் முறித்துக்கொண்டி ருக்கிறாளே, இந்தப் பிசாசைப் பார் ப்யூபிக் ஹேர் எல்லாம் தெரிகிறது" என்றான். நானும் பேரரை அழைப்பது போல் பாசாங்கு செய்து பார்த்தேன். ஒருகணம் மூச்சு நின்று வந்தது. ப்யூபிக் ஹேர் தான் ஆனாலும் ஒத்துக்கொள்ள முடியாமல் ஏதோ தடுத்தது.

“ம்ஹூம். இல்லை நிக்கி. நிச்சயமாக இல்லை.”

“அப்படியானால் உனக்கு வயதாகி கண் பார்வை மங்கலாகிவிட்டது. லென்ஸ் பவரை மாற்று.”

சரி, ராஜராஜன். நேரடியாக மேட்டருக்கு வந்துவிடுகிறேன். உண்மைக்கும் சத்தியத்துக்குமான இடைவெளி அந்தப் பெண் அணிந்திருந்த பச்சை நிற பெல்ட்டுக்கும் ப்யூபிக் ஹேருக்கும் இடையே இருந்த அல்லது இல்லாமலிருந்த இடைவெளி அளவுதான் உள்ளது.

இப்போது இரண்டாவது கேள்வி. ஒரு காதலன். ஒரு காதலி. காதலனுக்கு அவள் பத்தாவது காதலி. அவன் ஒரு ப்ளேபாய் என்று அவளுக்கு நன்றாகவே தெரியும். அது கொஞ்சம் அவளுக்கு சங்கட மாகத்தான் இருந்தது. ஒரு நல்லவனைக் காதலித்திருக்கலாம். ஆனால் பிரச்சினை என்னவென்றால், நல்லவர்களுக்குக் காதலிக்கத் தெரிய வில்லை. அதனால்தான் இந்த அயோக்கிய ராஸ்கலைக் காதலித்துத் தொலைத்தாள். அவளுக்கு முதலில் அந்த எண்ணமே இல்லை. ஆனால் இந்த ராட்சசன் ஒரு படு பயங்கரமான ஸெட்யூஸர். பேச்சிலேயே ஆளைக் கவிழ்த்துவிடுவான். குரலைக் கேட்டால் மகுடிக்கு மயங்கும் பாம்பு போல் அவனுக்கு அடிமையாகிவிடுகிறது மனம். என்ன செய்ய? அவள் அவளுடைய கட்டுப்பாட்டிலேயே இல்லை.

ஒருநாள் அவள் அவனைக் கேட்டாள். “டேய், உண்மையை மறைக் காமல் சொல். இதுவரை நீ எத்தனை பெண்களை ‘டேஷ்’ பண்ணி யிருக்கிறாய்?”

அதற்கு அந்தக் கயவாளிப்பயல் சொன்ன பதில் என்ன தெரியுமா?

“சே சே. என்ன அராஜகம். என்ன அபாண்டம். எனக்குப் பெண்களைப் பிடிக்கும்தான். ஒத்துக்கொள்கிறேன். அதற்காக ‘டேஷ்’ எல்லாம் செய்ய முடியுமா? இதோ இப்போது உன்னைத்தான் முதல் முதலாக ‘டேஷ்’ செய்துகொண்டிருக்கிறேன்.”

அவன் சொன்னது எங்கோ தொலைதூரத்தில் – அல்லது கனவில் கேட்பதுபோல் இருந்தது. அவள் அவனில் கரைந்து கொண்டிருந்தாள்.

இப்போது ராஜராஜன், நீங்கள்தான் என் குழப்பத்துக்கு பதில் சொல்ல வேண்டும். உண்மை நல்லதா, பொய் நல்லதா?

சரி, காலை நேரத்தில் மூடைக் கெடுத்துவிட்டீர்கள். ஆளை விடுங்கள். ப்ரூஃப் ரீடிங் செய்ய ஓடுகிறேன்.

1.11.2009

குமுதத்தின் அவதூறு

இளையராஜாவுக்கு இசையமைக்கத் தெரியாது என்கிற ரீதியில் தொடர்ந்து எழுதி வருகிறாரே சிற்றிதழ் எழுத்தாளர் சாரு நிவேதிதா?

ஒரு நிஜமான இலக்கியவாதியிடம் இது குறித்துக் கேட்ட போது, அவர் தந்த பதில் இது. 'எங்க இலக்கிய உலகில் அவரை ஜோக்கராதான் பார்ப்போம். நீங்க ஏன் அதை சீரியஸா எடுத்துக் கிட்டு. அதனால் சிரித்துவிட்டுப் போங்கள்.

இந்த வாரக் குமுதம் இதழில் அரசு கேள்வி–பதில் பகுதியில் என்னைப் பற்றி வந்துள்ள இந்த ஐட்டத்தை நண்பர்கள் என் பார்வைக்குக் கொண்டு வந்தனர் மற்றபடி நான் குமுதம் வாசிப்பதில்லை. மேற்கண்ட கேள்வி பதிலை எழுதியது யார் என்று என் நிருபர் நண்பர் ஒருவரிடம் கேட்டேன்.

அவர் சொன்னார் பொதுவாக குமுதத்தில் நடிகைகளின் குளியல் காட்சியைப் புகைப்படம் எடுக்கத்தான் எங்களுக்கு அஸைன்மெண்ட் தருவார்கள் நாங்களும் ப்ரியாமணியின் ப்ரா விலகியதை புகைப்படம் எடுத்துக் கொடுப்போம்.

இருந்தாலும் இந்த விகடன்காரர்களால் பெரும் தொல்லையாக இருக்கிறது. நாங்கள் எவ்வளவுதான் நுணுக்கமாக ப்ரா விலகிய போட்டோ எல்லாம் போட்டாலும் விகடனின் விற்பனையைத் தொட முடியாமல் பெரிய ரோதனையாக இருக்கிறது. இதனால் ஒரு யோசனை செய்தோம். இலக்கியவாதிகளைப் பற்றி கிசுகிசு போடலாம் என்பதே அந்த யோசனை.

முதலில் கோணங்கியைப் பற்றிய ஒரு சூப்பர் கிசுகிசு வைத்திருக்கிறேன் என்றார் இலக்கிய நிருபர். உண்மையிலேயே சூப்பர் கிசுகிசுதான். கோணங்கி வீட்டில் வாஷின் மெஷின் வாங்கியிருப்பதே அந்தக் கிசுகிசு. சான்ஸே இல்லை; சேல்ஸ் எப்படியும் ஒரு லட்சம் கூடி விடும் என்று எங்கள் பத்திரிகை அலுவலகமே எதிர்பார்த்தது. 'விகடனுக்கு வச்சோம் பாரு ஆப்பு' என்று நாக்கைச் சப்புக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தோம்.

சே... இலக்கியமே தெரியாத அசட்டுக் கூட்டம். இவ்வளவு பெரிய ரகளையான கிசுகிசு போட்டும் விற்பனை அதிகரிக்கவில்லை. அது மட்டும் அல்ல. 50 ஆயிரம் பிரதி சறுக்கியது.

இருந்தாலும் குமுதம் அலுவலகத்தில் யாரும் சளைக்கவில்லை. மனுஷ்ய புத்திரன் ஐ பாட் வாங்கியிருக்கிறார் என்ற படு பயங்கரமான கிசுகிசுவை வெளியிட்டோம். ம்ஹூம். மனுஷ்ய புத்திரனும் வேஸ்ட்.

குமுதம் நிருபர்களுக்குக் கொஞ்சம் குழப்பமாகிவிட்டது. என்னடா இது தமிழனுக்கு வந்த கேடு... நடிகையின் ப்ரா விலகிய போட்டோவை யும் பார்க்க மாட்டேன் என்கிறான். இலக்கியவாதி பற்றி சூப்பர் கிசுகிசு போட்டாலும் படிக்க மாட்டேன் என்கிறான். இவனுக்கு வேறு என்னதான் வேண்டும்?

இப்படியெல்லாம் யோசித்த குமுதம் நிர்வாகம் கடைசியில் கண்டு பிடித்த ஆயுதம்தான் சாரு நிவேதிதா சாருவைப் பற்றி எதைப் போட்டாலும் படிக்கிறான்; சாருவையே வாரா வாரம் போடு.

இதன் காரணமாகத்தான் வாராவாரம் அடியேனைப் பற்றிய பல அவதூறு செய்திகள் குமுதத்தில் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. சென்ற வாரம், நான் சினிமாவுக்குக் கதை வசனம் எழுத அலைகிறேன் என்று எழுதியிருந்தார்கள்.

டேய், துணுக்குத் தம்பி. எனக்கும் சில ஆசைகள் இருக்கின்றன. அது சினிமாவுக்கு வசனம் எழுதுவதோ, கலைமாமணி விருது வாங்குவதோ அல்ல. ஸ்டாக்ஹோம் நகரில் சர்வதேசத் தரத்தில் எழுதுபவர்களுக்கு ஒரு இலக்கியப் பரிசு தருகிறார்கள். அந்தப் பரிசைத் தொடுவதே என்னுடைய இலக்கு. நடிகையின் ப்ரா விலகுவது பற்றிய அசைன் மெண்டில் இருக்கும் உனக்கு அந்த சமாச்சாரமெல்லாம் வேண்டாம். நீ காய் தெரிகிறதா, முள் தெரிகிறதா என்பதில் கவனமாக இரு. எவ்வளவு கவனமாக இருக்கிறாயோ அந்த அளவுக்கு உனக்கு இங்க்ரிமெண்ட் உண்டு.

சரி, விஷயத்துக்கு வருகிறேன். இளையராஜா பற்றி விமர்சனம் செய்து விட்டதால் நிருபர் தம்பிக்குக் கோபம் போல. ஏன் தம்பி, நான் ஒரு ஜோக்கர் என்று தெரிந்தால் பொத்திக்கொண்டு போக வேண்டியது தானே? வீணாக எதற்கு இவ்வளவு பிரயாசை எடுத்து அரசு கேள்வி பதிலில் சேர்த்திருக்கிறாய்?

நான் ஜோக்கரா இல்லையா என்பதைக் காலம் தீர்மானிக்கட்டும். 'பா' என்ற இந்திப் படத்துக்கு உன் இளையராஜா எப்படி பாட்டுப் போட்டிருக்கிறார் என்பதை தயவுசெய்து இசை தெரிந்தவர்களிடம் கேட்டுப் பார். வட இந்திய சினிமாவில் இப்படி ஒரு நகைச்சுவையைக் கேள்விகூடப் பட்டது கிடையாது என்று சிரிக்கிறார்கள். இளைய ராஜாவை *பா* படத்தின் காரணமாக அங்கே எல்லோரும் ஜோக்க ராகவே பார்க்கிறார்கள் இல்லை என்று யாராவது நிரூபித்தால் நான் எழுதுவதையே நிறுத்திக்கொள்கிறேன்.

இளையராஜாவை விமர்சித்தால் ஜோக்கரா? அப்படியானால் இளையராஜாவின் திருவாசகத்தை கிழி கிழி என்று கிழித்து எழுதி யிருந்தாரே ஞாநி, அவர் ஜோக்கரா?

நிருபர் தம்பி, உனக்கு சாரு நிவேதிதா என்றால் யார் என்று தெரிந்து கொள்ள வேண்டுமா? கேரளாவில் உனக்குத் தெரிந்த யாருக்காவது போன் போட்டு சாரு நிவேதிதா என்றால் யார் என்று கேள். அப்போது தெரியும்.

அஞ்ஞானியின் அராஜகம்

பொதுவாக நான் வெளியிடங்களுக்கோ, விழாக்களுக்கோ செல்ல விரும்புவதில்லை. காரணம், அங்கே நடக்கும் சில சம்பவங்கள் பல தினங்களுக்கு என் உறக்கத்தைக் கெடுத்து விடுவதாக இருக்கின்றன. உதாரணமாக, பொன். வாசுதேவனின் *அகநாழிகை* பத்திரிகை மற்றும் பதிப்பகத்தின் சார்பாக நான்கு புத்தகங்கள் கே.கே.நகரில் (இந்தப் பெயரைக் குறித்துக் கொள்ளுங்கள்; இதில் ஒரு பிரச்சினை இருக்கிறது) உள்ள ஒரு புத்தக நிலையத்தில் வெளியிடப்பட்டன. அந்த நான்கு புத்தகங்களில் நர்சிம்மின் சிறுகதைத் தொகுப்பும் ஒன்று என்பதால் அதற்குச் சென்றிருந்தேன் அதில் என்னைப் பேசவும் சொன்னார்கள் என்பதால் பேசினேன்.

அப்போது நான் ஒரு தவறு செய்துவிட்டேன். பொதுவாகவே நான் ஒவ்வொரு நாள் காலை எழுந்து கொள்ளும் போதும் 'ஜெயமோகன், கமல்ஹாசன், மனுஷ்ய புத்திரன் ஆகிய மூவரைப் பற்றியும் இன்றைய தினம் எழுதக் கூடாது' என்று நினைத்துக்கொள்வேன். அதேபோல் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஞானியின்

கருத்து எதையும் மறுத்து எழுதிவிடக்கூடாது என்ற தீர்மானமும் நிரந்தரமாக எனக்கு உண்டு. காரணம், அவர் எதைச் சொன்னாலும் அதற்கு எதிரான கருத்தையே கொண்டிருப்பவனாக இருக்கிறேன் நான்.

சமீபத்திய உதாரணம், கடற்கரையில் யாரும் கிரிக்கெட் ஆடக்கூடாது என்று போலீஸ் உத்தரவு போட்டது. உடனே ஞாநி போலீஸின் உத்தரவை எதிர்த்து எழுதினார். கடற்கரையில் கிரிக்கெட் விளையாடுவது இளைஞர்களின் பிறப்பு உரிமை என்பது ஞாநியின் கருத்து. நானோ கடற்கரையில் வாக்கிங் செல்லும் போது அந்தக் கிரிக்கெட் பந்தால் பலமுறை அடி வாங்கியிருக்கிறேன். அதனால் இப்போதெல்லாம் காலை நேரத்தில் அந்தப் பக்கமே செல்வதில்லை. ஒருநாள் நானும் அவந்திகாவும் கடற்கரையில் அமர்ந்திருந்தபோது வாலிபால் பந்து ஒன்று. அவந்திகாவின் முதுகில் பலமாக விழுந்து எங்களை அதிர்ச்சி அடையச் செய்தது. பார்த்தால் கொஞ்ச தூரத்தில் ஒரு இளைஞர் கூட்டம் வாலிபால் ஆடிக் கொண்டிருந்தது.

ஆனால் இப்படியெல்லாம் அடி வாங்கி சாகிறவர்கள் சாகட்டும்; இளைஞர்கள் கடற்கரையில் கிரிக்கெட் ஆட வேண்டும் என்பது ஞாநியின் கட்சி.

இப்படியே ஞாநியின் ஒவ்வொரு கருத்தையும் மறுத்துக்கொண்டிருந்தால் ஒவ்வொரு வாரம் குமுதம் வந்ததும் நான் ஞாநியின் ஓ பக்கங்களுக்கு பதிலாக ஔவ் பக்கங்கள் என்று எழுத வேண்டியிருக்கும் என்பதாலேயே ஞாநியின் பக்கமே திரும்பக் கூடாது என்று இருந்தேன். மேலும், என் பார்வையில் ஞாநி ஒரு கலாச்சார தாலிபான். நானோ ஒரு ஹிப்பி. எப்படி ஒத்து வரும்?

அகநாழிகை கூட்டத்தில் ஆரம்பத்திலேயே எனக்கு ஞாநியின் தாலிபான் நடவடிக்கைகளால் பிரச்சினை ஏற்பட்டது. ஒரு நண்பர் எங்கள் எல்லோருக்கும் பூச்செண்டு கொடுத்தார் உடனே எழுந்த ஞாநி பூச்செண்டுகளால் என்ன பயன்; இது எவ்வளவு அர்த்தமற்ற காரியம் என்றெல்லாம் லெக்சர் அடித்து விட்டு, தனக்குக் கொடுக்கப்பட்ட பூச்செண்டை ஒரு பெண்மணியிடம் கொடுத்து 'இதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்; உங்களுக்குப் பயன்படும்' என்றார்

(இதிலுள்ள நிலப்பிரபுத்துவ மனோபாவத்தைக் கவனியுங்கள். பூ என்றால் பெண்ணுக்குரியதாம்! அட, பொக்கேயைக் கொண்டு போய் தலையிலா வைப்பார்கள்?)

இதுதான் ஞாநியின் பிரச்சினை. தனக்குப் பூச்செண்டு பிடிக்காததால் அது எல்லோருக்கும் பிடிக்கக்கூடாது என்று நினைக்கிறார். அப்படிப் பிடித்தால் அவர்கள் முட்டாள்கள், மூடர்கள், அர்த்தமற்ற காரியங்களில் ஈடுபடுபவர்கள் என்ன ஒரு தர்க்கம் பாருங்கள்! ஞாநி கேட்டார், 'பூச்செண்டுக்கு பதிலாகப் புத்தகங்களைக் கொடுத்திருக்கலாமே?' என்று. 24 மணி நேரமும் மனிதர்கள் தர்க்கத்திலேயே

வாழ்ந்துகொண்டிருக்க முடியுமா என்ன?

எனக்குப் பூச்செண்டுகள் பிடிக்கும். ஆனால் ஞாநிக்குப் பிடிக்காது என்பதால் யாரும் யாருக்கும் பூச்செண்டு கொடுக்கக் கூடாது. இதே சர்வாதிகார மனப்போக்கைத்தான் அவர் எப்போதுமே எல்லா விஷயத்திலுமே கடைப்பிடித்து வருகிறார்

ஞாநியைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு மகாத்மா காந்தியின் ஞாபகமே வரும். காந்தி வாழ்ந்த போது நான் பிறக்கவில்லை; அட்லீஸ்ட் ஞாநியையாவது பார்க்கக் கொடுத்து வைத்திருக்கிறதே என்று தோன்றும். முதலில் ஞாநிக்கும் காந்திக்கும் உள்ள பட்டப் பெயர், புனைப்பெயர் ஒற்றுமையைக் கவனியுங்களேன். காந்திக்கு மகாத்மா, சங்கரனுக்கு ஞாநி. காந்திக்கு மக்கள் கொடுத்த பட்டம் மகாத்மா. சங்கரனுக்கு ஞாநி என்ற புனைப்பெயர் அவரே வைத்துக்கொண்டது.

பெயர் மட்டுமல்ல; இன்னும் பல பொருத்தங்களும் உள்ளன. காந்தி வெறும் லங்கோடும், இடையில் ஒரு துணியும் மட்டுமே அணிந்திருந் தார். ஞாநியும் அவ்வாறே எளிமையின் சிகரமாக விளங்குபவர். லுங்கிதான் கட்டுவார். அது மட்டுமல்ல. தான் லுங்கி கட்டிக்கொண்டு கமலா தியேட்டருக்குப் போனதை குமுதத்தில் எழுதி 50 லட்சம் வாசகர்களுக்கும் அந்தச் செய்தியைத் தெரிவித்தார். ஞாநி மட்டும் இந்த நாட்டின் சர்வாதிகாரியாக இருந்தால் நமது தேசிய உடையே லுங்கிதான் என்று சட்டம் போட்டாலும் போட்டிருப்பார் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

இந்த எளிமை மேட்டரால் ஆகர்ஷிக்கப்பட்ட நானும் என்னால் முடிந்த ஒரு எளிமையைப் பின்பற்றி ஒருநாள் ஜட்டியே போடாமல் பேண்ட் போட்டுக் கொண்டு என் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் ஐநாக்ஸ் தியேட்டருக்குச் சென்றேன். எனக்கும் குமுதத்தில் வாய்ப்பு கிடைத்திருந்தால் இந்த உடைக் கட்டுப்பாட்டு நடவடிக்கையால் எனக்கு நேர்ந்த விளைவுகள் பற்றி எழுதியிருக்கலாம்; ஞாநியின் லுங்கிக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் என் ஜட்டிக்குக் கிடைக்கவில்லை. விடுங்கள்.

இன்னும் பல ஒற்றுமைகள் உள்ளன. ஞாநி அஞ்சு ரூபாய் கூட லஞ்சம் கொடுக்க மாட்டார் தன் வீட்டையும் யாராவது தலித்துக்கோ முஸ்லிமுக்கோ அல்லது இதுபோன்ற விளிம்பு நிலை மக்களுக்கோதான் விற்பார் இப்படி பல் துலக்குவதிலிருந்து லுங்கி கட்டுவது வரை நேர்மையை மட்டுமே கடைப்பிடிப்பார்.

இப்படிப்பட்ட மகாத்மாக்களும் ஞாநிகளும் எனக்கு அலர்ஜி என் பதாலேயே ஞாநி என்றால் கொஞ்சம் ஒதுங்கிவிடும் வழக்கம் உள்ள வனாக இருந்தேன். அப்படி இருந்தும் கே.கே.நகரில் மாட்டிக்கொண் டேன். ஞாநி சொன்னார், கே.கே.நகர் என்று சொல்வது தப்பு; அது எப்படி பெயர்களைச் சுருக்கலாம்? கலைஞர் கருணாநிதி நகர் என்றே சொல்ல வேண்டும்.

அவருக்குப் பிறகு பேச எழுந்த நான் சொன்னேன்: “இந்த அரசியல் வாதிகளெல்லாம் தமக்குத் தாமே ஆளாளுக்கு அறிஞர், கலைஞர், புரட்சித் தலைவி என்று பட்டம் கொடுத்துக் கொள்வார்கள் அதை மக்களாகிய நாம் ஏற்றுக்கொண்டு, கூட்டம் வழியும் பஸ்ஸில் தொங்கியபடியே ‘கலைஞர் கருணாநிதி நகருக்கு ஒரு டிக்கட் குடுங்க’ என்று கேட்க வேண்டுமா? அரசியல்வாதிகள் நம்மீது ஏறி சவாரி செய்யும்போது மக்கள் இப்படித்தான் ‘கலைஞர் கருணாநிதி நகர்’ என்ற பெயரை ‘கே.கே. நகர்’ என்று சுருக்கிப் பழிவாங்குவார்கள்.”

உடனே இதற்கு பதில் சொல்ல எழுந்த ஞாநி “பெயரையெல்லாம் சுருக்கக் கூடாது. உதாரணமாக, சாரு நிவேதிதாவை சாநி என்று சுருக்கலாமா?” என்று கேட்டார். அவருடைய பதிலில் மொத்தம் ஆறு தடவை சாநி சாநி என்று குறிப்பிட்டு மகிழ்ந்தார் ஞாநி. என்ன ஒரு வக்கிரம் பாருங்கள்! நான் செய்தது ஒரு பகடி. அதற்கு பதில் குண் டாந்தடியை எடுத்து மண்டையில் ஒரு போடு. கேட்டால் ‘அப்படிச் சொல்லலாமா?’ என்றுதானே கேட்டேன் என்பார். அப்படியானால் ஒருத்தன் இன்னொருத்தனைப் பார்த்து ‘உன்னை நான் ங்கோத்தா என்று சொல்லவில்லை’ என்றால் ஆயிற்றா?

இப்படி ஒருமுறை பட்டும் புத்தி வராமல், எஸ்.ராமகிருஷ்ணனின் புத்தக வெளியீட்டு நிகழ்ச்சியில் ஞாநி பேசுகிறார் என்று தெரிந்தும் அந்த விழாவுக்குச் சென்றேன். அப்போதுதான் ஞாநி அந்த அராஜக மான காரியத்தைச் செய்தார். தனக்கும் ராமகிருஷ்ணனுக்கும், தனக்கும் மனுஷ்ய புத்திரனுக்கும் கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள் இருந்தாலும், தான் உயிர்மை நடத்தும் ராமகிருஷ்ணனின் புத்தக வெளியீட்டு நிகழ்ச்சிக்கு வந்தது பற்றிக் குறிப்பிட்டவர் தனக்கு மனுஷ்ய புத்திரனின் மேல் மிகுந்த மரியாதை உண்டு என்று சொல்லி அதற்கு ஒரு உதாரணம் கூறினார்

ஒரு வாரத்திற்கு முன்பு உடல் ஊனமுற்றோரின் நிகழ்ச்சி ஒன்றுக்கு விருந்தினராக அழைக்கப்பட்டாராம் (ஞாநியின் வார்த்தைகளிலேயே தருகிறேன்). அவருக்கு முன்னே அமர்ந்திருந்த 300 பேருமே ஏதோ ஒருவிதத்தில் உடல் ஊனமுற்றோர். அவர்கள் எல்லோருமே மாதம் 2000 ரூ. கிடைத்தால் போதும் என்ற நிலையில் இருப்பவர்கள் ‘லாடடரி சீட்டு விற்றுக் கூட பிழைத்துக் கொள்வோம்; அதற்கான ஒரு அடிப்படைப் பண உதவி தேவை’ என்பதே அவர்களுடைய வேண்டுகோளும் கோரிக்கையுமாக இருந்தது. நான் (ஞாநி) அவர்களிடம் சொன்னேன். ‘நீங்களெல்லாம் மனுஷ்ய புத்திரனை ரோல் மாடலாகக் கொள்ள வேண்டும். அவர் கல்வி என்ற ஒரு விஷயத்தைக் கையில் எடுத்தார். இன்று தமிழர்கள் எல்லோருக்கும் தெரிந்த பதிப்பாளராக இருக்கிறார். அதே போல் நீங்களும் கல்வியைக் கற்று முன்னேறுங்கள் என்று அந்த ஊனமுற்றவர்களிடம் மனுஷ்ய புத்திரனை உதாரணம் காட்டிச் சொன்னேன். அந்த அளவுக்கு நான் (ஞாநி) மனுஷ்ய புத்திரனை மதிக்கிறேன். அவர் மட்டும் கல்வியைத் தன் கையில் எடுக்காமல்

இருந்திருந்தால் அவரும் லாட்டரிச் சீட்டு தானே விற்றுக் கொண்டு இருந்திருப்பார்?'

ஞாநியின் வார்த்தைகளை அப்படியே மேற்கோள் காட்டியிருக்கிறேன்.

சாரு நிவேதிதாவாகிய நான் சுரணையற்றுப் போய் விட்டேன். மானம் கெட்டுப் போய்விட்டேன். இல்லாவிட்டால் இப்படிப்பட்ட அருவருப் பான, ஆபாசமான, அயோக்கியத்தனமான வசையை ஒரு ஆள் மனுஷ்ய புத்திரனின் மீது வீசும் போது கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருந்திருக்க மாட்டேன். தமிழ்ச் சமூகத்தைப் போலவே நானும் மானம் கெட்டுப் போய் விட்டேன்.

அமெரிக்காவில் இருப்பவர்கள் தயவுசெய்து சொல்லுங்கள். உங்கள் ஊரில் ஒரு கறுப்பின மனிதனை நீக்ரோ என்று அழைத்தால் எத்தனை ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைக்கும்? அத்தனை ஆண்டுகள் ஞாநியை சிறையில் அடைக்க வேண்டும். ஏனென்றால் அவர் மனுஷ்ய புத்திரனின் தேக அடையாளத்தைப் பற்றிக் குறிப்பிட்டு விட்டார். அது மட்டுமல்ல; கல்வி இல்லாவிட்டால் அவர் தெருவில் லாட்டரிச் சீட்டு விற்றுக்கொண்டிருந்திருப்பார் என்று சொல்லிவிட்டார். ஒரு தலித்தை அந்த சாதியைச் சொல்லித் திட்டும் ஒரு வார்த்தையால் குறிப்பிட்டால் எத்தனை ஆண்டுகள் சிறைத் தண்டனையோ அத்தனை ஆண்டுகள் ஞாநியை சிறையில் தள்ள வேண்டும்.

நான் கேட்கிறேன்; *சொல் புதிது* பத்திரிகையில் ஜெயமோகன் மனுஷ்ய புத்திரனைப் பற்றி எழுதிய வசைக்கும் இதற்கும் என்ன வித்தியாசம்? தமிழின் மிக முக்கியமான கவிஞனாகிய மனுஷ்ய புத்திரனின் ஒட்டு மொத்த அடையாளமே அவருடைய உடல்தானா? அவர் தன்னுடைய எழுத்தின் வழியே உருவாக்கியவை எல்லாம் அவருடைய உடலை மீறிச் செல்லும் ஒரு முயற்சி மட்டும்தானா? அல்லது உடல் ரீதியான ஒரு தடையை, பிரச்சினையை ஒருவர் கல்வி கற்பதன் வழியாகக் கடந்து சென்றுவிடத்தான் முடியுமா?

உடல்ரீதியான பிரச்சினை கொண்டவர்களின் துன்பங்கள் என்பது நம்முடைய நாட்டில் முழுக்க முழுக்க சமூகரீதியானவை. மொத்த அமைப்பும் அவர்களுக்கு எதிரானதாக இருக்கிறது. அரசுப் பணிகளில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடஒதுக்கீட்டிற்கான இடங்கள் கூட நிரப்பப்படுவதில்லை என்பதுதான் உண்மை. இதற்காக அவர்கள் தெருவில் இறங்கிப் போராடி வருகிறார்கள். நம்முடைய வீடுகள், பொது இடங்கள், போக்குவரத்து அமைப்புகள் யாவும் அவர்களுக்கு எதிராக இருக்கின்றன. எல்லாவற்றையும்விட மாற்றுத்திறன் கொண்ட வர்களைப் பற்றிய சமூக மனோபாவம். ஒரு தலித் இந்த சமூகத்தில் எவ்வளவு பெரிய ஸ்தானத்தை அடைந்தாலும் அவருடைய சாதிய இழிவிலிருந்து எப்படி விடுபட முடியவில்லையோ அதேபோல் மாற்றுத்திறன் கொண்ட ஒருவர் எத்தகைய சாதனைகளைச் செய் தாலும் அவர் ஒரு குறைவுபட்ட மனிதராகத்தான் பார்க்கப்படுகிறார்.

அவர் பிற குறைவுபட்ட மனிதர்களுக்கு மட்டுமே ஒரு முன்னுதாரணம். இத்தகைய பார்வை கொண்டவர்களுக்கு ஞாநி ஒரு சிறந்த உதாரணம். ஞாநி மனுஷ்ய புத்திரனிடம் காட்டும் மனோபாவம் என்பது அவரது சாதிய மனோபவத்தின் ஒரு நீட்சியே. அவர்களால் மனிதர்களை வேறு எப்படியும் பார்க்கவோ வகைப்படுத்தவோ முடியாது. வேண்டுமானால் யாராவது ஒரு பிராமணர் சங்கக் கூட்டத்தில் போய் 'சங்கரன்தான் நீங்கள் பின்பற்ற வேண்டிய முன்னுதாரணம். உங்களுடைய சாதித் திமிரை எந்தவிதத்திலும் விட்டுக் கொடுக்காமல், அதே சமயம் ஒரு போலி ஜனநாயக, போலி முற்போக்கு முகமூடியையும் அணிந்துகொண்டு வெற்றிகரமாக உலா வரவேண்டுமானால் நீங்கள் ஞாநியைப் பின் பற்றுங்கள்' என்று உரையாற்றலாம்.

மனுஷ்ய புத்திரன் ஒரு முன்னுதாரணமே அல்ல என்பதுதான் இதில் வேடிக்கை. அவருடைய முதல் கவிதைத் தொகுப்பை அவர் எழுதிய போது அவர் 5ஆம் வகுப்பு ஸ்கூல் drop out. அவர் எம்.ஏ. ஜர்னலிசம் படித்தபோது அவரது மூன்று கவிதைத் தொகுப்புகள் வெளிவந்திருந்தன. காலச்சுவடின் ஆசிரியர் குழுவில் பணியாற்றிக்கொண்டிருந்தார் என்னய்யா சம்பந்தம் அவர் கல்விக்கும் இலக்கியத்துக்கும்? அவரது தனிப்பட்ட வாழ்வில் அவர் எவ்வளவோ பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட்டவர். மாற்றுத் திறன்கொண்ட ஒருவர் தனிப்பட்ட வாழ்விலோ சமூகரீதியாகவோ பொருளாதார ரீதியாகவோ அடையக் கூடிய பிரச்சினைகள் பெரும்பாலானவற்றை அவர் சந்தித்ததே இல்லை என்பதை அவருடனான நேர்ப் பேச்சுகளில் அறிந்திருக்கிறேன். ஆனால் ஞாநியைப் பொறுத்தவரை மாற்றுத்திறன் கொண்ட அனைவரும் 2 ஆயிரம் ரூபாய்க்கு லாட்டரிச்சீட்டு விற்கும் ஒரு கும்பல். இப்படி மனிதர்களைக் கும்பலாகப் பார்க்கும் மனோபாவம் சாதித் திமிருக்கு மட்டுமே உண்டு. எம்.எஸ்.உதயமூர்த்தி, அப்துல் கலாம் வகை மிடில் கிளாஸ் வாழ்க்கை முன்னேற்றப் புனைகதைகளை ஒரு இலக்கியக் கூட்டத்தில் ஞாநியைப் போன்ற ஒரு பாமரன் வந்து உளறினால் நாமும் அதைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

ஜெயமோகன் மனுஷ்ய புத்திரனை வெறுக்கிறார். ஞாநி மனுஷ்ய புத்திரனை வெறுக்கிறார். இன்னும் எனக்குத் தெரியாத பலர் இருக்கக் கூடும். அவர்கள் ஒரே ஆயுதத்தைத்தான் கையில் எடுக்கிறார்கள். அவரை உடல்ரீதியாகத் தாக்குவது. ஒரு கலைஞனாக அவர் அடைந்த சாதனைகளை அவரது உடலின் வழியாகவே மதிப்பிடுவதன் மூலம் அவருடைய இடத்தைக் கீழிறக்குவது. நான் மனுஷ்ய புத்திரனுக்காகப் பேசவேண்டும் என்று எந்த அவசியமும் இல்லை. ஆனால் உடல் ரீதியான அதிகாரம்,மேல்நிலை நோக்கு, வன்முறை ஆகியவை குறித்தே நான் இங்கே விவாதிக்க விரும்புகிறேன்.

அடுத்து, அவர் ராமகிருஷ்ணனையும் விடவில்லை. 'இவர் கட்டுரைகள் எழுதுவதை நிறுத்திவிட்டு புனைகதைகள் எழுத வேண்டும்' என்ற புத்திமதியையே அரை மணி நேரம் மாற்றி மாற்றி வெவ்வேறு வார்த்தை

களில் சொன்னார் ஞாநி. ராமகிருஷ்ணன் தொடர்ந்து சிறுகதைகளையும், நாவல்களையும் எழுதிக்கொண்டே இருக்கிறார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு *யாமம்* நாவல். சென்ற ஆண்டு *பதினெட்டாம் நூற்றாண்டின் மழை* என்ற சிறுகதைத் தொகுப்பு. இந்த ஆண்டு 50 குறுங்கதைகள். இதெல்லாம் பற்றி எதுவுமே தெரிந்துகொள்ளாமல் 'நீங்கள் கட்டுரை எழுதாமல் கதை எழுதுங்கள்' என்று என்ன புத்திமதி? கதைகளை எழுதிக் குவித்துக்கொண்டிருக்கும் ஒருவரிடம் வந்து 'நீ கதை எழுது' என்று சொல்ல எவ்வளவு திமிரும், ஆணவமும், தடித்தனமும் இருக்க வேண்டும்? அதுவும் ஞாநியைப் போன்ற தோல்வியடைந்த, இலக்கிய வாசகர்களால் துரத்தியடிக்கப்பட்ட ஒரு அரைவேக்காட்டு எழுத்தாளன் தமிழின் முதன்மையான படைப்பாளிகளில் ஒருவரைப் பார்த்து இந்தப் புத்திமதிகளை அள்ளி விடுகிறார்.

ஒரு எழுத்தாளனிடம் வந்து இப்படி புத்திமதியும் அறிவுரையும் சொல்ல ஞாநிக்கு என்ன தகுதி இருக்கிறது? ஒரே தகுதிதான். அவர் தன்னை உண்மையிலேயே ஞாநியாகவும், மற்றவர்களை அஞ்ஞாநிகளாகவும் நினைத்துக்கொண்டிருக்கிறார். அதனால்தான் எல்லோருக்கும் எப்போதும் புத்திமதிகளையும், அறிவுரைகளையும் வாரி வாரி வழங்கிக்கொண்டிருக்கிறார். ஒருமுறை தமிழக முதல்வர் கருணாநிதியை ஓய்வு எடுத்துக்கொள்ளச் சொல்லி அறிவுரை வழங்கினார் ஞாநி. அதற்கு அவர் சொன்ன காரணம், கருணாநிதியின் வேட்டியில் மூத்திரக் கறை படிகிறது; அவருக்கு வயதாகிவிட்டது.

அது ஏன் ஐயா எல்லோரையும் பார்த்து எழுதாதே, வேலை செய்யாதே, வீட்டுக்குப் போ என்றே எப்போதும் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்?

இப்போது ஞாநிக்கு என் வயதுதான். 55. ஆனால் மைக்கின் முன்னால் பேச முடியாமல் திணறிக்கொண்டே இருக்கிறார். பார்த்தால் ரத்தக் கண்ணீர் வருகிறது. 95 வயது கிழவர் பேசுவதுபோல் அப்படிக் கமறிக் கமறிப் பேசுகிறார். ஏன், இவர் ஓய்வு எடுத்துக் கொண்டு மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழலாமே? *குமுதம்* பத்தியிலும் வாராவாரம் கருணாநிதியைத் திட்டுவதே இவருக்குப் பிழைப்பாக இருக்கிறது. ஆக, வேறு எந்த சப்ஜெக்டும் இவருக்குக் கிடைப்பதில்லை. அப்படியானால் எழுதுவதை நிறுத்திவிட்டு ஞாநி ஓய்வெடுக்கப் போகலாமே?

14.12.2009

தனிமையும் கொண்டாட்டமும்

அடியேனின் புத்தம் புதிய சிறுகதை ஒன்று *டெஹல்கா* சிறப்பிதழில் வெளியாகிறது. குறிப் பிட்ட *டெஹல்கா* இதழ் ஜனவரி முதல் தேதி கடைகளில் கிடைக்கும். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு எழுதிய சிறுகதை. கொஞ்சம் காதல், ஒரே ஒரு வாக்கியத்தில் மட்டும் செக்ஸ், போரின் அவலங்கள் எல்லாம் கதையில் உண்டு. நான் – லீனியர் பாணியில் எழுதிய சிறுகதை. வாங்கிப் படியுங்கள். காப்பிரைட் பிரச்சினைகளால் கதையை நமது இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய இயலாது.

2. டிசம்பர் 18 என்னுடைய பிறந்த நாள். எப் போதும் அந்த நாளில் கோவிலுக்குப் போவேன். ஆனால் இப்போது எப்போதும் கோவிலுக்குச் செல்லும் ஆளாக மாறிவிட்டதால் 18ஆம் தேதி ஏதாவது ஒரு பாருக்குச் செல்லலாம் என்று திட்டமிட்டிருக்கிறேன். தயவுசெய்து என் தொலை பேசி எண்ணுக்கு யாரும் பிறந்த நாள் வாழ்த்தை குறுஞ்செய்தியாக அனுப்ப வேண்டாம். ஏனென் றால், தீபாவளி அன்று முழுநாளும் வெறும் ஓட்ஸ் கஞ்சியை மட்டுமே குடித்தபடி பட்டினியாய்க் கிடந்தேன். அவந்திகா அந்தச் சமயத்தில் ஒரு

இரண்டு வாரகாலம் ஆசிரம வேலையில் மூழ்கியிருந்தாள். வீட்டில் நான் மட்டும் ஸோரோ, பப்புவோடு மாட்டிக்கொண்டேன். சமைக்க மனம் இல்லை. சமைத்துக் கொடுக்க ஆள் இல்லை. வெளியே எந்த உணவு விடுதியும் இல்லை. 150 நண்பர்கள் தீபாவளி வாழ்த்தை குறுஞ்செய்தியாக அனுப்பியிருந்தார்கள். ஆனால் ஒருத்தருக்குக் கூட வடை, முறுக்கு, அதிரசம், பொருளங்காய் உருண்டை என்று தீபாவளி பட்சணம் அனுப்பத் தோன்றவில்லை. பிறகு நானாகவே லஜ்ஜையை விட்டு ஹமீதிடம் கேட்டேன். மட்டன் பிரியாணி அனுப்பி வைக்கட்டுமா என்று கேட்டார். எனக்கு மட்டன் பிரியாணி பிடிக்கும் என்றாலும் அன்றைய தினம் முறுக்கு, அதிரசம், சுழியம் போன்ற தீபாவளிக்கே உரிய பிரத்தியேகமான பட்சணங்களையே சாப்பிட விரும்பினேன். ஆனால் மதியமும் ஓட்ஸ் கஞ்சியையே குடித்தபோது மட்டன் பிரியாணியையாவது அனுப்பச் சொல்லியிருக்கலாமே என்று தோன்றியது.

ஸீரோ டிகிரியில் சொற்களைப் பற்றிய ஒரு கவிதை உண்டு. பசிக்கு சொற்களைத் தின்ன முடியுமா? காமத்தை சொற்களால் தீர்க்க முடியுமா? தனிமையை சொற்களால் கடந்து போக முடியுமா?

டிசம்பர் 12–ஆம் தேதி புத்தக வெளியீட்டு விழா முடிந்த பின், ஒரு ஓட்டலில் மதுபான விருந்து. ஐம்பது பேர் இருந்தார்கள். எல்லோருமே என்னுடைய நெருங்கிய நண்பர்கள். ஆனால் நான் மட்டும் ஒரு இடத்தில் தனியாக அமர்ந்து குடித்துக்கொண்டிருந்தேன். எனக்குப் பிரியமான ஃப்ரெஞ்ச் ஒய்ன் வரவில்லை. ரிவேரா ஒய்னும் இல்லை. வேறு ஏதோ ஒரு மட்டமான ஒய்ன் என்பதால் பிராந்தி குடித்தேன். எந்த இடம் திரும்பினாலும் ஐந்தாறு பேர் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து நின்று, அமர்ந்து, பேசிக்கொண்டு, சிரித்துக் கொண்டு குடித்துக் கொண்டிருந்தார்கள். நான் மட்டும் தனியாக அமர்ந்திருந்தேன். அந்த 50 பேரில் என்னோடு பேச ஒரு ஆள்கூட இல்லை. நானாக எழுந்து போய் 'என்னோடு பேச ஆள் இல்லை; யாராவது வாருங்கள்' என்று அழைக்கவா முடியும்? நர்சிம் பேசியிருப்பார் ஆனால் அவர் எல்லோரையும் உபசரித்துக்கொண்டிருந்தார்

நீண்ட நேரம் தனியாகவே அமர்ந்திருந்தேன். பிறகுதான் ஷாஜியும், எஸ்.ராமகிருஷ்ணனும் வந்தார்கள். எஸ்.ரா. எனக்கு எதிரே அமர்ந்து அப்பளத்தை சாப்பிட்டபடி என்னோடு பேசத் துவங்கினார் (அவர் குடிக்க மாட்டார் என்பதால் அப்பளம்). பிறகு சிறிது நேரத்தில் அவரோடும் பேசுவதற்கு ஒரு குழு வந்துவிட்டது. ஷாஜி கொஞ்சம் என்னைக் காப்பாற்றினார்.

தமிழகமே கொண்டாடிய ஒரு நடிகை, தான் மிக மிகத் தனிமையை உணர்வதாக ரொம்ப வருஷங்களுக்கு முன் கூறியது ஞாபகம் வந்தது.

15.12.2009

இளைய தலைமுறையும் அடியேனும்

என்னுடைய எழுத்தைத் தொடர்ந்து வாசித்து வருபவர்களுக்குத் தெரியும், இளைய தலைமுறை என் எழுத்தை எப்படிக் கொண்டாடுகிறது என்று. ஆண் பெண் வித்தியாசம் இல்லாமல் இந்தக் கொண்டாட்டமான வாசிப்பு நடந்து கொண் டிருப்பதை அறிவேன். ஏதோ காரணத்தால் பெண் வாசகர்கள் என்னைத் தொடர்பு கொள்வ தில்லையே தவிர அவர்கள் வாசிக்கிறார்கள் என்பது தெரியும்.

சமீபத்தில் நடந்த உத்தமத் தமிழ் எழுத்தாளரின் பத்து நூல்கள் வெளியீட்டு விழாவுக்கு நானும் செல்ல எண்ணினேன். அன்றைய தினம் கொஞ்சம் ஓய்வாக இருந்ததால் சென்றிருக்கலாம். ஆனால் செல்வதற்கு முன் ஒரு நண்பனைச் சந்தித்துத் தொலைத்துவிட்டேன். அவன் சொன்னான், “ஏன் சாரு உனக்கு வீண் வேலை? நீ போனால் அவன் உன்னைப் பார்த்துவிட்டு ‘தினமலரில் கிசுகிசு எழுதும் சாரு நிவேதிதாவுக்கு இந்த இலக்கியக் கூட்டத்தில் என்ன வேலை? ஓஹோ... இலக்கியம் என்றால் என்ன என்று தெரிந்துகொள்ள வந்திருக் கிறாரோ?’ என்று மேடையில் பேசுவான் நீ

உடனே வந்து மம்மி ரிட்டர்ன்ஸ் பார்ட் 4 என்று 150 பக்கத்துக்குக் கட்டுரை எழுதி எங்கள் உயிரை வாங்குவாய். அதற்குப் பேசாமல் நீ அந்தக் கூட்டத்துக்குப் போகாமல் இருந்து விடு!"

அவன் சொன்னதைக் கேட்ட பிறகு எனக்கும் ஏன் இப்படி ஒரு அனாவசியமான ஆபத்தை விலைக்கு வாங்க வேண்டும் என்று தோன்றியதால் அப்படியே பாதி வழியில் திரும்பி விட்டேன். ஆனாலும் அங்கே என்ன நடக்கிறது என்று உளவறிய விரும்பியதால் இரண்டு நண்பர்களை என் சார்பாக அங்கே அனுப்பி, யார் யார் என்னென்ன பேசுகிறார்கள், எவ்வளவு கூட்டம் வந்தது (அல்பம், அல்பம்) என்பது போன்ற விபரங்களைத் தொகுத்துத் தரும்படி கேட்டுக் கொண்டேன். இரண்டு நண்பர்களுமே "ஒன்னுமே இல்ல சாரு, ஏதோ நடந்தது" என்று ஒரே வாக்கியத்தில் முடித்துவிட்டார்கள். நானும் சுரத்து இல்லாமல் அதை மறந்துவிட்டேன்.

நேற்று அலெக்ஸின் சபையில் நண்பர்களுடன் கச்சேரி. ஏதோ பேச்சு வந்த போது "மூத்த எழுத்தாளர்கள் உத்தமத் தமிழ் எழுத்தாளர், எஸ்.ரா., சாரு. " என்று சொன்னான் அலெக்ஸ். எனக்கு உடனே கோபம் பொங்கியது. ஏற்கனவே அலெக்ஸ் உ.த.எழுத்தாளனுக்கு அநியாயத்துக்கு ஆதரவாக இருக்கிறான் என்று எனக்கு உள்ளுக்குள் குமைச்சல். இப்போது இப்படி வேறு சொன்னதும் கோபத்தைக் கிளறிவிட்டது. "உ.த.எ. வயதிலும் அனுபவத்திலும் என்னை விட பத்து வயது சிறியவன். அவனுக்கு எப்படி நீ மூத்த எழுத்தாளர் என்ற அடைமொழியைத் தரலாம்?" என்று அலெக்ஸிடம் ஒரு கிடுக்கிப் பிடி போட்டேன்.

அப்போது அலெக்ஸ் சொன்னான். "உங்கள் இருவருக்கும் கூடும் கூட்டத்தை வைத்துத்தான் சொல்கிறேன். உன்னுடைய புத்தக வெளியீட்டு விழா ஒரு இலக்கிய நிகழ்ச்சி மாதிரியா இருந்தது? சே... கருமம்.. ஏதோ காலேஜ் ஃபங்ஷன் மாதிரியல்லவா இருந்தது? எல்லாம் ஒரே அராத்து. விசில் கிசில்லாம் அடிச்சுக்கிட்டு. இலக்கியக் கூட்டம்னா எவ்ளோ டீஸண்டா இருக்கும். உ.த.எ.வின் புத்தக வெளியீட்டு விழாவையே எடுத்துக் கொள்ளேன். வந்திருந்தவர் கள் அத்தனை பேருமே ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள். எல்லோ ரும் எவ்வளவு அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள்! கூட்டம்னா அது கூட்டம்."

அலெக்ஸ் அதை ஒரு விமர்சனமாகச் சொன்னாலும் என் காதுகளில் அவன் வார்த்தை தேனாய்ப் பாய்ந்தது. ஏனென்றால், நான் இளைஞர் களோடுதான் பேச விரும்புகிறேன். இங்கே இளமை என்பது வயதில் மட்டும் இல்லை. உ.த.எழுத்தாளனின் 25 வயது வாசகன் கூட 70 வயது ஆள் மாதிரிதான் பேசுவான். என்னைப் பொறுத்தவரை குஷ்வந்த் சிங்கும் எம்.எஃப். ஹுசேனும், ஸல்மான் ருஷ்டியும் இளைஞர்களே.

இந்த நிலையில் வயதாலும் சிந்தனையாலும் இளைஞர்களாக இருப்

பவர்களே அடியேனின் வாசகர்களாக இருப்பதைத் தொடர்ந்து அவதானித்து வருகிறேன். 40 வயதைத் தாண்டியவர்களுடன் என்னால் பேசவே முடியவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது.

இவ்வளவும் எதற்கு எழுதினேன் என்றால், எனக்கு விஜய்குமார் குனிசேரி என்று ஒரு நண்பர் உண்டு. கோவையில் வசிக்கிறார் மலையாளக் கவிஞர். வெடிச்சிரிப்புடன் பேசுவார். தமிழ் நன்றாகத் தெரியும். பேச்சில் சிலேடை விளையாடும். முன்பெல்லாம் அடிக்கடி சந்திப்போம். பிறகு அவர் பாமாவின் நாவலை மலையாளத்தில் மொழிபெயர்க்கும் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டதால் அவர் மீதான என் ஈடுபாடு குறைந்து போனது. ஏழு ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் அவர் வீட்டுக்குச் சென்றபோது அவருடைய மகனை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். ப்ரஜானந்த். அப்போது எட்டாவது படித்துக் கொண்டிருந்தான். தமிழ் பேசத் தெரிந்தது. ராஜேஷ்குமார், இந்திரா சௌந்தரராஜன் போன்றவர்களின் கதைகளைப் படித்து தமிழ் கற்றுக்கொண்டு வருவதாகச் சொன்னான். மற்றபடி என் பெயரைக்கூட அப்போது அவன் கேள்விப்பட்டதில்லை.

சமீபத்தில் ஓரிரண்டு மாதங்களுக்கு முன்பு என்னைத் தொடர்பு கொண்டார் ஒரு இளைஞர் பெயர் ப்ரஜானந்த். என் எழுத்தின் மிகத் தீவிர வாசகர் என்று தெரிந்தது. அவருடைய வலைமனையில் என்னைக் கடவுள் என்று குறிப்பிட்டுள்ளார். அதைப் பார்த்து நீங்கள் யாரும் மிரள வேண்டாம். ஒவ்வொரு வாசகனுக்கும் அவனுக்குப் ப்ரீதியான எழுத்தாளன் கடவுள்தான். எனக்கு ஷேக்ஸ்பியரைப் போல. அவ்வளவு ஏன்? சமீபத்திய நிகழ்ச்சி ஒன்றில் எஸ்.ராமகிருஷ்ணன் குறிப்பிட்டார்; நான் கார்சியா மார்க்கேஸை சந்தித்தால் என்னை ஒரு வாசகனாகவே அறிமுகப்படுத்திக்கொள்வேன் என்று. அதனால் ப்ரஜானந்த் என்னைக் கடவுள் என்று சொல்வது பற்றி யாரும் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை. என் எழுத்தின் மீது அவர் கொண்டிருக்கும் passionதான் முக்கியம். ஆங்கிலத்தில் எழுதும் ப்ரஜானந்தின் வயது இப்போது 21 என்பது இங்கே கவனிக்கத் தக்கது.

இதில் நான் அவதானித்த மற்றொரு விஷயம், விஜய்குமார் குனிசேரிக்கும் எனக்கும் தொடர்பு விட்டுப் போய் ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் அவருடைய 21 வயது மகனான ப்ரஜானந்த் என்னுடைய தீவிரமான வாசகர்.

இப்படி பல லட்சம் வாசகர்களைச் சென்றடைய வேண்டும் என்பது என் ஆசை.

21.12.2009

வாழ்விலே முதல்முறை...

இனிய சாருவிற்கு,

எங்கே தொடங்குவது என்றே தெரியவில்லை... முதல் முதலாக உங்கள் எழுத்தைப் படித்ததைப் பற்றி சொல்வதா? முதல் முதலாக உங்கள் வார்த்தைகளுக்கு மயங்கியதைப் பற்றி சொல்வதா? முதல் முதலாக உங்களை இன்று பார்த்துப் பேசியதைப் பற்றி சொல்வதா? முதல் முதலாக என் பெயரையும் என் வருங்கால மனைவியின் பெயரையும் சேர்த்து எழுதி தாங்கள் கையொப்பம் இட்டதை சொல்வதா? உங்கள் இனிய பேச்சையும் அன்பையும் சொல்வதா? இப்படிப் பல கேள்விகள். ஏன் இவ்வளவு குழப்பம் என நீங்கள் நினைக்கலாம்... உண்மை என்னவென்றால் இதுவே என் வாழ்நாளில் நான் எழுதும் முதல் கடிதம்!!!

ஆம்! காதலிகளுக்குக்கூட கடிதம் எழுதி எனக்குப் பழக்கம் இல்லை... பிடித்ததையும் பிடிக்காததையும் முகத்திற்கு நேராகவே சொல்லிப் பழகி விட்டேன். வீட்டிலேயே தங்கிப் படித்து வளர்ந்ததால் பெற்றோருக்கும் கடிதம் எழுதும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது... நண்பர்கள் அனைவரையும் ஒருநாள்கூட நினைக்காமல் இருந்ததில்லை. ஆனால் அதை ஒரு கடிதம் போட்டு உரைத்ததில்லை. வீட்டிற்குள் நடக்கும் ஒவ்வொரு முக்கிய நிகழ்வுக்கும் எனக்கு ஒரு

கடிதம் எழுதி விளக்கமும், அறிவுரை யும், நல்வழியையும் காட்டும் தந்தையைப் பெற்றிருந்தும்கூட கடிதம் எழுதியதில்லை, யாருக்கும் இன்று வரை நான்.

புத்தக சந்தையில் (இதற்கு வேறு பெயர் தமிழில் இல்லையா?) இன்று கிருத்திகாவிடம் நீங்கள் "பார்த்திபனைக் கடிதம் எழுதச் சொல்லுங்கள்" என்று சொல்லியதாக அவள் சொன்னாள்... கனவா நனவா என்று ஒருகணம் திகைத்துத்தான் போய்விடடேன்! ஏனென்றால், அங்கு பலர் உங்களிடம் பேசினார்கள்; ஆனால் ஒன்றும் பெரிதாகப் பேசாத என்னிடம் அப்படி கடிதம் எழுதச் சொன்னது திகைப்பையும் சந் தோஷத்தையும் தந்தது.

வரும் வழியிலெல்லாம் என்ன எழுத வேண்டும் என்ற எண்ணமே மனதிற்குள் ஓடியது... கிருத்திகா பேசியது எதுவும் காதிலேயே விழ வில்லை, ஒரு விஷயத்தைத் தவிர! பொதுவாகவே பெரிதும் படிக்கும் ஆர்வம் இல்லாத அவளிடம் உங்களைப் பற்றியே பேசிக் கொண்டி ருக்கும் என்னிடம் பலமுறை அவள் "போடா போ, போய் அந்த சாரு நிவேதிதாவையே கடடிக்கோ" என்று சொல்லுவாள். ஆனால் இன்று உங்களைப் பார்த்துவிடடு வரும் வழியில் "என்னவோ தெரியல, அவரைப் பார்த்த பிறகு பிடிச்சிருக்கு. நீ படிச்சு முடித்ததும் அந்தப் புத்தகங்களை எனக்குத் தா; நானும் படிக்கிறேன்" என்று சொன்னாள்.

வீட்டிற்கு வந்தவுடன் தங்கையிடமும் (டாய் பார்த்தி, நாளைக்கு எனக்கு அந்த சாரு வெப்சைட் படிக்கச் சொல்லித் தாடா) தந்தையிட மும் உங்களிடம் பேசியதையும், ஆட்டோகிராப் வாங்கியதையும் (அதுவும் 'வாழ்வது எப்படி?' புத்தகத்தில் என் தந்தையின் பெயர் போடடு தாங்கள் எழுதித் தந்த கையொப்பம் பார்த்து அவர் அடைந்த மகிழ்ச்சி எல்லை இல்லாதது), போட்டோ எடுத்ததையும் சொல்லிக் கொண்டாடிய நேரத்திலும் என் மனதுக்குள் அதே சிந்தனைதான் ஓடிக்கொண்டிருந்தது... என்ன எழுதுவது.. ஆனால் ஒரு திருப்தி... நடிகர்களையும் அரசியல்வாதிகளையும் மட்டுமே கொண்டாடும் தேசத்தில் நம் குடும்பமாவது ஒரு எழுத்தாளனைக் கொண்டாடுகிறதே என்று.

என்றும் மாறா அன்புடன்
நெ.பார்த்திபன்

சில பர்சனல் கேள்விகள்:

முதல்: இன்னைக்கு சரக்கு அடிச்சு இருந்தீங்களா... சாயங்காலம்? (எல்லாம் ஒரு வயித்தெரிச்சல்தான்).

இரண்டாவது: என் முகம் ஞாபகம் இருந்தால்/சொல்ல விருப்பம் இருந்தால் ———என்னைப் பார்த்தபோது என்ன தோன்றியது?

மூன்றாவது மனுஷ்ய புத்திரனிடம் இன்று மாலை சற்று கோபமாகப்

பேசிக்கொண்டிருந்த எழுத்தாளர் யார்? (இதைக் கேட்பதற்கான காரணம் இருக்கிறது).

நான்காவது: என் கடிதத்தை ஒருவேளை பதிவேற்றம் செய்தால் இதை எடிட் செய்ய எவ்வளோ நேரம் பிடித்தது? (அறிவுக் கொழுந்துடா பார்த்தி நீ).

என்ன கொடுமைங்க இது: கடிதத்தை மீண்டும் ஒருமுறை படித்து முடித்த பிறகுதான் கவனித்தேன்; ஆரம்பிக்கின்றேன் என்று முடித்திருக்கிறேன்... எல்லாம் உங்க தாக்கம்தான் தலைவரே!

○

அன்புள்ள பார்த்திபன்,

உங்களைப் பார்த்ததும் சற்று விசேஷமாகப் பேசிக்கொண்டிருந்ததன் காரணம், உங்கள் முகத்தில் தெரிந்த மலர்ச்சி. இதேபோன்ற மலர்ச்சியை மிஷ்கின் பேசும்போதும் கண்டிருக்கிறேன். கள்ளம் கபடமற்ற, வெளிப்படையான மனிதர்களிடமே இப்படிப்பட்ட மலர்ச்சி தெரியும். கிருத்திகாவும் உங்களைப் போலவேதான் ஆனந்தமாக இருந்தார் அந்த ஆனந்தமே என்னையும் தொற்றிக்கொண்டது.

அது மட்டும் அல்லாமல், இந்தப் புத்தகக் கண்காட்சியே என்னை முதல் முதலாக ஒரு விஷயத்தில் கண்ணைத் திறந்து விட்டிருக்கிறது. வாசகர்கள் பலர் என்னோடு பேசும்போது ஒரு பரவச நிலைக்குச் செல்வதை கண்கூடாகப் பார்த்துக்கொண்டேயிருந்தேன். ஒரு எழுத்தாளன் என்ற முறையில் உலகின் மிக உயர்ந்த இலக்கியப் பரிசு கிடைத்தால்கூட ஏற்படாத ஒரு ஆனந்தம் எனக்குள் பரவுவதை உணர்ந்தேன். இனிமேல் நான் பணத்துக்கு சிங்கி அடித்தாலும் என் எழுத்தை தமிழ்நாட்டில் கௌரவிப்பதில்லை என்று மறந்தும் சொல்ல மாட்டேன்.

கல்லூரி மாணவியைப் போல் தோற்றமளித்த ஒரு அழகான பெண் என்னையே பார்த்துக்கொண்டு, தயங்கித் தயங்கி நின்றுகொண்டிருப்பதைக் கண்டேன். அவரிடம் பேச வேண்டும் என்று நினைத்தும் என்னால் அது முடியவில்லை. தொடர்ந்து வாசக நண்பர்களின் புத்தகங்களில் கையெழுத்துப் போட்டுக்கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் அவரே என்னிடம் வந்து ஒரு புத்தகத்தில் கையெழுத்து வாங்கினார். அப்போது அவர் கைகள் நடுங்கிக்கொண்டிருந்ததைக் கண்டேன். புன்னகையுடன் “ரிலாக்ஸ்” என்றேன். அதற்கு அவர் “இன்று நான் அழுதுவிடுவேன்” என்றார். சொல்லும்போதே அவர் குரல் நடுங்கியது. பெயர் என்ன என்று கேட்டேன். சரண்யா என்றார். மைக்கேல் ஜாக்ஸன் போன்ற பாடகர்களுக்குத்தான் இப்படிப்பட்ட ரசிகர்கள் இருப்பதைப் பார்த்திருக்கிறேன்.

பார்த்திபன், சரண்யா போன்ற வாசகர்களுக்காகவும், கிருத்திகா

போன்ற வருங்கால வாசகர்களுக்காகவும் எழுதிக்கொண்டே இருக்கலாம் என்று தோன்றுகிறது. நான் ஒரு முக்கியமான வேலையில் ஈடுபட்டிருப்பதால் இன்னும் இரண்டு மூன்று தினங்களுக்கு இணைய தளத்தின் பக்கமே செல்ல முடியாது என்றுதான் நினைத்திருந்தேன். ஆனால் பார்த்திபன், உங்கள் கடிதம் என் முடிவை மாற்றிவிட்டது. உங்களைப் போன்றவர்களுக்காக இந்த ஆண்டு பதினைந்து புத்தகங்கள் எழுதுவேன் என்று வாக்களிக்கிறேன்.

காதலிகள் என்று எழுதியிருக்கிறீர்கள். ஜாக்கிரதை பார்த்திபன். பெண்களுக்கு இது பிடிக்காது. மேலும், இப்படி ஒரு ரூபவதியைக் காதலியாகப் பெற்றிருக்கும் நீங்கள் உங்களுடைய பழைய காதலிகளைப் பற்றி வாய் திறக்கலாமா? என் அனுபவத்தில் சொல்கிறேன்; இந்த விஷயத்தில் மட்டும் பெண்களிடம் உண்மையே பேசாதீர்கள்.

இப்போது சில பர்சனல் பதில்கள்:

1. நேற்று நான் புத்தகக் கண்காட்சிக்கு வந்தபோது என் கண்கள் ரத்தச் சிவப்பாக இருந்ததை வைத்து இந்தக் கேள்வியைக் கேட்கிறீர்கள் என்று நினைக்கிறேன். நீங்கள் நினைப்பது போல் சரக்கு அடித்துவிட்டு வரவில்லை. இப்போதெல்லாம் எனக்குக் கொஞ்சம் பொறுப்பு வந்துவிட்டதுதான் காரணம். ஆனால் அதற்கு முந்தின நாள் இரவு பத்து மணிக்கு ஆரம்பித்து காலை மூன்று மணி வரை ஸ்மிர்னாஃப் வோட்காவை அருந்தியபடி இசை கேட்டுக் கொண்டிருந்தேன். அப்புறம், நான் எத்தனை மணிக்குப் படுத்தாலும் காலையில் சீக்கிரமே எழுந்துவிடுவேன். அதனால்தான் கண்கள் சிவந்து இருந்தன. ஒரே தூக்கக் கலக்கமாகவும் இருந்தது.

2. உங்கள் முகம் நன்றாக ஞாபகம் உள்ளது. ஆனால் ஆச்சரியகரமாக கிருத்திகாவின் முகம் ஞாபகம் இல்லை. உங்களைப் பார்த்தபோது எனக்குள் தோன்றிய எண்ணத்தை பகிரங்கமாக எழுத முடியாது. இருந்தாலும் நீங்கள் கேட்டுவிட்டதால் எழுதி விடுகிறேன். "இவ்ளோ அழகான பெண்ணைக் கவிழ்த்து இருக்கிறாரே; அதற்கு இவர் கையாண்ட வழிமுறைகள் என்னவாக இருக்கும்; தெரிந்தால் நம்முடைய எதிர்கால வாழ்க்கைக்கு உதவியாக இருக்குமே?" திட்டாதீர்கள் கிருத்திகா கேட்டார், சொன்னேன்.

3. சுதேசமித்திரன். இந்த வார *ஆனந்த விகட*னில் இவருடைய நல்ல சிறுகதை ஒன்று வந்துள்ளது. காக்டெய்ல், ஆஸ்பத்திரி என்ற நாவல்களை எழுதியிருக்கிறார்.

4. எடிட் செய்ய ஐந்து நிமிடம்கூட ஆகவில்லை. சில இடங்களில் ஒற்றெழுத்துக்கள் இல்லை. அவ்வளவுதான். இதுவே மலாவி அன்பராக இருந்தால் நாலு மணி நேரம் ஆகியிருக்கும். ஒரு வாக்கியம்கூட ஒழுங்காக எழுதத் தெரியாதவர்களுக்கெல்லாம் எழுத்தாளர் ஆகும் ஆசை வந்துவிடுகிறது.

10.1.2010

முதல் மழை, முதல் கனவு, முதல் முத்தம், முதல் கடிதம்... (1)

இனிய சாருவிற்கு,

தமிழில் ஏதோ குறை இருக்கிறது! சந்தோஷம், ஆச்சரியம், பூரிப்பு, இன்பம், குதூகலம், துள்ளல், ஆனந்தம், பேரின்பம் இப்படிப் பல வார்த்தைகளை எண்ணிப் பார்த்தும் ஒன்றுமே என் உணர்வுகளை சரியாக உணர்த்தவில்லை – உங்கள் பதில் கடிதத்தைக் கண்டபோது நான் அடைந்த உணர்வுகளை என்னால் வார்த்தைகளால் சொல்ல முடியவில்லை.

சரி, வேறு மொழியில் இருக்கிறதா என்று கேட்கலாம்... சத்தியமாகக் கிடையாது... என் உணர்வுகளை எந்த மொழியிலும் வெளிப்படுத்த இயலாது, உணர மட்டுமே முடியும்.

ஒவ்வொரு வார்த்தையை எழுதும் போதும் என் மனதில் ஆயிரம் எண்ணங்கள் வந்து செல்கின்றன; நிச்சயமாகச் சொல்கிறேன் இதுவரை இப்படியெல்லாம் நான் யோசித்ததே இல்லை. காதலிக்கு (காதலிகளுக்கு இல்லை. கிருத்திகா உங்கள் அடவைஸ் கேட்டு "சோ ஸ்வீட ஆப் ஹிம்" என்று சொன்னாள்) கடிதம் எழுதும்போதுகூட ஒருவன் இவ்வளவு யோசித்து எழுதி இருப்பானா என்பது சந்தேகம்தான்! இதை ஏன் சொல்கிறேன்

என்றால், உங்கள் மனதில் இடம் பிடிக்கவேண்டும் என்ற பேராசை யினால்தான். எனக்கு மட்டும் அல்ல; என்னைப் போன்ற லட்சோப லட்சம் (விரைவில் கோடானு கோடி) வாசகர்களின் ஆசையும் கூட அதுவாகத்தான் இருக்கும்.

நிறைய சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன்; ஆனால் உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பது போல் ஒரு முக்கியமான வேலையில் ஈடுபட்டிருக்கும் உங்களுக்குத் தொல்லை கொடுக்க விரும்பாத காரணத்தால் இப்போதைக்கு இந்தக் கடிதத்தை நிறுத்தி வைக்கிறேன்...

என்றும் மாறா அன்புடன்,

நெ. பார்த்திபன்

பின்குறிப்பு: வாசகர்களுக்கு ஒரு எச்சரிக்கை: இந்தக் கடிதத்தை முடிக்கும் சமயத்தில் கிருத்திகாவிடம் இருந்து போன்கால் (சாரு ஆன்லைன் படித்துவிட்டு).

“பார்த்தி ஒன்னு சொல்லடடுமா.

“சொல்லுடா.

“ஐ லவ் சாரு”(அடங்கொக்காமக்கா)

“என்னது.

“என் லைஃப்ல உனக்கு அப்புறம் ஒருத்தரைப் பார்த்த உடனே பிடிச்சதுனா அது சாருதான்.”

“ஹ்ம்ம்.

“என்னடா கோவமா?”

“ஹ்ம்ம்.

“சே லூசு. இது வேற மாதிரிடா.

“ஹ்ம்ம்.

சாரு! இனிமேல் நீங்கள் மனுஷ்ய புத்திரனைக் குறை சொல்லும் தகுதியை இழந்துவிடடீர்கள். அவருக்கு எந்த வகையிலும் நீங்கள் குறைந்தவரில்லை... மக்களே நல்லா கேட்டுக்கோங்க. அப்புறம் உங்களை ஆண்டவனாலும் காப்பாத்த முடியாது!

10.1.2010

❍

***டி**யர் சாரு,*

ஆறு மாதங்களாக நான் உங்கள் வாசகன். டிசம்பர் 12 அன்று

நடந்த உங்களுடைய புத்தக வெளியீட்டு நிகழ்ச்சிக்கும் வந்திருந்தேன். ஆனால் சற்று தாமதமாக வந்ததால் நிகழ்ச்சி முடியும் வரை நின்று கொண்டே பார்க்க வேண்டி வந்தது. இதற்கிடையில் எனக்குக் கொஞ்சம் மூட்டு வலி பிரச்சினை வேறு இருக்கிறது. அன்றைய தினம் பாரதி கிருஷ்ணகுமார் தனது பேச்சில் குறிப்பிட்டது போல் அந்த நிகழ்ச்சி இதுவரை நாம் பார்த்தே இருக்காத மிகப் பெரிய கொண் டாட்டமாகவே இருந்தது. நிகழ்ச்சியில் பேசியவர்கள், கலந்து கொண்ட பார்வையாளர்கள் என்று எல்லோருமே ஒரு ஆனந்தப் பரவசத்தில் இருந்ததுபோல் தெரிந்தது. நிகழ்ச்சி நடந்த நான்கு மணி நேரமும் ஒவ்வொருவரிடமும் அது தெரிந்தது. பல்வேறு கருத்துக்களும், சிந்தனை களும் வெடித்துத் தெறித்த அற்புதமான நிகழ்ச்சி அது. அதை என்னால் வாழ்நாளில் மறக்க முடியாது. அந்தக் கொண்டாட்டத்தில் என் மூட்டு வலிகூட எனக்குத் தெரியவில்லை.

நான் உங்கள் எழுத்துக்களோடுதான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன் என்பதால் தனியாக உங்களுக்கு ஒரு கடிதம் எழுத வேண்டிய தேவை கூட இல்லை என்றே தோன்றுகிறது. நான் நேற்று (சனிக்கிழமை 9–1–2009) நேராக உயிர்மை அரங்குக்கு வந்து என் வாழ்வின் வழி காட்டியைத் தேடினேன். வேறு எங்காவது சென்றிருப்பீர்களோ என்று ஒரு சந்தேகம். ஆனால் அங்கே உங்களைப் பார்த்ததும் ஒரு இன்ப அதிர்ச்சி ஏற்பட்டது. உங்களுடைய 12 புத்தகங்களை வாங்கினேன். ஏற்கனவே இணையத்தில் படித்தவைதான் என்றாலும் உங்களிடம் ஆடோக்ராஃப் வாங்கலாம், அதன் மூலமாக உங்களிடம் இரண்டு வார்த்தை பேசலாம் என்றே அந்தப் புத்தகங்களை வாங்கினேன். சாரு, you looked terribly handsome!! புத்தக வெளியீட்டு நிகழ்ச்சியில் உங்களைப் பார்த்தபோது நீங்கள் தில்லிக்காரரைப் போல் இருந்தீர்கள்.

உங்களை ஒருகணம் பார்க்க வேண்டும் என்பதற்காகவே உயிர்மை அரங்கு இருக்கும் வழியில் தொடர்ந்து குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டே இருந்தேன். எவ்வளவு நேரம் நடந்திருப்பேன் என்றே தெரியவில்லை.

என் அப்பா காதலிக்க நேரமில்லை ரவிச்சந்திரனைப் போல் பார்ப்ப தற்கு வசீகரமாக இருப்பார். ஆண்களாக இருந்தாலும் பார்க்க அழகாக இருக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்லுவார். அவர் வயது 62 என்றாலும் பார்க்க 40 வயதுதான் சொல்ல முடியும். ஆனால் என் தோற்றத்தைப் பற்றி நான் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. அதனால்தானோ என்னவோ இந்த 32 வயதிலேயே 40 வயது ஆளைப் போல் தோற்றமளிக்கிறேன்.

But I think you are the proverbial metro-sexual man. இவ்விஷயத்தில் என் அப்பாவின் பேச்சை நீண்ட காலமாக நான் கேடகாமல் இருந்தது தவறு என்பது உங்களைப் பார்த்ததும் புரிந்துவிட்டது.

பிறகு நீங்கள் புத்தகங்களில் கையெழுத்திடும்போது என் பெயர்

கார்த்திக் என்றதும் "நிறைய கார்த்திக் இருக்கிறார்கள்; என் பையன் பெயரும் கார்த்திக்தான்" என்றீர்கள். எனக்கு என்ன பதில் சொல்வ தென்று தெரியவில்லை. வார்த்தைகள் வாயிலிருந்து வர மறுத்தன. அப்போது என்னுள் ஓடிய எண்ணமெல்லாம் ஒன்றே ஒன்றுதான்; நாம் ஒரு சராசரி வாசகன் ஆயிற்றே; இந்த ஒரே ஒரு சந்திப்பின் மூலம் நம்மை சாரு நினைவில் வைத்திருப்பாரா? உங்களை சந்திக்கும் வாசகர் கள் அடிக்கடி சொல்வதுபோல் இதை ஒரு 'பரவச நிலை' என்றே சொல்ல வேண்டும். ஆனால் அந்த வார்த்தை கூடப் போதாது என்று தோன்றுகிறது. என் சுயநினைவையே இழந்து விட்டேன் என்றுதான் சொல்ல வேண்டும். என் நாக்கு குழறியது. பேச நினைத்தும் வார்த்தை கள் வரவில்லை. இருந்தும் எப்படியோ சமாளித்துக் கேடடேன். "ஏன் நீங்கள் நித்யானந்தாவின் சொற்பொழிவைக் கேட்கச் செல்ல வில்லை?" அதற்கு நீங்கள் உங்களுக்கே உரிய விசேஷமான பதிலைச் சொன்னீர்கள். "கடவுளே வந்தாலும் எனக்கு எழுத்துதான் முக்கியம்."

நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களோடு பேசுவதில் உங்களுக்கு அவ்வளவாக ஈடுபாடு இல்லை என்றும், 20இலிருந்து 30 வயது வரை உள்ளவர்களோடு பேசுவதே சுவாரசியமாக இருக்கிறது என்றும் நீங்கள் ஒரு இடத்தில் குறிப்பிடடிருந்தீர்கள். அது அப்போது எனக்கு ஞாபகம் வந்தது. நான் 32ஆக இருந்தாலும் 40 ப்ளஸ் போன்று தோன்றுவதால்தான் நீங்கள் என்னுடன் நிறைய பேசவில்லையோ என்று எண்ணினேன்.

நான் உங்களுடைய சீடன். வாசகன் என்ற வார்த்தை க்ளீஷேவாகத் தோன்றுகிறது; மேலும் உங்கள் மீதான என்னுடைய passion-க்கு அந்த வார்த்தை சாதாரணம். உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை உண்டு என்று தெரியும். அதைப்போலவே எனக்கும் உண்டு. அடிக்கடி நான் நினைப்பதுண்டு; எனக்கு ஒரு ஆசானும், வழிகாடடியும், தோழனுமான ஒரு மாமனிதனின் அறிமுகம் வேண்டும் என்று. இதற்காகக் கடவுளிடம் பிரார்த்தித்தேனா என்று தெரியவில்லை. ஆனால் இப்போது, இந்த நிமிடம், நான் மிகுந்த தன்னம்பிக்கையுடனும், உவகையுடனும், பூரிப்புடனும், திருப்தியுடனும், பெருமையுடனும், மனநிறைவுடனும் சொல்லிக் கொள்வேன்; கடவுள் அந்த மாமனிதனை எனக்குக் காட்டி விட்டார். அது நீங்கள்தான் சாரு. எழுத்தாளர்களில் நீங்கள்தான் சூப்பர் ஸ்டாராக ஆகிக் கொண்டு வருகிறீர்கள் என்று என் நண்பர்கள் சிலர் சொல்வதுண்டு. அது உண்மைதான். ஆனால் ஒரு சின்ன திருத்தம். இளைய சமுதாயத்தினர் உங்களை சூப்பர் ஸ்டாராக அல்ல; கடவுளாகவே எண்ணிக் கொண்டாடுகிறார்கள் என்பதை ஆணித்தரமாகச் சொல்லுவேன்.

இனிமேல் நீங்கள் கர்னாடகாவுக்கோ, ஆந்திரப் பிரதேசத்துக்கோ, கேரளாவுக்கோ செல்லும்போது தமிழ்நாடடில் உங்களுக்கு மிகப் பெரிய வாசகர் கூடடம் இருக்கிறது என்று சொல்ல வேண்டும். இங்கு மடடும் அல்ல; நீங்கள் அடிக்கடி அல்லது எப்போதும் சீலே

தேசத்துக் கவிஞர்களையும், பாடகர்களையும், மற்றும் பல கலைஞர் களையும் கொண்டாடுகிறீர்கள் அல்லவா, அதைப் போல் சீலே தேசத்துக் கலைஞர்கள் உங்களைக் கொண்டாடும் நாள் அதிக தூரத்தில் இல்லை. அதில் எனக்கு ஒரு சிறிதும் சந்தேகம் இல்லை.

சாரு, என் பிரியத்துக்குரிய கடவுளே.

என்னுடைய சில விருப்பங்களை என் வாழ்த்துக்களோடு கீழே தொகுத்திருக்கிறேன்.

1. *சீலேவில் நீங்கள் கொண்டாடப்பட வேண்டும். சீலேயின் கௌரவக் குடியுரிமை உங்களுக்குக் கிடைக்க வேண்டும்.*
2. *நியூயார்க் ப்ராட்வேயில் அல்லது சிட்னி ஆபரா ஹவுஸில் உங்களுடைய புத்தக வெளியீட்டு விழா நடக்க வேண்டும்.*
3. *டப்ளின் இம்பாக் பரிசு உங்களுக்குக் கிடைக்க வேண்டும்.*

சென்ற ஆண்டு நடந்த உங்களுடைய புத்தக வெளியீட்டு விழாவில் மதன் உங்களுடைய எழுத்துக்கள் பற்றிப் பேசும்போது வான்கோவின் ஓவியங்களைப் பற்றிக் குறிப்பிட்டார். வான்கோ அவன் வாழ்நாளில் கொண்டாடப்படவில்லை. ஆனால் உங்களுடைய எழுத்து உலகம் முழுவதும் கொண்டாடப்படும். அது விரைவிலேயே நடக்கும்.

உங்கள் சீடன்,

கார்த்திக் ராமசாமி

11.1.2010

❍

டியர் சாரு,

நான் பார்த்திபன். புனேவில் இருக்கிறேன். கடந்த ஒரு வருடமாக உங்கள் இணையத்தை வாசித்து வருகிறேன். தமிழ்நாட்டில் யாரும் உங்கள் எழுத்தைப் படித்துக் கொண்டாடுவதில்லை என்று நினைக்கா தீர்கள். லட்சக்கணக்கான மக்கள் உங்கள் எழுத்தைப் படிக்கிறார்கள் என்று நான் உறுதியாகச் சொல்லுவேன். பொதுவாக நான் நாவல்களோ புத்தகங்களோ படிக்கும் பழக்கம் இல்லாதவன். ஆனால் உங்கள் எழுத்து மட்டும் விதிவிலக்காக அமைந்துவிடடது.

ஆர். பார்த்திபன்

புனே

11.1.2010

❍

வணக்கம் தலைவா,

இப்போதுதான் நம் பார்த்தியின் கடிதம் படித்தேன். நம்மைப் போலவே ஒருவனா என்று நினைத்தேன். ஆனால் நம்மைவிட சிறந்த ஒருவன் என்று கடிதம் படித்ததும் புரிந்துகொண்டேன். "நான் என்ன வெல்லாம் சொல்லலாம் என்று நினைத்து வைத்திருந்தேனோ அதை அப்படியே ஒரு இம்மி அளவுகூட பிசகாமல் கோவை ம. பிரபு A simple letter from a very simple reader to a very great writer என எழுதி அனுப்பி விட்டார்" என்று எழுதியிருக்கிறார் பார்த்தி.

பார்த்தி பொய் சொல்கிறார் சாரு. அவர் கடிதம்தான் மிகவும் நன்றாக இருந்தது. அவருடைய கடிதம்தான் பெஸ்ட். எனக்கு ஜிமெயிலில் தமிழில் தட்டச்சு செய்ய முடியும் என்பது எப்போது தெரிந்ததோ அப்போதே அந்தக் கடிதத்தை அனுப்பிவிட்டேன். அதற்கு முன் ஆங்கிலத்தில் மிக மோசமான ஒரு கடிதம் அனுப்பினேன். எனக்கே தெரியும், அது ஒரு மொக்கை கடிதம் என்று. சில நாட்களுக்கு முன்பு தான் அதுவும் எதேச்சையாகத்தான் ஜிமெயிலில் தமிழில் தட்டச்சு செய்ய முடியும் என்பது தெரிந்தது. தாமதிக்காமல் அடுத்த வினாடியே அந்தக் கடிதத்தை அனுப்பிவிட்டேன். நம் தலைவன் கண்ணில் பட்டால் போதும் என்றுதான் நினைத்தேன்; ஆனால் அவர் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்வார் என்று கனவிலும் நினைக்கவில்லை. என் வாசிப்பு எல்லாமே நுனிப்புல் மேய்வது மாதிரிதான். நான் ஆழ்ந்து வாசித்தது சாருவைத்தான். அது தானாக நடந்தது.

என்னுடைய முதல் கடிதம், முதன்முதலில் தேர்வு எழுதும் மாண வனின் மனநிலையில் அனுப்பியது. இப்போது கூட சிறிது பதட்ட மாகத்தான் இருக்கிறது. இலக்கியம் பற்றிய தேடலோ அறிவோ ஏன் எனக்கு ஏற்படவில்லை என்று யோசிக்கும் போது அதற்கு சூழலும் ஒரு காரணம் என்றே நினைக்கிறேன்.

அதுவும் என்னுடைய சூழலைப் பற்றி யோசித்தால் வாழ்க்கையின் முக்கிய தேடல் பணத்தை நோக்கியதாகவே இருக்கிறது. ஆனாலும் என் உள்ளுணர்வு சொல்கிறது, மனம் எல்லா கட்டுகளையும் உடைத்து விரைவில் ஆனந்தத்தை உணரப் போகிறது என்று. சாருவும் அதற்கு ஒரு காரணமாக இருக்கப் போகிறார் என்றே நினைக்கிறேன். நம்முடைய சொல்லினாலோ, செயலினாலோ அல்லது எழுத்தினலோ ஒரு அனுபவத்தை ஒருவருக்கு உணர வைக்க முடியவில்லையெனினும் அந்த அனுபவம் பொய்யாகாது. என்னுடைய அனுபவத்தில் இலக்கியம் கூட அப்படித்தான் என்று நினைக்கிறேன். இலக்கியத்தில் அல்லது வேறு ஏதாவது ஒன்றில் நான் உணர்ந்தவற்றை அற்புதமான அல்லது எளிமையான சொற்களைக் கொண்டு சொல்ல முடியவில்லை எனில் நான் இலக்கியத்தை உணரவில்லை என்று அர்த்தம் ஆகாது. இந்தக் கடிதத்தையே பார்க்கும்போது இதைப் படிப்பவர்களைத் தூங்க வைத்துவிடுமோ என்று ஒரு அச்சம் ஏற்படுகிறது. எல்லாருக்கும்

சாரு போல ஒரு எழுத்து நடை வாய்த்துவிடுமா என்ன?

பார்த்திபனைப் பார்த்து எனக்குப் பொறாமையாக இருக்கிறது, ஏனெனில் சாருவிடம் இருந்து பதில் வாங்கி விட்டார். ஆனால் என்னால் இன்னும் முடியவில்லை. பொதுவாக நான் யாருடைய நட்பையும் யாசிப்பது இல்லை. ஆனால் இயல்பாக அமைந்த பெரும் நண்பர் வட்டம் எனக்கு உண்டு. சாரு விஷயத்தில் அப்படி இல்லை. அது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. அவர் நட்பைப் பெற மனம் துடிக்கிறது. அவர் எழுத்தின் மேல் அவ்வளவு காதல் உண்டாகி விட்டதா என்ன? ரொம்ப மொக்கை போடுகிறேனோ தலைவா? பதிவேற்றம் செய்யாவிட்டாலும் தனியாக ஒரு பதில் போடு தலைவா?

பதிலை எதிர்பார்க்கும்,

அன்பன்

ம. பிரபு

12.1.2010

முதல் மழை, முதல் கனவு, முதல் முத்தம், முதல் கடிதம்... (2)

அன்புள்ள சாரு,

33ஆவது புத்தகக் காட்சியின் இறுதி நாளன்று தான் நான் அங்கு வந்தேன். முதலில் உயிர்மை அரங்கு எங்கே இருக்கிறதென்று தேடிப் பிடித் தேன். அங்கு நான் மிகவும் எதிர்பார்த்து வந்த ஒருவரைக் காணவில்லை. "சரி, நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்" என்று எண்ணிக் கொண்டு மற்ற அரங்குகளில் உலவிக் கொண்டிருந்தேன் – சில புத்தகங்கள் வாங்கினேன்.

என் மனைவி என்னைப் பார்த்து "என்னங்க, ஒரு மாதிரி இருக்கீங்க?" என்று கேட்டார். "சாருவைக் காணவில்லை; வந்து சென்று விட்டாரா அல்லது இன்னும் வரவில்லையா என்று தெரியவில்லை" என்று ஒருவித வருத்தத்துடன் கூறினேன். இருவரும் இன்னும் சிறிது நேரம் அங்கு இருந்தோம்.

அப்போதுதான் நீங்கள் அங்கு வந்தீர்கள். நான் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தேன். உங்களுடன் ஒரு வார்த்தையாவது பேசிவிட வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்தாலும், எப்படிப் பேசுவது என்ற தயக்கம், ஒருவித பூரிப்பு என்னிடம் இருந்தது. என் மனைவி தான் அந்த யோசனையை எனக்குச் சொன்னார். தங்களிடம் கையெழுத்து வாங்கும்போது ஒரு வார்த்தை பேசிவிட வேண்டும் என்பதே அது.

புத்தகத்தை வாங்கினேன், தங்களிடம் கொடுத்து கையெழுத்து வாங்கலாம் என்றால் நீங்கள் மனுஷ்ய

புத்திரனுடன் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். எப்படித் தொந்தரவு செய்வது என்று நான் தயங்கியபோது, என் மனைவி கிடடத்தட்ட என்னை உங்கள் முன் இழுத்து வந்துவிட்டார்.

உங்களிடம் புத்தகத்தை நீட்டி, அதை நீங்கள் வாங்கியவுடன், நான் லேசாக மிதக்க ஆரம்பித்துவிட்டேன். அப்போது இன்னும் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. நீங்கள் என் பெயரைக் கேட்டீர்கள். அவ்வளவு தான்; எனக்குப் பறப்பதுபோல் ஓர் உணர்வு வர என் பெயரை யார் உங்களுக்குச் சொன்னது என்றே எனக்குத் தெரியவில்லை. கீழே இறங்கி பார்த்தால் "நண்பர் நரேந்திர பாபுவுக்கு" என்று எழுதி "அன்புடன் சாரு" என்று கையெழுத்து போட்டிருந்தீர்கள். என் வாழ்வில் நான் வாங்கும் முதல் ஆட்டோக்ராஃப் இது.

பின் அங்கிருந்து கிளம்பும்போது, என் பெயரை யார் உங்களுக்குச் சொன்னது என்ற குழப்பத்தில் என் மனைவி உங்களிடம் சொல்லி இருப்பாரோ என்று அவரைக் கேட்டேன். அவர் "நீங்கள்தான் உங்கள் பெயரை உளறலுடன் சொன்னீங்க" என்று சொல்லிவிடடு என்னை ஒரு மாதிரி பார்த்தார்.

உங்கள் எழுத்தை உங்கள் இணைய தளத்தில்தான் முதன் முதலில் படிக்க ஆரம்பித்தேன். படிக்க ஆரம்பித்த நாள் முதல் இன்று வரை மணிக்கொருமுறை உங்கள் வலைத்தளத்தை refresh செய்து பார்ப்பேன்; ஏதாவது புதிதாக பதிவேற்றம் செய்திருக்கிறீர்களா என்று. அந்த அளவிற்கு நீங்கள் என்னை ஈர்த்துவிட்டீர்கள். உங்களுக்குக் கடிதம் எழுத வேண்டும் என்று பலமுறை எனக்குத் தோன்றும்; இருந்தாலும் மேலே சொன்ன அதே தயக்கம் என்னைத் தடுக்கும்; அப்படி இருந்தும் உங்களுக்கு ஒரு சிறிய கடிதம் இதற்கு முன் எழுதியிருக்கிறேன். அதற்குத் தாங்கள் பதில் எழுதியதில் எனக்கு மிக மிக மகிழ்ச்சி.

இந்நிலையில் நேற்று 'வாழ்விலே முதல்முறை' என்று ஒரு வாசகர் கடிதத்தைப் படித்தேன். அதுதான் என்னையும் இதுபோல ஒரு நீண்ட கடிதம் எழுதத் தூண்டியது. இவ்வளவு தூரம் இதைப் பொறுமை யுடன் படித்ததற்கு நன்றி.

என்றும் அன்புடன்

B. நரேந்திர பாபு

சென்னை

12.1.2010

❍

முதலிலேயே சொல்லிவிடுகிறேன். மேற்கண்ட கடிதங்களை வெளி யிட்டதற்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. இல்லாவிட்டால் இவ்வளவு புகழ்மொழிகளைக் கொண்ட கடிதங்களுக்கு தனிப்படட

முறையில்தான் பதில் எழுதியிருப்பேன். நான் பல ஆண்டுகளாக தமிழ் நாட்டுக் கலாச்சார சூழலைப் பற்றி சினிமா நடிகர்களைக் கொண்டாடும் சமூகம் என்றும், இன்னும் பலவாறாகவும் கடுமையாக விமர் சித்து எழுதி வந்திருக்கிறேன். இந்தச் சூழலில் ஒரு எழுத்தாளன் எப்படிக் கொண்டாடப்படுகிறான் என்பதைப் பலரும் அறிந்துகொள்ள வேண் டும் என்ற காரணத்தினால்தான் இக்கடிதங்களை வெளியிடுகிறேன். மற்ற படி புகழ்மொழிகள் எப்போதும் லஜ்ஜையை உண்டு பண்ணக்கூடியதே.

உங்களுடன் ஒரு விஷயத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நான் எழுத்தாளன் என்பது போலவே ஒரு தீவிரமான வாசகனும்கூட. என்னைக் கவர்ந்த எழுத்தாளர்கள் பலர் உண்டு. தாஸ்தாயெவ்ஸ்கி, கஸான்ஸாகிஸ் என்று துவங்கி நூறு பெயர்களைச் சொல்லலாம். கஸான்ஸாகிஸுக்கு நானுமே பார்த்திபனைப் போலவோ, கார்த்திக் ராமசாமியைப் போலவோ, பிரபுவைப் போலவோ கடிதங்கள் எழுதக் கூடியவன்தான் அற்புதமான எழுத்தைப் படிக்கும்போது நமக்கு ஒரு பரவசநிலை ஏற்படுகிறது. எக்ஸ்டஸி என்று சொல்லலாம். சமீபத்தில் ஒரு வாசகி என் தொலைபேசி எண்ணை மிகுந்த சிரமத் துக்குப் பிறகு கண்டுபிடித்து என்னிடம் பேசினார் ஆங்கிலத்தில் எக்கச்சக்கமாகப் படித்திருக்கும் அவர் தமிழில் சுஜாதாவைத் தவிர வேறு யாரையும் படித்ததில்லை. சாரு நிவேதிதா என்ற பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறார் ஆனால் 'அவர் எழுத்தைப் படிக்காதே, கெட்டுப் போய் விடுவாய்' என்பதாக அவருடைய (கெட்ட) தோழிகள் சொல்லியிருக்கிறார்கள். அடைப்புக்குறிக்குள் உள்ள வார்த்தை வாசகி சொன்னது. பிறகு எதேச்சையாகத்தான் புத்தகச் சந்தையில் *உயிர்மை* அரங்கில் என் புத்தகங்களைப் பார்த்திருக்கிறார். கையில் பணம் இல்லை. "கொண்டு வந்த 5000 ரூபாயும் ஏற்கனவே வாங்கிய புத்தகங்களில் செலவாகி விட்டது. அதனால் உங்களுடைய ஒரு புத்தகத்தை எடுத்து அரங்கிலேயே படித்தேன்; ஆர்கஸம் அடைந்த உணர்வு ஏற்பட்டது" என்றார். தயவுசெய்து இதைத் தவறாக அர்த்தப் படுத்திக் கொள்ளாதீர்கள். மற்றவர்கள் பரவசம் என்று சொன்னதையே அவர் அந்த வார்த்தையில் சொன்னார் ஆங்கிலத்தில் தீவிரமாக வாசிக்கும் ஒருவருக்கு திடீரென்று என் தமிழ் எழுத்து அறிமுகமாகும் போது ஏற்படக்கூடிய இன்ப அதிர்ச்சியை நான் புரிந்து கொள்கிறேன்.

ஒரு எழுத்தாளனாக அல்லாமல் ஒரு வாசகனாக என் எழுத்துக்களை நான் எதிர்கொள்ளும் போது அதில் நான் காணும் ஒரு அம்சம், அதன் சுவாரசியத்தன்மை. என் புத்தகத்தை எடுத்தால் கீழே வைக்க முடியாது; அதை முடித்து விட்டுத்தான் அடுத்த வேலையைத் தொட முடியும். இந்த நிலையில், பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பத்தி எழுத வாய்ப்பு தாருங்கள் என்று நான் கதவைத் தட்டாத பத்திரிகை இல்லை. நமது எம்ஜியார், முரசொலி என்ற இரண்டு பத்திரிகைகளைத் தவிர மற்ற எல்லாப் பத்திரிகைகளிடமும் கேட்டேன். *விகடன்* இணைய தளத்தில் எழுத வாய்ப்பு கிடைத்தது. அப்போதும் இதே போன்ற எதிர்வினைகளே வந்தன தினமும் ஐம்பது நூறு கடிதங்கள் ஒரு

ஆண்டுக்குப் பிறகு தொடர் நிறுத்தப்பட்டதும் மீண்டும் எழுத வாய்ப்பு கேட்டு *நமது எம்ஜியார்*, *முரசொலி* தவிர எல்லாப் பத்திரிகைகளிலும் ஒரு சுற்று சுற்றினேன். பலனில்லை. வாய்ப்பு தராவிட்டாலும் பரவா யில்லை; ஒரு பத்திரிகையில் என்னை மிக மோசமாக அவமானப் படுத்தினார்கள் பத்திரிகையோடு மளிகைக்கடை சாமான்களையும் இலவசமாகக் கொடுக்கும் பத்திரிகை அது. கேட்டால் உங்களைப் பதற வைக்கும். சொல்கிறேன். "முதலில் மாதிரிக்கு மூன்று கட்டுரை கள் கொடுங்கள்" என்றார்கள். கையால் எழுதிக் கொடுத்தேன் அப்போது டைப் செய்யும் பழக்கம் இல்லை. அவர்களின் அலுவலகத் திலேயே அதை டைப் செய்து பிழை திருத்துவதற்காக எனக்கு அனுப்பி வைத்தார்கள். பிழை திருத்திக் கொடுத்தேன். அக்கட்டுரைகளுக்காக என் வாழ்வின் மிக முக்கியமான ஞாபகங்களின் அடையாளமாக இருக்கும் புகைப்படங்கள் சிலவற்றையும் கொடுத்தேன்.

நை நை என்று யாரையும் எதற்காகவும் நச்சரிப்பது எனக்குப் பிடிக்காது. அதனால் ஒரு மாதம் விட்டுவிட்டேன். பிறகு ஒரு மாதம் கழித்து விசாரித்தேன். எம்.டி.யிடம் போயிருக்கிறது என்ற பதில் வந்தது. ஒரு வாரம் கழிந்தது. விசாரித்தேன். எம்.டி. அங்கே போயிருக்கிறார், இங்கே போயிருக்கிறார். மீண்டும் ஒரு வாரம் கழித்து விசாரித்தேன். எம்.டி.க்கு மந்திரி வேலை போய் விட்டது; டென்ஷனாக இருக்கிறார் என்று பதில் வந்தது. மீண்டும் ஒரு வாரம் கழித்துத் தொடர்பு கொண் டேன். மீண்டும் அதே பதில். மீண்டும் ஒரு வாரம் கழித்துத் தொடர்பு கொண்டேன். மீண்டும் எம்.டி.க்கு வேலை போன விஷயமே பதிலாகக் கிடைத்தது. ஒரு கட்டத்தில் ரொம்பவும் நொந்து போய், அவருக்கு வேலை போய் விட்டதால்தான் எனக்கு வேலை கிடைக்க மாட்டேன் என்கிறது என்ற விஷயத்தை நான் வணங்கும் பாபாவிடம் எடுத்துச் சொல்லி "பாபா, அவர் மீண்டும் கட்சியில் இணைந்து மந்திரி பதவி கிடைக்க அனுக்கிரஹம் செய்யுங்கள்" என்று மைலாப்பூர் பாபா கோவிலுக்குச் சென்று ஒவ்வொரு வியாழக்கிழமையும் தண்டம் பிடித்தேன். அவரும் கட்சியில் இணைந்தார். மந்திரி வேலையும் கிடைத் தது. ஆனால் என் கட்டுரைகள் மட்டும் திரும்பக் கிடைக்கவில்லை. அந்த அரிய புகைப்படங்களும் கோவிந்தா!

பத்தி எழுத வாய்ப்பு தராவிட்டால் பரவாயில்லை; தயவுசெய்து என் கட்டுரைகளையும், புகைப்படங்களையும் திரும்பக் கொடுத்து விடுங்கள் என்று மிகவும் பணிவான முறையில் பலமுறை கேட்டேன். ம்ஹூம். ஒன்றுமே பலனில்லை. ஒரு எழுத்தாளனுக்கு அவ்வளவுதான் மரியாதை என்று நினைத்துக்கொண்டேன்

திரும்பவும் சொல்கிறேன். என் எழுத்தை ஏழு ஆண்டுகளாக வெளி யிடும் *கலாகௌமுதியில்*கூட சில கட்டுரைகள் அவர்களுடைய பத்திரிகைக்கு ஒத்து வராததாக இருந்தால் வெளியிடுவதில்லை. இது பத்திரிகையின் சுதந்திரம். இதில் குறுக்கிட எனக்கு உரிமை இல்லை. நான் எழுதுவதை வெளியிட்டுத்தான் ஆக வேண்டும் என்று

என்றுமே நான் எதிர்பார்ப்பதில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நான் எழுதிய சிறுகதை ஒன்று *உயிர்மை*யில் மறுக்கப்பட்டது. அதற்காக கோபித்துக் கொள்ளவோ வருத்தப்படவோ என்ன இருக்கிறது? இதுவரை *உயிர்மை*யில் என்னுடைய ஒரு சிறுகதை கூட வந்ததில்லை என்பது எனக்கு ஒரு ஆதங்கம்தான். அதற்காக என்ன செய்ய முடியும்? ஆனால் அந்த மளிகைச் சாமான் பத்திரிகையில் என்னை அவமானப் படுத்தினார்கள். நான் அந்தப் பத்திரிகை ஆசிரியராக இருந்திருந்தால் "ஸாரி; கட்டுரைகளை வெளியிட முடியவில்லை" என்று நேரடியாகச் சொல்லி கட்டுரைகளையும் புகைப்படங்களையும் திருப்பிக் கொடுத் திருப்பேன். கட்டுரை திருப்பித் தரப்பட மாட்டாது என்று சொல்ல நான் என்ன அறிமுக எழுத்தாளனா?

ஆச்சரியமாகத்தான் இருக்கும். இவ்வளவு சுவாரசியமாக எழுதக்கூடிய ஒருவனுக்கு எழுதவே பத்திரிகை கிடைக்கவில்லை என்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. பிறகுதான் சாருஆன்லைன் என்ற இந்த இணையதளத்தை ஆரம்பித்தேன். பிறகுதான் *உயிர்மை* தொடங்கப் பட்டு அதிலும் எழுத ஆரம்பித்தேன் ஆனால் கடந்த ஏழெட்டு ஆண்டுகளில் கேரளா என்னை வெகுவாகப் பயன்படுத்திக் கொண்டது. தமிழ்ச் சூழல் என்னை அப்படிப் பயன்படுத்திக்கொள்ளாத வருத்தம் எனக்கு இன்னும் உண்டு. ஆனால் நிலைமை மாறி வருகிறது என் பதையே இந்த நண்பர்களின் கடிதங்கள் தெரிவிக்கின்றன. எனக்கு நீங்கள் தேவை. பார்த்திபன், கிருத்திகா, ம. பிரபு, நரேந்திர பாபு, கார்த்திக் ராமசாமி போன்ற வாசக நண்பர்கள் தேவை.

பார்த்திபன், நீங்கள் கிருத்திகா சொன்னதை சரியான அர்த்தத்தில் புரிந்து கொண்டதற்கு நன்றி. பொதுவாக எனக்கு வைபவங்களில் கலந்து கொள்வது கூச்சமாக இருக்கும். இதுவரை நான் பசுபதி, பாஸ்கர் ஆகிய நண்பர்களின் திருமணங்களுக்கு மட்டுமே சென்றிருக்கிறேன். ஆனால் உங்கள் திருமணத்துக்கு வருகிறேன்.

வாசகர்களின் பாராட்டுகளையும் புகழ்மொழிகளையும் கேட்கும் போது மேலும் ஒரு விஷயம் எனக்கு ஞாபகம் வருகிறது. சென்ற ஆண்டும்தான் பத்து புத்தகங்கள் வெளியிட்டேன். இந்த ஆண்டை விட சென்ற ஆண்டுதான் அதிகம் எழுதினேன். ஆனால் இப்போது கிடைக்கும் வரவேற்பில் நூற்றில் ஒரு மடங்கு கூட சென்ற ஆண்டு கிடைக்கவில்லை. இப்போது மட்டும் திடீரென்று ஏதோ மந்திர ஜாலம் நடந்தது போல் நடக்கிறது. என் ஆங்கிலப் பதிப்பாளர் கலிஃபோர்னியாவில் உள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் ஸீரோ டிகிரியின் ஆங்கிலப் பதிப்பு பாடமாக வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். பாரதியிலிருந்து தொடங்கி நகுலன், ப. சிங்காரம் என்று எல்லோரும் உழுததை நான் அறுவடை செய்துகொண்டிருக்கிறேன்.

என்னுடைய இந்த நிலைக்குக் காரணமாக இருக்கும் அனைவரையும் இங்கு நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

14.1.2010

கொஞ்சம் சுயபுராணம்

டியர் சாரு,

நான் உங்கள் எழுத்துக்களின் மிகத் தீவிரமான விசிறி. உங்களை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்த நண்பனுக்கு நன்றி. அதோடு உங்கள் புத்தகங்கள் இங்குள்ள வாடகை நூலகத்திலும் கிடைக்கின்றன. அங்கிருந்துதான் உங்கள் புத்தகங்களை எடுத்துப் படித்து வருகிறேன். உங்களிடம் என்னை வசீகரித்த முக்கியமான பண்பு, நீங்கள் கொஞ்சமும் சமரசம் செய்து கொள்ளாமல் எழுதுகிறீர்கள். மற்ற எழுத்தாளர்கள் அப்படி இல்லை. உங்கள் மனதில் பட்டதை – அது சரியோ தவறோ அதைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் – அப்படியே பட்டவர்த்தன மாக எழுதுகிறீர்கள். அதற்கு மிகப்பெரிய தைரியம் வேண்டும். ஆனால் உங்கள் எழுத்தை எதிர்கொள்வதற்கான மனோ திடமோ, முதிர்ச்சியோ, நகைச்சுவை உணர்வோ தமிழர்களாகிய எங்களிடம் இல்லை என்பதை எண்ணி வருத்தமடைகிறேன்.

உனக்குப் பிடித்த எழுத்தாளர் யார் என்று என் நண்பர்கள் கேட்கும்போதெல்லாம் உங்கள் பெயரைத்தான் சொல்கிறேன். ஆனால் அதற்கு அவர்கள் சொல்லும் பதில் என்ன தெரியுமா?

"ஓ அவனா, எப்போதும் செக்ஸ் பற்றியே யோசித்துக்கொண்டும் எழுதிக் கொண்டும் இருப்பானே. இதைக் கேட்டு எனக்கு எரிச்சல்தான் வரும். ஆனால் உடனே குஷ்வந்த் சிங் இந்தியர்களைப் பற்றி சொன்னதும் ஞாபகம் வந்துவிடும். அவர் சொன்னார், "இந்தியர்களுக்கு எப்போதும் கடவுள், செக்ஸ், பணம் என்ற மூன்றைப் பற்றித்தான் கவலை" என்று.

அவர்கள் அப்படிச் சொல்வதற்கு இன்னொரு காரணம், இன்றைய இளைஞர்களிடையே படிக்கும் பழக்கம் குறைந்துவிட்டது. நான் படிக்கும் பொறியியல் கல்லூரியில் (மூன்றாம் ஆண்டு) நான் எப்போதும் இலக்கியப் புத்தகங்களைப் படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து என் சக மாணவர்கள் என்னைக் கிண்டல் செய்யாத நாள் இல்லை. ஒருநாள் என் நண்பன் என்னைப் பார்த்து "உன் மனைவியோடு செக்ஸ் கொள்ளும்போது கூட புத்தகம்தான் படிப்பாயா?" என்று கேட்டான். பாவம், இந்த உலகத்தில் அவர்கள் எத்தனை அருமையான விஷயத்தை இழந்து கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று, அவர்களிடம் உங்கள் புத்தகங்களைக் கொடுத்தால் மிக ஆர்வமாகப் படிக்கிறார்கள். அது மட்டும் அல்ல; சினிமா நடிகர்களுக்கு இருப்பது போல் உங்களுக்கு எங்கள் கல்லூரியில் ஒரு பெரிய ரசிகர் மன்றமே இருக்கிறது.

Keep rocking Charu...

எஸ். செழியன்

தஞ்சாவூர்

30.1.2010

○

அன்புள்ள சாரு,

சொல்லிக்கொள்ளும் அளவுக்கு நான் சிறப்பு பெற்றவன் இல்லை. நீங்கள் ஆலமரம் என்றால் நான் அதன்கீழ் கிடக்கும் சருகு போல் தான் தகுதி கொள்வேன். ஆனால் இந்தக் கடிதத்தை உங்களுக்கு அனுப்புவதால் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

எல்லோரும் உங்கள் எழுத்தின் மீது கொண்டுள்ள அபிமானத்தை அவர்களின் கடிதங்கள் வாயிலாக அறிந்திருக்கிறேன். நான் அதிகம் பயன்படுத்தும் இணைய உலாவி கூகிள் நிறுவனத்தின் கூகிள் குரோம். அதில் அடிக்கடி உலாவப்படும் இணைய தளங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் அம்சமாக முதல் எட்டு தளங்களின் முதல் பக்கங்கள் திரைப்பிடிப்பாக முகப்புத் திரையில் இருக்கும். அப்படியான எனது கணினியின் குரோம் பயன்பாட்டில், தங்களது வலைத்தளம் ஐந்தாவது இணைப்புப் படமாக இருக்கிறது. இது கிடடத்தட்ட ஒரு வருட காலத்துக்கும் மேல் இருப்பதாகும்.

சொல்லப்போனால் தங்களுடையதுதான் பொதுத் தளங்களாக நான் படிப்பவற்றில் முதலிடம். இதில் பெருமையும் கொள்கிறேன். அதனால் இதனை உங்களிடம் இப்பொழுது பகிர்ந்து கொள்கிறேன் அது எப்படி என்றால், முதல் நான்கு வலைத்தளங்களில் மூன்று என் தொழில் சார்ந்தவை; நான்காவது நான் அவ்வப்போது – இல்லை அடிக்கடி – விளையாடச் செல்லும் இணைய விளையாட்டுத் தளமாகும்.

ஆக, வெளியுலக ரீதியாக நான் செல்லும் முதல் தளம் உங்கள் சாருஆன்லைன் தான். இரண்டு மணிநேரத்துக்கு ஒருமுறை அல்லது குறைந்தது ஒரு நாளைக்கு பத்து தடவையாவது சென்று தங்களின் புதிய பதிவுகள் உள்ளனவா என்று பார்ப்பேன். அதிலும் முதலில் பார்ப்பது டைட்டில் பார் தான். உங்கள் தளத்தில் புதிய பதிவுகளின் தலைப்பு டைடடில் பாரில் தெரிவது ஒரு நல்ல அம்சம். பக்கம் முழுமையாக பதிவேறுவதற்குள் டைட்டில் மாறியிருந்தால் உள் செல்வேன், இல்லையென்றால் மூடிவிடுவேன். என் கூகிள் குரோமில் உங்கள் தளம் முதலிடம் பெற வேண்டும். அதற்காக தினமும் நிறைய பதிவுகளை வெளியிடுங்கள்.

தங்கள் எழுத்துப் பணி மேலும் சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி தங்களுக்காக இறைவனுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு
இன்பராஜ்
1.2.2010

○

இவ்வளவுக்கும் காரணம், உயிர்மையும் மனுஷ்ய புத்திரனும். அவர் மட்டும் உயிர்மையை ஆரம்பிக்காமல் காலச்சுவடிலேயே இருந்திருந் தால் நானும் 300 பேருக்கு மட்டுமே எழுதிக்கொண்டிருந்திருப்பேன்.

இன்னொரு காரணம், கணினி வசதி, இணைய தளம். என் நண்பர் வாசு சொன்னார். சென்னையிலிருந்து அவர் தில்லிக்கு விமானத்தில் சென்றுகொண்டிருந்தபோது அவர் கையிலிருந்த அடியேனின் புத்தகத்தைப் பார்த்துவிட்டு பக்கத்திலிருந்த பெண்மணி என்னைப் பற்றிப் பேச ஆரம்பித்தாராம். தில்லி போய் சேரும் வரை பேச்சு நீடித்தது. என் எழுத்தை அவ்வளவு கடுமையாக விமர்சித்துப் பேசி இருக்கிறார். "விமர்சனமோ பாராட்டோ, அவ்வளவு நேரம் உங்கள் எழுத்தைப் பற்றி நடு வானத்தில் பறந்துகொண்டிருக்கும்போது விவாதித்துக்கொண்டிருந்தது த்ரில்லிங்–ஆக இருந்தது" என்றார் வாசு.

"அவருக்கு என்ன 60 வயது இருக்குமா?" என்றேன்.

"எப்படி அவ்வளவு சரியாகச் சொல்கிறீர்கள்?"

"இளைஞர்களுக்குத்தான் என் எழுத்து பிடிக்கிறது; அதனால் சொன்னேன்."

சமீபத்தில் நடந்த இன்னொரு சம்பவம். என் தோழி ஒருவர் அழகு நிலையத்துக்கு சென்றிருக்கிறார். தற்கொலைப் படை என்று சொல்கிறோமே, அந்த ரகம் அவர். அவர் கையிலிருந்த என் புத்தகத்தைப் பார்த்துவிட்டு அங்கே வந்த மற்றொரு பெண் ஆர்வத்துடன் பேசியிருக்கிறார். 'தற்கொலைப் படை'யின் போனிலிருந்து என்னோடும் பேசினார்.

"மிகவும் சோர்வான முகத்துடன் வந்த அந்தப் பெண் உங்களோடு பேசும்போது அடைந்த உணர்வை பரவசம் என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு சினிமா நட்சத்திரம் அல்லது மைக்கேல் ஜாக்ஸன் போன்ற பாப் ஸ்டாருக்குத்தான் இப்படிப்பட்ட ரசிகர்கள் இருப்பதைப் பார்த்திருக்கிறேன்" என்றார் தோழி.

அந்த முகம் தெரியாத வாசகி பேசியதிலிருந்து நானும் அதை உணர முடிந்தது.

"அவ்வளவு பரவசம் அடையும் அந்தப் பெண்ணிடம் என் தொலை பேசி எண்ணைக் கொடுத்தீர்களா?" என்று தோழியிடம் கேட்டேன். முறைத்தார்.

சமீபத்தில் *உயிர்மை*யில் சாருஆன்லைன் பற்றி வந்துள்ள ஒரு தகவல் மிகவும் உற்சாகமளிப்பதாக இருந்தது. இதை மனுஷ்ய புத்திரனைத் தவிர வேறு யாரும் இவ்வளவு வெளிப்படையாக சொல்லியிருக்க மாட்டார்கள். அந்தக் கட்டுரையில் அவர் *உயிர்மை*யை விட அதிக வாசகர்களால் சாருஆன்லைன் படிக்கப்படுகிறது என்று குறிப்பிடுகிறார். இதற்குக் காரணமாக இருந்த உங்கள் அனைவருக்கும், என்னுடைய கட்டுரைகளை இரவு பகல் பாராமல் பதிவேற்றம் செய்து வரும் தங்கவேலுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1.2.2010

மன்னனின் வாழ்க்கை

பைபிள் என்றால் நமக்கு ஒரு பைபிளைத்தான் தெரியும். ஆனால் இன்னொரு பைபிளும் இருக் கிறது. உலகில் பல இடங்களில் தயாரிக்கப்படும் பல்வேறு விஸ்கி வகைகளைப் பற்றிய விபர நூல்களில் விற்பனையில் முதல் இடம் வகிக்கும் நூலின் பெயர் பைபிள். இந்த ஆண்டின் சிறந்த விஸ்கி என்று பைபிள் தேர்ந்தெடுத்திருக்கும் விஸ்கியின் பெயர் Old Parr Superior. 18 ஆண்டுகள் பழமையானது. நம்மூர் விலைக்கு ஐந்தாயிரமோ என்னவோ சொன்னார் நண்பர். நான் பொதுவாக விஸ்கி குடிப்பதில்லை என்றாலும் பைபிளில் முதல் பரிசு வாங்கியிருப்பதால் குடித்தேன். அமர்க்களமாக இருந்தது.

எனக்கு மது பிடிக்கும். ஆனால் டாஸ்மாக் மது அல்ல. தமிழர்கள் குடிப்பது குடியே அல்ல. இவர் கள் குடிப்பது குடும்பத்தையே அழிக்கும் குடி. அதனால்தான் தமிழ்நாட்டுப் பெண்களுக்கு குடி என்றாலே அப்படி இவ்வளவு பெரிய துவேஷம் ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பெண்ணுமே குடி பற்றிய கசப்பான அனுபவங்களைக் கொண்டிருக் கிறார். எனவே, குடி பற்றிய என்னுடைய அணுகு முறைக்கும் மற்றவர்களின் நடைமுறைக்கும் சிறிதும் சம்பந்தமில்லை. நான் ஒரு அரசனைப்

போல் குடிப்பவன். சமீபத்தில் நானும் நண்பர் குமரனும் கதீட்ரல் சாலையில் உள்ள ஸரா என்ற பாருக்கு சென்றிருந்தோம். அந்த ஸ்பானிஷ் பாருக்கு சென்று இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அங்கே எல்லாமே ஸ்பானிஷ்தான். நல்ல உணவு கிடைக்கும். கழிப்பறையில் கூட Hombre என்றுதான் போட்டிருக்கும். 'ஓம்ப்ரே' என்றால் ஆண் என்று பொருள்.

ஆனால் அன்றைய தினம் ஸரா வாசலிலேயே அதிர்ச்சி காத்திருந்தது, அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பால குருசாமியின் வடிவில். துணைவேந்தர் வாசலிலேயே நின்று கொண்டிருந் தார். என்னால் நம்பவே முடியவில்லை. ஒருவேளை பக்கத்திலுள்ள இடத்துக்கு வந்து காருக்காக காத்திருக்கிறாரா? அப்படி இருந்தால் அதற்கு ஸரா வாசலில் ஏன் நிற்க வேண்டும்? பனை மரத்துக்கு அடியில் நின்று பாலைக் குடித்தாலும் கள் என்றுதானே சொல்வார்கள் கெட்டவர்கள்? தமிழ்நாட்டின் துணைவேந்தர்கள் பல்கலைக்கழகத் தின் வாசலில் நின்றுகொண்டு மாணவிகள் துப்பட்டா அணிந்து மறைக்க வேண்டியதையெல்லாம் மறைத்துக் கொண்டிருக்கிறார்களா இல்லையா என்று சோதனை செய்துகொண்டிருப்பதைத்தான் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்படி பார் வரைக்கும் வந்து சோதிப்பார்கள் என்று கேள்விப்பட்டதில்லையே?

நான் பி.யூ.சி. படித்துக்கொண்டிருந்தபோது நடந்த ஒரு சம்பவம் ஞாபகம் வந்தது. நானும் நண்பனும் ஒருநாள் அபீன் என்றால் எப்படி இருக்கும் என்று பார்ப்பதற்காக அபீன் கடைக்குச் சென்றோம். அப்போது அங்கே எங்களுடைய பள்ளியின் தமிழாசிரியர் நின்று கொண்டிருந்தார். அவர் என் நைனாவுக்கு நண்பர் வேறு. மிரண்டு போய் ஓடி வந்துவிட்டோம். நல்லவேளை, அவர் நைனாவிடம் சொல்லவில்லை. நாங்கள் அபீன் வாங்கத்தான் வந்திருப்போம் என்று அவர் நம்பியிருக்க மாட்டார் என்று நினைக்கிறேன்.

ஸராவின் உள்ளே நான் கண்ட காட்சியைச் சொன்னால் உங்களால் நம்பவே முடியாது. அது ஒரு சனிக்கிழமை. உள்ளே இருந்தவர்களில் 80 சதவிகிதம் பெண்கள் அவர்களின் உடையும் உருவமும்தான் இன்னமும் ஆச்சரியமாக இருக்கிறது. அத்தனை பேரும் ஆறு அடிக்கு மேல் இருந்தார்கள் இது அவர்கள் அணிந்திருந்த ஹைஹீல்சை சேர்க்காமல் சொல்கிறேன். நடந்தால் கூரை இடித்தது. எல்லோரும் குனிந்து குனிந்தே சென்றார்கள் 20 இலிருந்து 25 வயது. இரண்டே இரண்டு பெண்களைத் தவிர மற்றவர்கள் அனைவரும் மிக மிக மிக அபாயகரமான மினி ஸ்கர்ட் அணிந்திருந்தார்கள். மேலே ஒரு முண்டா பனியன். ஆனால் கச்சை அணிந்திருந்ததுதான் துரதிர்ஷ்டம். எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தும் கண்கள் தொடைகளின் பக்கம் செல்வதைத் தவிர்க்கவே முடியவில்லை. எல்லோரும் ஏதோ லாஃபிங் தெரபி வகுப்புக்கு வந்தது போல் சிரித்துக்கொண்டே இருந்தார்கள். 'இவர்களெல்லாம் யார்? இவர்களுக்குத் தமிழ் தெரியுமா?

மென்பொருள் துறையா? ஒரு நாளில் 5000 ரூ. செலவு செய்ய வேண்டு மானால் இவர்களின் மாத வருமானம் எவ்வளவு இருக்கும்? சென்னை யில் இவர்களெல்லாம் எங்கே வசிக்கிறார்கள்?' என்று பல கேள்விகள் எனக்குள் எழுந்துகொண்டிருந்தன.

எனக்கு நேர் எதிரே ஒரு பாந்தமான பழுப்பு நிறப் பெண் சுடிதார் அணிந்து குடித்துக்கொண்டிருந்தாள். பதினோரு மணிக்குக் கிளம்பும் வரை அவளை விட்டு என் பார்வை அகலவில்லை. அவளுடைய ஒரே ஒரு பார்வை வீச்சுக்காக என் மனம் இறைஞ்சியது என்றே சொல்ல வேண்டும்.

நானும் குமரனும் மார்ட்டினி ஸ்ட்ராபரி குடித்தோம். ஒரு ஐஸ் கட்டிக்குள் சிவப்பு நிற பல்ப் ஒளிர்ந்துகொண்டிருந்தது பார்க்க ரம்மியமாக இருந்தது. போதையில் யாரும் அந்த ஐஸ் கட்டியை விழுங்கி விடாத அளவுக்குப் பெரிதாக இருந்ததால் கவலை இல்லை. சென்ற மாதம் இந்தியா வந்த ராக்லண்ட் சிவா எனக்காகக் கலக்கிக் கொடுத்த மார்ட்டினி ஞாபகம் வந்தது.

ஸரா அனுபவத்தைப் பற்றி என் தோழியிடம் சொல்லிக் கொண்டிருந்த போது 'ஒரு அரசன் கூட இப்படி வாழ்ந்து கொண்டிருக்க முடியாது' என்றார். உண்மைதான். ஆனால் இப்போது இதை டைப் செய்து கொண்டிருக்கும் போது அரசனுக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா? அவனுக்குத் தின்னவும் குடிக்கவும் மீன்களையும் விதவிதமான மதுபானங்களையும் அன்றாடம் அனுப்பிவிடும் கடவுள் அவனுக்குத் தேவையான மீன் வலையை எப்போது தரப் போகிறார்?

2.2.2010

மீண்டும் காலை வணக்கம்

எப்படி ஆரம்பிப்பது, எங்கிருந்து ஆரம்பிப்பது என்று தெரியவில்லை. ஏனென்றால், எழுதப் போவது எனக்கு மிகுந்த கூச்சத்தைத் தரும் விஷயம். மேலும், இந்த விஷயம் பற்றி பலமுறை எழுதி உங்களையெல்லாம் மண்டை காய வைத் திருக்கிறேன். அதோடு, இதை எழுதுவதால் என் அந்தரங்க வாழ்வில், நண்பர்களுடனான உறவில் மிகுந்த இழப்புகள் ஏற்படுகின்றன. இருந்தாலும் இதை எழுதாவிட்டால் இது எனக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்து குடைச்சல் கொடுத்துக் கொண் டிருக்கும். அதனால் எழுதி விடுகிறேன், எப்படியோ.

'இப்போதெல்லாம் சாருஆன்லைனில் கட்டுரை கள் குறைந்து விட்டன; அதனால் ரேங்க் பட்டிய லில் நம் இணைய தளம் கீழே விழுந்துவிட்டது' என்று பல நண்பர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். இந்த ரேங்க் பட்டியலெல்லாம் நம்மை எந்த விதத்திலும் பாதித்துவிடாது. ஏனென்றால், கடந்த இரண்டு ஆண்டுகளில் என்னுடைய 20 புத்தகங் கள் வெளிவந்துவிட்டன இந்த ஆண்டு என் நாவலும் வெளிவரும். சென்ற மாதம் முழு வதும் என் நாவலின் பத்து அத்தியாயங்களை எழுதிக் கொண்டிருந்தேன். அவ்வளவுதான்

இப்போது விஷயத்துக்கு வருவோம். எப்போதும் எனக்கு காலை நான்கு மணிக்கு விழிப்பு வந்துவிடும். அது சாபமா வரமா தெரிய வில்லை. இரவு 12 மணிக்குப் படுத்தாலும் மணி அடித்தது போல் நான்கு மணிக்குத் தெளிவான விழிப்பு. சிலபேர் விழித்த பிறகும் கொஞ்ச நேரம் படுக்கையிலேயே புரண்டு கொண்டிருப்பார்கள்; கண்களைக் கசக்கிக்கொண்டு தூக்கக் கலக்கத்துடனேயே எழுந்து கழிப்பறை செல்வார்கள்; பல் துலக்குவார்கள். நிலைக்கு வரவே ரொம்ப நேரம் ஆகும். ஆனால் உங்களின் உறக்கம் ஆழமாக இருந்தால் எழுந்த உடனேயே உங்கள் மனதிலும் உடம்பிலும் ஒரு துள்ளல் தெரிய வேண்டும். எழுந்த உடனேயே கூர்மையான விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். 12 மணிக்குப் படுத்து 4 மணிக்கு எழுந்தாலும் எனக்கு இப்படித்தான் இருக்கும். இதற்குக் காரணம், தியானம். எத்தனை மணிக்குப் படுத்தாலும் ஒரு பத்து நிமிடம் தியானம் செய்துவிட்டுத் தூங்கினால் காட்டில் விறகு வெட்டிவிட்டுத் தூங்குவது போல் ஒரு ஆழமான உறக்கத்தில் ஆழ்வோம். பல பேர் மோட்டார் சைக்கிளில் செல்வதால் முதுகு வலி அந்த வலி இந்த வலி என்று சொல் கிறார்கள். தியானம் செய்தால் எப்பேர்ப்பட்ட உடல் வலியும் பஞ்சாய்ப் பறந்துவிடும். தூக்கம் வரவில்லை என்று பலபேர் புலம்பித் தள்ளு கிறார்கள்.

நான்கு மணிக்கு எழுந்ததும் 21 நிமிடம் ஆயில் புல்லிங் செய்வேன். பிறகுதான் பல் துலக்குவேன். அதன் பிறகு பாலைச் சுட வைத்து, ஃபில்டரில் காபித் தூளைப் போட்டு, அதில் கொஞ்சமாய்க் கொஞ்சம் சீனியைப் போட்டு (அப்போதுதான் டிகாஷன் நன்றாக வடியும்), அதில் வெந்நீர் ஊற்றி வைத்துவிட்டு கொஞ்ச நேரம் மெயில் பார்ப் பேன். பால் சுட்டிருக்கும். அதற்குள் டிகாஷனும் தயார். காப்பி என்றால் எனக்குக் கொதிக்கக் கொதிக்க இருக்க வேண்டும். நுரையே காணக் கூடாது.

அப்படி ஒரு முதல்தரமான டிகிரி காபியைக் குடித்து விட்டு பப்புவை வாக்கிங் அழைத்துச் செல்வேன். அரை மணி நேரம். பிறகு பப்புவை வீட்டில் விட்டு விட்டு வீட்டின் முன்பகுதியில் உள்ள தோட்டத்தில் ஸோரோவுடன் பந்து விளையாடுவேன். ஸோரோவை வாக்கிங் அழைத்துச் செல்வதில்லை. அதன் உருவத்தைப் பார்த்து பலரும் அச்சமடைகிறார்கள்; ஸோரோவும் தன் பங்குக்கு அவர்களைக் கடிப்பது போல் பாய்ந்து பயமுறுத்தும். அதனால்தான் வீட்டுத் தோட்டத்திலேயே பந்து விளையாட்டு. பந்தை தூரமாக விட்டெறி வேன். ஸோரோ குதிரைப் பாய்ச்சலில் சென்று அதை எடுத்துக் கொண்டு ஓட்டமாய் ஓடி வந்து என் கையில் கொடுக்கும். உடனே என் கையில் வைத்திருக்கும் பிஸ்கட்டில் பாதியைக் கொடுப்பேன். அந்த நேரத்தில் திரும்பவும் பந்தை விட்டெறிவேன். திரும்பவும் ஸோரோ குதிரைப் பாய்ச்சலில் ஓடிச் சென்று எடுத்து வந்து கையில் கொடுக்கும். திரும்பவும் பிஸ்கட். திரும்பவும் பந்து. இப்படியே

எனக்கு அலுக்கும் வரை இந்த விளையாட்டு தொடரும். ஆமாம், எனக்குத்தான் அலுத்துப் போகுமே தவிர வாயில் நுரை தள்ளினாலும் சளைக்காமல் ஆர்வமாக ஓடிக்கொண்டே இருக்கும் ஸோரோ நின்றால் நான்கு அடி, கால்களைத் தூக்கினால் ஏழு அடி உயரம் உள்ள க்ரேட் டேன் ரக நாய்கள் இப்படி ஓடியாடினால்தான் ஆரோக் கியமாக இருக்கும். காதல் கொண்ட பெண்ணை சுகிப்பதே பேரின்பம் என்று நினைப்பவன் நான். சிலர் ஆன்மீக அனுபவமே பேரின்பம் என்பார்கள் எது எப்படி இருந்தாலும் என்னைப் பொறுத்தவரை ஸோரோவுடன் பந்து விளையாடுவதைப் போன்ற பரவச உணர்வு வேறு எதிலும் கிடைத்ததில்லை.

நாய்களைப் பற்றித் தெரிந்த பயிற்சியாளர்கள் பலர் பப்புவையும் ஸோரோவையும் பார்த்துவிட்டு 'நாய் ஷோ'வுக்கு அழைத்துச் செல்லலாமே என்று சொல்வதைப் பார்த்திருக்கிறேன். இந்தக் கொலை கார தேசத்தில் அம்மாதிரி காரியத்திலா ஈடுபடுவேன்? எழும்பூரில் நடக்கும் அந்த நாய் கண்காட்சியில் வெயில் தாங்காமல் ஒவ் வொரு கண்காட்சியிலும் சில நாய்கள் செத்து விழுகின்றன. கொலை காரப் பாவிகள்

நாய்கள் என்று இல்லை; மனிதர்களுக்குமே உடற்பயிற்சி தேவை என்று நமக்கெல்லாம் தெரியும். ஆனால் செய்வதில்லை. சமீபத்தில் ஒரு நண்பர் என்னிடம் கேட்டார், "தமிழர்களிடம் உங்களுக்குப் பிடிக்காத ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லுங்கள்?" என்று. "உடற் பயிற்சியே செய்யாமல் பானை பானையாக சோற்றைக் கொட்டிக் கொண்டு தொப்பை வளர்ப்பது" என்று பதில் சொன்னேன். இந்தத் தொப்பைதான் நோய்களுக்குக் காரணம். இந்த உலகத்திலேயே தமிழ்நாட்டைப் போல் மருத்துவர்கள் பெருகிக் கிடக்கும் பூமி வேறு எங்கும் இல்லை. யாரைக் கேட்டாலும் உடம்பு சரியில்லை; மூட்டு வலி, வயிற்று வலி, ஜுரம், தலைவலி, ஜலதோஷம் என்கிறார்கள். உலகத்தில் எத்தனை விதமான வியாதிகள் உண்டோ அத்தனையும் இந்தத் தமிழ்நாட்டில் உண்டு. இத்தனைக்கும் காரணம், சோம்பேறித் தனம்.

ஸோரோவுடன் பந்து விளையாடி முடித்த பிறகு தியானம் செய்வேன். காலையில் முடியாவிட்டால் மாலையில் செய்வேன். ஸரா போன்ற பப்புகளுக்கு செல்வதாக இருந்தால்கூட தியானத்தை முடித்து விட்டுத்தான் செல்வேன்.

நீங்கள் நம்புவீர்களோ இல்லையோ, என்னை மிக நெருக்கமாக அறிந்த நண்பர்களுக்குத் தெரியும். இதுவரை எனக்கு ஜலதோஷம், ஜுரம் போன்ற எந்த வியாதிகளும் வந்ததில்லை. பைபாஸ் சர்ஜரியின் போது நான் சொன்ன பதிலைக் கேட்டு அத்தனை மருத்துவர் களும் மிரண்டு போயிருக்கிறார்கள் உடல் ரீதியான அவர்களின் கேள்விகளுக்கு என்னுடைய ஒரே பதில்: "எனக்குத் தெரியாது; இதுவரை நான் மருத்துவரிடம் சென்றதில்லை." பைபாஸ் சர்ஜரிக்குப்

பிறகும் அதே நிலைதான். ஊர் பூராவும் பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல் என்று திமிலோகப்பட்டுக்கொண்டிருக்கும். ஆனால் அடியேனை எதுவும் தீண்டாது. தயவு செய்து தவறாக எண்ணாதீர்கள். நான் ஒன்றும் அசாதாரணமானவன் இல்லை. தினமும் உடற்பயிற்சி செய்வேன். அது ஒன்றுதான் என் ஆரோக்கியத்துக்குக் காரணம். ஆனால் அது மட்டும் அல்ல என்று இப்போது இந்த நிமிடம் தோன்று கிறது. என் மனம் எப்போதும் ஆனந்தமாக இருக்கிறது; ஆனந்தத் திலேயே தோய்ந்திருக்கிறது. போட்டி, பொறாமை, துவேஷம் போன்ற எந்த உணர்வுகளும் என்னை நெருங்க விடுவதில்லை. முக்கியமாக, பொய் சொல்வதில்லை. அப்படியே சொன்னாலும் ஏதோ ஒரு இக்கட்டிலிருந்து விலகுவதற்காகவே சொல்லப்பட்டதாக இருக்கும். என் ஆரோக்கியத்துக்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். போதுமான உடற்பயிற்சியும், ஆனந்தமான மனநிலையும் இருந்தால் ஆரோக்கியமும் இளமையும் உத்தரவாதம். இவ்வளவுக்கும் நான் ஒரு சாதாரண மத்தியதர வர்க்க வாழ்க்கைச் சூழலில் இருந்து கொண்டிருப்பவன்.

ஆனாலும் 2009 டிசம்பரில் வைரஸ் ஜுரத்தில் விழுந்ததற்குக் காரணம் நான்தான். பத்து புத்தகங்களுக்கு ப்ரூஃப் ரீடிங் பார்க்க வேண்டும். உலகிலேயே மிகக் கொடுமையான வேலை அது. அந்த வேலையையே செய்துகொண்டிருந்தால் பைத்தியம் பிடித்தாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை. மேலும், என்னுடைய எழுத்துக்கு என்னைத் தவிர வேறு யாரும் பிழை திருத்தம் செய்ய முடியாது. அப்படி நான் பிழை திருத்தம் செய்து கொடுத்தும் ஒரு ப்ரூஃப் ரீடர் நான் திருத்தியதற்கு மேல் அவர் கை வைத்து குழப்படி செய்வது உண்டு. நான் கெரில்லா என்று எழுதியிருப்பேன். அவர் கொரில்லா என்று மாற்றியிருப்பார். அந்த நேரம் பார்த்து அவந்திகாவும் ஊரில் இல்லை. நானே சமையல். பப்பு, ஸோரோ வேறு. இப்படி 10 புத்தகங்களுக்கு பிழை திருத்தம் செய்துகொண்டு, சமையல் இத்யாதி வேலைகளையும் செய்து கொண்டிருந்த நிலையில் என்னால் தியானம் செய்ய முடியாமலே போனது.

டிசம்பர் பூராவும் தியானம் செய்யவில்லை. அதனால்தான் ஊரெல் லாம் வைரஸ் தாக்கியபோது நானும் பாதிப்புக்கு உள்ளானேன். தினமும் ஒரு 40 நிமிடம் என் பொருட்டு ஒதுக்கியிருந்தால் அந்த வைரஸ் ஜுரத்திலிருந்து தப்பியிருக்கலாம். அந்த 40 நிமிடத்தில் கூட பிழை திருத்தம் செய்யலாமே என்று கணக்கு போட்டேன் ஆனால் நஷ்டம் எனக்குத்தான். வைரஸ் ஜுரத்தில் விழுந்ததால் பல தினங்கள் விரயமாயின.

இந்தப் பின்னணியில் நேற்று காலையில் எனக்கு நடந்த சம்பவத்தை விவரிக்கிறேன். எப்போதும் போல் எழுந்தவுடன் ஆயில் புல்லிங் செய்யவில்லை. எப்போதும் போல் காபி குடிக்கவில்லை. எப்போதும் போல் தியானமும் செய்யவில்லை. அதெல்லாம் கூட பரவாயில்லை; பப்புவை வாக்கிங் அழைத்துச் செல்லவில்லை என்பதுதான் பயங்கர

மான கொடுமை. ஏனென்றால், ஸோரோ என் வீட்டுத் தோட்டத்திலேயே கக்கா போய் முடித்து விடும். ஆனால் பப்பு வீட்டுக்கு வெளியே தான் கக்கா போகும். தோட்டத்தில் போகவே போகாது. அதுவும் பக்கத்து வீட்டு (முன்னாள்) மினிஸ்டர் வீட்டு வாசலில்தான் போகும். அது என்னவென்றே தெரியவில்லை. போன ஜென்மத்தில் மினிஸ்டருக்கும் பப்புவுக்கும் ஏதாவது விட்ட குறை தொட்ட குறையோ என்னவோ, ஒன்றும் புரியவில்லை. ஆனால் மினிஸ்டரும், அவர் வீட்டு மனிதர்களும் நல்லவர்கள். ஒன்றும் ஆட்சேபணை செய்வதில்லை. இப்படியே எல்லா அரசியல்வாதிகளும் இருந்தால் தேசம் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்துக் கொள்வேன்.

நேற்று பப்புவையும் வாக்கிங் அழைத்துச் செல்லாததால் என் மீது முன்னங்கால்களைப் போட்டு அழைத்துப் போ அழைத்துப் போ என்று மன்றாடிக்கொண்டிருந்தது. 'அந்தாண்ட போ' என்று பெருங் குரலில் கத்தி அதை உட்கார்த்தி வைத்து விட்டு, ஒரு அவசர வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தேன். அப்படி என்ன அவசர வேலை?

அது ஒரு பெரிய கதை. பெங்குவின் பதிப்பகத்தை விட சர்வதேச அளவில் பிரபலமான ஒரு ஆங்கிலப் பதிப்பகம் 50 Modern Indian Classics என்று ஒரு தொகுப்பைக் கொண்டு வருகிறது. அதில் ஸீரோ டிகிரியும் ஒன்று. அதைப் பற்றி கனடாவில் வசிக்கும் ஒரு ஆங்கில விமர்சகர் எழுதுகிறார். அந்தத் தொகுப்பில் எனக்குப் பிடித்த ஒரு க்ளாஸிக் பற்றி எழுதக் கேட்டது அந்தப் பதிப்பகம். நான் ப. சிங்காரத்தின் புயலிலே ஒரு தோணி பற்றி எழுதுவதாகச் சொல்லியிருந்தேன் எழுதியும் ஆயிற்று. அதில் சில விஷயங்களைச் சேர்த்து அனுப்ப வேண்டும். டிசம்பர் 31 கடைசி தேதி. டிசம்பர் மாதம் முழுவதும் கடுமையான வேலை, வைரஸ் ஜுரம் என்று புயலிலே ஒரு தோணி பற்றி நினைக்கவே நேரமில்லை. ஜனவரி முழுக்க நாவலில் விழுந்து விட்டேன். ஜனவரி 31 வரை கெடு வைத்தார்கள். அப்போதும் செய்ய முடியவில்லை. பிப்ரவரி 7 வரை கொடுத்தார்கள். நானும் கட்டுரையை எழுதிவிட்டேன். கொஞ்சம் சரி பார்த்து அனுப்பி வைக்க வேண்டும். நேரம் கிடைக்கவில்லை.

இதற்கிடையில் என் பப்பு, ஸோரோ இரண்டுக்கும் உணவு கொடுப்பதிலிருந்து எனக்கு உணவு தயாரிப்பதிலிருந்து அத்தனை வேலையும் என் தலையில் விழுந்திருந்தது. அது தவிர, அவந்திகாவுக்கு ஏதோ ஒரு நோய் வந்து, படுத்த படுக்கையாகி, 'செத்து விடுவேன் போலிருக்கிறது' என்று என்னை பயமுறுத்திக் கொண்டிருந்தாள் 12.12.2009 அன்று என்னுடைய புத்தக வெளியீட்டு விழா நடந்தது. மாலை ஆறு மணிக்கு விழா. நான் ஐந்து மணிக்கு அமிஞ்சிக்கரையில் உள்ள பில்ராத் மருத்துவமனையில், அவந்திகாவுக்கு எலி ஜுரமா, பூனை ஜுரமா அல்லது வேறு ஏதாவது ஜுரமா என்று ரிசல்டுக்காக காத்துக்கொண்டிருந்தேன். சாதா ஜுரம்தான் என்று தெரிந்ததும் அங்கிருந்து விழா நடக்கும் இடத்துக்கு விழுந்தடித்துக்கொண்டு

ஓடி வந்தேன்.

"உங்களுக்காக இத்தனை பேர் வந்திருக்கிறார்கள்; அந்த சந்தோஷமே இல்லாமல் ரொம்ப 'டல்'லாக இருக்கிறீர்களே?" என்று அன்றைய தினம் என்னைக் கேட்காதவர்களே கிடையாது.

இப்போது நேற்று காலை நடந்த விஷயத்துக்கு வருவோம். கக்கா போகணும் வா, வா என்று என்னை முன்னங்கால்களால் அடித்து கெஞ்சிக் கொண்டிருந்த பப்புவை அதட்டி உட்கார வைத்து விட்டு நான் அவசர அவசரமாக செய்துகொண்டிருந்த வேலை, ஆங்கிலப் பதிப்பாளருக்கு அனுப்ப வேண்டிய புயலிலே ஒரு தோணி பற்றிய கட்டுரையை செப்பனிட்டுக்கொண்டிருந்ததுதான். காலை ஏழு மணிக்குள் சென்றாக வேண்டும். அந்த நேரம் பார்த்து கேரளாவிலிருந்து ட்டி.டி. ராமகிருஷ்ணன் பேசினார். *கலா கௌமுதியில்* தொடராக வந்துகொண்டிருந்த 'ராஸ லீலா' மலையாளத்தில் புத்தகமாக வர இருக்கிறது. அது சம்பந்தமான சில எடிட்டிங் வேலைகள் பாக்கி இருந்தன. அதற்காக நான் கேரளா செல்ல வேண்டும். அதற்கு நேரம் கிடைக்காமலே இருந்ததால் அதை போனிலேயே முடித்து விடலாம் என்று பேசிக்கொண்டிருந்தோம்.

இந்த நிலையில் காலை ஐந்தரை மணிக்கு என்னுடைய chat box-இல் குட் மார்னிங் என்ற செய்தி வந்தது. பாரிஸிலிருந்து என் தோழி நிரஞ்சனா அரண்டு மிரண்டு போய் என்னுடைய ஸ்டேடஸை பார்த்தால் அது இள்விஸிபிளில் இல்லை; உடனடியாக அதை இன் விஸிபிளில் மாற்றினேன். அதற்கு, "என்ன, என்னைப் பார்த்ததும் இன்விஸிபிளில் போட்டுவிட்டீர்கள்?" என்று வந்தது. நான் எதையும் கண்டுகொள்ளாமல் என் வேலையில் முழு மூச்சில் மூழ்கியிருந்தேன். ஏழு மணிக்குள் புயலிலே ஒரு தோணி போயாக வேண்டும். "குட் மார்னிங் சொன்னால் பதிலுக்கு ஒரு குட் மார்னிங் சொல்லக்கூட நேரம் இல்லையா?" என்று அடுத்த செய்தி வந்தது. அதையும் கண்டு கொள்ளாமல் வேலையைச் செய்து கொண்டிருந்தேன். "ஒரு குட் மார்னிங் சொல்ல எவ்வளவு நேரம் ஆகும்? அதற்குக்கூட நேரம் இல்லாமல் அவ்வளவு பிஸியா?" என்று செய்தி தொடர்ந்தது. அதையும் பார்த்து விட்டு நான் பாட்டுக்கு வேலையில் மூழ்கியிருந்தேன். பப்பு இன்னமும் என்னை கக்கா போக வேண்டும், வா வா என்று கெஞ்சி அழுது கொண்டிருந்தது.

இவ்வளவுக்கும் 'காலை வணக்கம்' soliloquyயாக ஓடிக்கொண்டிருந்தது.

இப்போது என் கேள்வியெல்லாம் இதுதான். ஏன் பெண்கள் மட்டுமே இவ்வாறு நடந்துகொள்கிறார்கள்? ஆண்களோடு இம்மாதிரி காலை வணக்கப் பிரச்சினை வந்ததே இல்லையே? ஆனால் தொடர்ந்து பெண்களோடு மட்டுமே இந்தப் பிரச்சினை வருவதற்குக் காரணம் என்ன? இதில் இன்னொரு சிக்கல் என்னவென்றால், புத்தகக் கண் காட்சியில் என்னைப் பார்த்த பல வாசகர்கள் "ஹலோ குட்மார்னிங்"

என்று சொல்லிவிட்டு "ஓ, உங்களுக்குத்தான் குட்மார்னிங் என்றால் பிடிக்காதே?" என்று நக்கலடித்தார்கள். அடப்பாவிகளா! நான் எந்த சூழ்நிலையில் சொல்கிறேன் என்று கொஞ்சமாவது புரிந்து கொள்ளக் கூடாதா? நாகேஸ்வர ராவ் பார்க்கில் நான் தியானத்தில் இருந்தபோது ஸ்ரீவில்லிபுத்தூர் ராகவன் என்ற நண்பர் "அறிவழகன், அறிவழகன்" என்று என்னுடைய பூர்வாசிரமப் பெயரைச் சொல்லி என்னைத் தட்டி எழுப்பி "பை, பை, நான் கிளம்புகிறேன்" என்று சொன்னது மாதிரிதான் இந்தக் காலை வணக்கமும் என்பதே என் கட்சி.

தவம், தியானம், கலவி, எழுத்து எல்லாவற்றுக்கும் நீங்கள் உங்களை மறக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சிருஷ்டிகர மனநிலையில் இருக்கும்போது குட்மார்னிங் என்று சொல்வதில் கூட எதுவும் தப்பில்லை; ஆனால் பதில் வரவில்லை என்றதும் "ஒரு குட்மார்னிங் சொல்ல ரெண்டு நொடி ஆகுமா? அந்த ரெண்டு நொடி கூடவா இல்லாமல் பிஸியாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டால் அம்மாதிரி ஜென்மங்களை என்ன செய்யலாம்? எனக்கு மனமே ஆறவில்லை. அதனால் சொல்கிறேன். கலவியில் ஈடுபட்டிருக்கும் போது ஆணுக்கு ஒரு உச்ச கட்டம்; பெண்ணுக்கு ஒரு நீண்ட உச்ச கட்டம் வரும். அந்த நேரம் பார்த்து கதவைத் தட்டி விட்டு, கதவைத் திறக்கவில்லை என்றதும் 'இன்னா மேன், ஒரு குட்மார்னிங் சொல்ல ரெண்டு ஸெகண்ட் ஆவுமா? இப்புடி இருக்கியே?' என்று கேட்டால், அதற்கு என்ன பதில் சொல்லட்டும்? கதவைத் திறந்து குட் மார்னிங் சொல்லிவிட்டு மீண்டும் யோனியில் சொருக முடியுமா?

இவ்வளவு கடுமையாக எழுதுவதற்கு மன்னியுங்கள் நிரஞ்சனா எனக்கு வேறு எப்படியும் எழுதத் தெரியவில்லை. ஏனென்றால் இந்தப் பிரச்சினை பற்றி பலமுறை எழுதி 'குட் மார்னிங் சொன்னால் தான் உங்களுக்குப் பிடிக்காதே' என்று பலரும் நக்கலடிக்கும் அளவுக்கு ஆளாகிவிட்டேன். எல்லாம் உங்களைப் போன்ற பெண்கள்தான் காரணம். அதற்கு மேலும் இதே பிரச்சினையைக் கொண்டு வந்து என்னை எல்லோரும் மனித குலத்திலிருந்தே விலக்கி வைக்கும் நிலைக்குத் தள்ளி விடுகிறீர்களே, நியாயமா?

ஒரே ஒரு உதாரணம் தருகிறேன். நண்பர் அபிலாஷ் அடிக்கடி உயிர்மை அலுவலகத்துக்கு வருவார். ஆனால் அந்த அலுவலகத்துக்கு இரண்டு தெருக்கள் தள்ளி இருக்கும் என் வீட்டுப் பக்கம் திரும்பிக் கூட பார்க்க மாட்டார். இதற்காக ஒருநாள் அவரிடம் கோபித்துக் கொண்டேன். அதற்கு அவர் சொன்ன பதில் என்ன தெரியுமா? "நீங்கள் ரொம்ப பிஸியாக எழுதிக்கொண்டிருப்பீர்கள்; எதற்குத் தொந்தரவு செய்ய வேண்டும் என்றுதான் வருவதில்லை." இப்படியே நினைத்து என்னோடு எந்த நண்பரும் இப்போது தொடர்பு கொள் வதில்லை. இப்படி எந்த மனிதத் தொடர்பும் இல்லாமல் வெறும் புத்தகங்களை மட்டுமே படித்துக்கொண்டிருந்தால் ஒருவனுக்குப்

பைத்தியம் பிடித்துவிடாதா? நண்பர்கள் என்னை இப்படித் தனிமைப் படுத்துவதற்குக் காரணம், நிரஞ்சனா போன்ற பெண்கள்தான் காலை வணக்கம் பற்றி நான் இப்படி காரசாரமாக எழுதுகிறேனா? உடனே இதைப் படிக்கும் எல்லோரும் 'சாரு ஒரு காட்டு மிருகம்; பார்த்ததும் கடித்துவிடுவான்' என்ற ரேஞ்சுக்குப் புரிந்து கொண்டு விலகி விடுகிறார்கள் ஆனால் மிக நிச்சயமாக எனக்குத் தெரிந்த ஒரு உண்மை என்னவென்றால், மற்ற எழுத்தாளர்களை விட பழகு வதற்கு நான் மிகவும் எளிதானவன்; இனிமையானவன். இது என்னுடன் பழகியவர்களுக்குத் தெரியும். 'ம்க்கும்; ஒரு காலை வணக்கத்துக்கே இந்த கதி; இதில் இவரோடு பழகி வேறு பார்க்க வேண்டுமாக்கும்' என்று நிரஞ்சனா முனகுவது கேட்கிறது. ஆனாலும் என் விளக்கம் மேலே சொன்னதுதான். கலவி நடந்துகொண்டிருக்கும்போது கதவைத் தட்டினால், எழுந்து வந்து காலை வணக்கம் சொல்லிவிட்டு மீண்டும் போய் சொருக முடியுமா?

பழகுவதற்கு அடியேன் எவ்வளவு இனிமையானவன் என்பதற்கு நண்பர் அபிலாஷ் எழுதியிருக்கும் இந்தக் கடிதமே சாட்சி.

"நான் சந்தித்த மிகவும் நட்பார்ந்த மனிதர் நீங்கள்தான். மீண்டும் மீண்டும் என்னை ஆச்சரியப்படுத்தும் ஒன்று இது. இலக்கியவாதிகள் என்றாலே நட்பு கொள்வது பொதுவாய் சிரமம். நீங்கள் ஒரு அதிசயம். உங்களைக் குறித்து நேர்மாறான பிம்பமே வெளியே உள்ளது."

பின்குறிப்பு: இப்படி எழுதிவிட்டேன் அல்லவா? 'ஒரு பெண் காலை வணக்கம் சொன்னதற்கே இப்படிப் போட்டுத் தாக்குகிறான்; இவன் சங்காத்தமே நமக்கு வேண்டாம்' என்று இதுவரை தொடர்பில் இருந்த நண்பர்களும் இனிமேல் விலகி விடுவார்கள் என்று நினைக் கிறேன். அதையும் நிரஞ்சனாவின் காலை வணக்கத்தால் கிட்டிய பலன் என்றுதான் எடுத்துக் கொள்வேனே தவிர அதற்காக வருந்த மாட்டேன்.

5.2.2010

சிவகாம சுந்தரி

ஒரு வாசகி எனக்கு போன் செய்யும் போதெல்லாம் "சமைத்துக்கொண்டிருக்கிறேன்; அப்புறம் பேசுகிறேன்" என்றே நான் சொல்வதைப் பார்த்து நொந்து போனார். புல்லாங்குழல் அடுப்பு ஊதக் கூடாது என்று வேறு அடிக்கடி சொல்லுவார். நானா விருப்பப்பட்டு ஊதுகிறேன்? என் நிலைமை அப்படி. என்னுடைய நாளின் முக்கியமான நேரம் உணவு தயாரிப்பதில் போய்விடுவது எனக்கே எரிச்சலூட்டக்கூடியதாகத்தான் இருக்கிறது. ஆனால் சமையல் வேலைக்கு வரும் பெண்களுக்கு சமையலே தெரியவில்லை. ஒரு பெண்ணுக்கு வாழைத்தண்டே நறுக்கத் தெரியாது என்றார். அது மட்டும் அல்ல; பல தெரியாதுகள் தொடர்ந்தன. க்ரைண்டரில் இட்லி மாவு அரைக்கத் தெரியாது. மீன் கழுவத் தெரியாது; நீங்கள் கழுவிக் கொடுத்தால் செய்கிறேன் அப்படிப் போட்ரா அருவாளை. இவ்வளவுக்கும் அவரே மீனவர் இனத்துப் பெண் எல்லாவற்றுக்கும் மேலாக அடுப்பு ஏற்றத் தெரியாது என்றார்

சரி, என்னதான் நடக்கிறது, பார்ப்போம் என்று அவரை சமைக்கச் சொன்னோன். முதலில் வெண்டைக்காயை நறுக்கி தண்ணீரில் போட்டார் அதாவது, நறுக்குவதற்கு முன்னால் தண்ணீரில்

கழுவி சுத்தம் செய்வதில்லையாம். நறுக்கி விட்டுத்தான் தண்ணீரில் போடுவார்களாம்! எல்லாவற்றையும் பொறுத்துக்கொண் டேன் கடைசியில் தாளிக்கும்போது 200 மில்லி எண்ணையைக் கொட்டி, அடுப்பை முழுதாக எரிய விட்டு எண்ணெயை தளபுள என்று கொதிக்க விட்டு அதில் காய்ந்த மிளகாயைத் தூக்கிப் போட்டார் பாருங்கள்... வீடே அதகளமாகிவிட்டது. எல்லோரும் பத்து நிமிடம் விடாமல் தும்மி, மூச்சுவிடுவதே சிரமமாகிவிட்டது. உத்தமத் தமிழ் எழுத்தாளன் அனுப்பி வைத்த ஆளோ என்றுகூட எனக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

பொதுவாக இந்தியா ஜப்பானை விடவும், சீனாவை விடவும் மிகப் பின் தங்கி இருப்பதற்கு ஊழல் ஒரு காரணம் என்றால் இந்தியர்களின் சோம்பேறித்தனமும், திறமையின்மையும் மற்ற காரணங்கள்.

இதற்கிடையில் அந்த வாசகி என் மீது அன்பு கூர்ந்து எனக்கு சமைத்துத் தருவதற்காக சில பெண்களை நேர்காணல் செய்ய ஆரம்பித்தார். இனிமேல் அவர் கூறியபடியே எழுதுகிறேன்.

முதலில் வந்த பெண் அச்சு அசல் அந்தக் காலத்து குஷ்பு மாதிரியே இருந்தாள். பெயர் சுந்தரி. தளதள என்று, எங்கெங்கே வளைவுகளும் சுழிவுகளும் இருக்க வேண்டுமோ அங்கங்கே அது அது அட்சர சுத்த மாக. அவள் கட்டியிருந்த புடவை டிஸைனர் ஸாரி. அதுவே 4000 ரூ. இருக்கும். இவள் என்ன சமையல் வேலைக்கு வந்திருக்கிறாளா அல்லது வேறு எதாவதற்கா என்று யோசித்தேன். பிறகுதான் தெரிந்தது, சுந்தரி இதற்கு முன்பு வேலை செய்த இடம் ஒரு வசதியான பிராமண வீடு. வேளைக்கு நெய்யும் வெண்ணையுமாக சாப்பிட்டுச் சாப்பிட்டு உடம்பு இப்படி வந்துவிட்டது. இதை அவளே சொன்னாள் சாரு.

சரி, அந்த டிஸைனர் புடவை?

அந்த வீட்டு ஆணும், பெண்ணும் அமெரிக்காவில் வேலை கிடைத்துச் சென்றுவிட்டார்கள் அமெரிக்காவில் இவ்வளவு புடவைகளுக்கு வேலை இருக்காது என்று பல புடவைகளை சுந்தரியிடம் கொடுத்து விட்டார் அந்த வீட்டுப் பெண்

ஆனால் சுந்தரி வேண்டாம் என்று தானே முடிவு செய்துவிட்டார் வாசகி. காரணம் தெரியவில்லை. அடுத்ததாக அவர் நேர்காணல் செய்தது சிவகாமி என்ற பெண்ணை. மொத்தமே 30 கிலோதான் இருப்பாள். நீங்கள் கவலையேபட வேண்டாம். (!?) அவளை நாளை யிலிருந்து அனுப்பி வைக்கிறேன்

அந்த சிவகாமிக்கு இங்கே வர இஷ்டமில்லை. அவர் வீடு ரொம்ப தூரமாம்.

அவந்திகா ஊருக்குப் போயிருக்கிறாள். நாளைக் காலையிலிருந்து உணவுக்கு என்ன செய்யப் போகிறேன் என்று தெரியவில்லை. இதற்காகவே ஐரோப்பாவில் குடியேறி விடலாமா என்று இருக்கிறது.

அங்கே எனக்குக் காலையில் கொஞ்சம் க்ருவாஸோன் ரொட்டி போதும். நடுவே பிளந்து வெங்காயமும் தக்காளியும் கொஞ்சம் டப்பா மீனும் போட்டுத் தின்றுவிடலாம். மதியமும் இரவு உணவும் கூட கடைகளில் கிடைக்கும். இங்கே கடையில் சாப்பிடலாம் என்றால் அதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தியர்கள் சாப்பிடும் உப்பின் அளவு என்னால் சகிக்க முடியாததாக உள்ளது. பைக் அண்ட் பேரல் பப்பில் கூட லாப்ஸ்டர் கேட்டபோது அதில் உப்பை அள்ளிக் கொட்டியிருந்தார்கள். ஸாராவும் பார்க் ஷெரட்டனின் தக்ஷிணும் பரவாயில்லை. உப்பு அளவாக இருக்கும். அதற்காக தினந்தோறும் அந்த இடங்களுக்கா போய்க்கொண்டிருக்க முடியும்? ஒரு தமிழ் எழுத்தாளனுக்கு அது எப்படி சாத்தியம்?

25.2.2010

ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு...(1)

ஹலோ சாரு,

1) நான் உங்கள் மேல் பொறாமை கொள்வது நிறைய விஷயங்களுக்காக.

இப்போதைக்கு ஒரு விஷயம் பற்றி மட்டும். அரசன் போன்று நீங்கள் குடிப்பது!

எனக்கும் குடிப்பதை ஒரு கொண்டாட்ட மான விஷயமாக அனுபவிப்பதில் மிகுந்த ஆர்வம் உண்டு. ஆனால் துரதிருஷ்டவசமாக எனக்கு மதுபானங்கள் பற்றிய அனுபவம் KF–ஐ (நல்ல பியர்தானே ?) தாண்டிப் போக வில்லை.

தங்களின் விருப்பத்திற்குரிய மதுபானங்கள் பற்றிய ஒரு பட்டியல் தர முடிந்தால் பொறாமை எண்ணிக்கையில் ஒன்று குறையும்.

தங்கள் மகன் கார்த்திக்கின் வயதுதான் எனக்கும். என் தந்தையின் வயதுதான் உங் களுக்கும். (வயதில் மட்டுமே ஒற்றுமை). இதையெல்லாம் பொருட்படுத்தாமல் பட்டியலைத் தந்து உதவுவீர்கள் என்று நம்புகிறேன்.

2) தமிழ்ப் படம் பார்த்துவிட்டீர்களா? (இன்னும் இங்கே திரையிடப்படவில்லை). இதுவரை வந்த மொத்த தமிழ் சினிமாக்களையும் ரவுண்டு கட்டி படடையைக் கிளப்பியிருக்கிறார்கள் என்று என் நண்பன் சொன்னான்.

நீங்கள் பார்த்துவிட்டீர்கள் என்றால், படம் எப்படி?

அன்புடன்

தயா

எர்ணாகுளம்

❍

டியர் தயா,

23 வயதில் என்னைப் போல் குடிக்க வேண்டும் என்றால் நீங்கள் விஜய் மல்லையாவின் மகனாக இருந்தால் மட்டுமே முடியும். மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தால் அது சாத்தியமில்லை.

விளக்கிச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். நண்பர்களுடன் குடித்துவிட்டு எப்போதாவது பில்லைப் பார்த்தால் போதையே போய்விடும் போலிருக்கிறது. மிகப்பெரும் பணக்காரர்களால் மட்டுமே அது சாத்தியம். எனக்கு அப்படிப்பட்ட சில நண்பர்கள் இருப்பதால் என்னால் அவ்வாறு குடிக்க முடிகிறது. மேலும், என் வாசகர்கள் என்னைத் தங்களுடைய ரோல் மாடலாகக் கொள்வதில் பெரியதொரு ஆபத்து இருக்கிறது. அவர்கள் என்னிடமிருந்து எதை எடுத்துக் கொள்கிறார்கள் என்பதைத் தொடர்ந்து அவதானித்து வருகிறேன். நான் தினமும் தியானம் செய்கிறேன், யோகா செய்கிறேன், 20 மணி நேரம் உழைக்கிறேன். இதையெல்லாம் வசதியாக ஒதுக்கி வைத்துவிட்டு, நான் குடிக்கிறேன் என்பதை மட்டும் எடுத்துக் கொள்கிறார்கள்; உங்களுடைய கேள்வியே அதற்கு ஒரு உதாரணம். என் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் போலவே மது அருந்துவதிலும் நான் ஒரு ராணுவ ஒழுங்கைக் கடைபிடிப்பவன். வாரம் இரண்டு தடவைக்கு மேல் கிடையாது. எனவே என்னை முன்னுதாரணமாகக் கொள்வது நல்லதல்ல.

எனக்குப் பிடித்த மது வகைகள் பற்றி பல தொகுதிகள் வரும் அளவுக்கு எழுதலாம். பலர் அப்படி எழுதியும் இருக்கிறார்கள் ஒயின் என்று எடுத்துக்கொண்டால் அதற்கே மூன்று தொகுதிகள் வேண்டும். அத்தனை வகை ஒயின்கள் உலகத்தில் உள்ளன. இந்தியாவில் கிடைக்கும் பெரும்பாலான ஒயின்கள் ஒயின் ரகத்திலேயே சேர்த்தி இல்லை. நாஸிக்கில் தயாரிக்கப்படும் சூலா ஒயின்தான் இந்தியாவில் தயாரிக்கப்படும் ஒயின்களிலேயே சிறந்த ஒயின் என்கிறார்கள். பார்க் ஷெரட்டன், டென்.டி. போன்ற இடங்களில்கூட அதைத்தான் தருகிறார்கள். விலைக்கேற்ற பணியாரம் என்று சொல்வது

போல் சூலா ஒயினின் விலையும் கம்மி (ரூ.500/—); தரமும் கம்மி. எனக்கு சுத்தமாகப் பிடிக்காது. சர்பத் போல இருக்கிறது.

ஐரோப்பிய ஒயின்களைப் பற்றி எழுத வேண்டுமானால், நான் பாரிஸிலேயே ஒரு ஆண்டுக் காலமாவது வாழ வேண்டும். அங்குள்ள சூப்பர் பஸார்களுக்குப் போனால் ஒயின்களுக்கென்று ஒரு பெரிய பிரிவே இருக்கிறது. இந்த வாக்கியத்தின் 'பெரிய' என்ற வார்த்தையை இந்தியாவில் இருந்துகொண்டு புரிந்துகொள்ள முடியாது. நேரில்தான் பார்க்க வேண்டும். கற்பனையே செய்து பார்க்க முடியாதபடி அவ்வளவு பெரிதாக இருக்கும். அதில் நூற்றுக்கணக்கான ஒயின் ரகங்களைப் பார்த்திருக்கிறேன்.

மது வகைகளில் ஒயின்தான் எனக்குப் பிடிக்கும். என்னைச் சந்திக்க வரும் சில நண்பர்கள் விலை உயர்ந்த ஸ்காட்ச் விஸ்கிகளை வாங்கி வருகின்றனர். நண்பர்கள் அதைத் தவிர்க்கும்படி அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். நல்ல சிவப்பு ஒயின் வாங்கி வந்தால் நலம். இங்கே தமிழ்நாட்டில் உயர்தரமான ஒயின் கிடைப்பதில்லை என்பதால்தான் இந்த வோட்கா, பிராந்தி போன்ற மதுவகைகளை குடிக்க வேண்டியிருக்கிறது. கிடைத்தால் என்னுடைய முதல் தேர்வு சிவப்பு ஒயினாகத் தான் இருக்கும். அதற்காக வோட்கா, பிராந்தி, ரம் பிரியர்கள் கோபித்துக் கொள்ள வேண்டாம். அதற்கு, பிறகு வருகிறேன்.

இதயத்துக்கு நல்லது என்பதைத் தவிர சிவப்பு ஒயினின் இன்னொரு சிறப்பு என்னவென்றால், காமக் களியாட்டத்துக்கும் உகந்த ஒன்று அது. பெண்களின் மதன பீடங்களில் ஊற்றிப் பருகினால் சொர்க்க அனுபவம் கிடைக்கும். அதையெல்லாம் எழுத்தில் எழுதிப் புரிய வைக்க முடியாது. அனுபவித்துப் பார்த்தால் மட்டுமே தெரியும்.

ஃப்ரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், போர்த்துகல் ஆகிய நாடுகளில் தயாரிக்கப்படும் ஒயின்களே சிறந்த ரகம் என்று சொல்லலாம். அங்குள்ள தட்பவெப்ப நிலையும், மண்ணும், நீரும், வடிகட்டும் முறையும்தான் அதற்குக் காரணம். இது தவிர, கலிஃபோர்னியா, சிலே, அர்ஹெந்தினா, உருகுவாய், ப்ரஸில் போன்ற நாடுகளில் தயாரிக்கப்படும் ஒயின்களும் சிறந்த ரகமே. உலகின் பத்து சிறந்த ஒயின்களுள் ஒன்றான Alsace ஒயினை அருந்தியிருக்கிறேன். ஃப்ரான்ஸின் வட கிழக்கு மாகாணமான அல்ஸாஸில் விளையும் திராட்சையிலிருந்து தயாரிக்கப்படுவதால் அந்தப் பெயர். அதேபோல் ஃப்ரான்ஸின் பொர்தோ (Bordeaux) மாகாணத்தில் தயாரிக்கப்படும் பொர்தோ ஒயினையும் தேவ பானத்தோடு தான் சேர்க்க வேண்டும். உலக அளவில் ஒயின் உற்பத்தியில் முதல் இடத்தில் இருப்பது ஃப்ரான்ஸ். தரத்திலும் அவ்வாறே.

பிராந்தி வகைகளில் நான் அருந்துவது கோனியாக். கோனியாக் (Cognac) என்பது பாரிஸிலிருந்து தென்மேற்கில் 250 மைல் தூரத்தில் உள்ள ஒரு ஊர். அந்த ஊரில் தயாரிக்கப்படுவதால் அந்தப் பெயர். கோனியாக் பிராந்தியும் திராட்சையிலிருந்தே தயாரிக்கப்படுகிறது. கோனியாக்கை

அருந்துவதே ஒரு தனி கலை. பிளாஸ்டிக் டம்ளரில் ஓல்ட் மாங்க் ரம்மை நிரப்பி தண்ணீர் கூட கலக்காமல் ஒரே கல்ப்பில் அடித்து விட்டு 'ரவி ஊறுகாயை' சப்பி விட்டுச் செல்வது ஒருவித கலை என்றால் கோனியாக்கை அருந்துவதும் இன்னொரு விதமான கலை என்று சொல்லலாம்.

கோனியாக் அருந்துவதற்கான கோப்பை ட்யூலிப் மலர் வடிவத்தில் இருக்க வேண்டும். 25 மில்லி கோனியாக்கை அதில் ஊற்றி ஏழெட்டு நிமிடங்கள் கையிலேயே வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் கைகளின் உஷ்ணம் கோப்பையில் பரவி கோனியாக்கின் ருசியைக் கூட்டும்.

சில குடி நிபுணர்கள் கோனியாக்கின் நிறத்தை வைத்தே அதன் வயதைச் சொல்லிவிடுவார்கள் மனித இனத்தில்தான் வயதாக வயதாக இளமையும் இனிமையும் போய் மதிப்பு குறைந்து விடுகிறது. மதுவகைகளில் அப்படி இல்லை. வயதாக வயதாகத்தான் மதுவின் மதிப்பு கூடும்.

கையில் ஏழெட்டு நிமிடங்கள் வைத்திருந்த பிறகு கோப்பையை எடுத்து முகர்ந்து பார்க்க வேண்டும். அந்தப் பழ ரசத்தின் மணத்துக்கு எதை உதாரணமாகச் சொல்ல முடியும்? நீங்களே யூகித்துக் கொள் ளுங்கள்.

பிறகு அதில் 60 மில்லி சோடாவை ஊற்றி கொஞ்சம் கொஞ்சமாக அருந்த வேண்டும்.

நான் குடிக்கும் கோனியாக்கின் பெயர் ரெமி மார்ட்டின் ரெமி மார்ட்டின் பல ரகங்களில் கிடைக்கிறது. பதிமூன்றாம் லூயி ரெமி மார்ட்டின் விலை சுமார் 75,000 ரூ. மற்றபடி என்னைப் போன்ற ஏழை எழுத்தாளர்கள் குடிக்கும் ரெமி மார்ட்டின் விலை 4000 ரூபாய்.

ரம் என்று எடுத்துக் கொண்டால், கூபாவிலிருந்து வரும் ரம் மட்டுமே குடிப்பேன் கூபாவின் ரம்களில் மொஹித்தோ என்ற காக்டெய்ல் எனக்கு மிகவும் பிடித்தமானது.

தொடரும்.

15.2.2010.

ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு...(2)

டியர் சாரு,

எனது நண்பர் ஒருவர் சமூகப் பணிகள் புரிந்து கொண்டிருக்கிறார். பலருக்கு உத்வேகமாகவும் ஆதர்சமாகவும் இருப்பவர். அவர் என் அருகில் இருக்கையில் நான் புகைபிடிக்கும் பொழுது ஓரிரு தருணங்களில் "இந்தக் கருமத்தை ஏன் குடிக்கிறாய்; விட்டுவிட வேண்டியதுதானே?" என்பார். (அவரும் என்னோடு சேர்ந்து குடித்துக் கொண்டிருப்பார்; அது வேறு.)

நான் அதற்கு முகத்தை அமைதியாக வைத்துக் கொண்டு "தலைவரே; நாமெல்லாம் விவேகானந் தரின் சிஷ்யர்கள். அவர் பண்ணியதைத்தான் நான் பண்ணுகிறேன்" என்பேன். அதற்கு அவர் "விவேகானந்தர் கழுட்டுன மாதிரி நீங்களும் கழுட்டிட்டீங்களோ?" என்பார். அதைப் போலவே உங்கள் வாசகர்களும் எதிரிகளும் உங்கள் குடியை மட்டுமே பிரதானமாகப் பேசுகிறார்கள்; மற்ற விஷயங்களை விட்டு விடுகிறார்கள்; உங்கள் உழைப்பும் அர்ப்பணிப்பும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேணும் என்பதைத் தெளிவாக்கி விட்டீர்கள். மற்றபடி 'ஒரு கோப்பையிலே... தொடர்ச்சிக்காகக் காத்துக் கிடக்கிறேன்; மற்ற எண்ணிலடங்காத நண்பர்களைப் போல்.

அன்புடன்,
தர்மசேனன்.
15.2.2010.

அன்புள்ள சாரு,

வணக்கம். நீண்ட நாடகளுக்குப் பிறகு தங்களது இணைய தளத்திற்கு வந்தேன். ஓர் அற்புதத்தைக் காடடியுள்ளீர்கள். இது வார்த்தைகளால் விவரிக்கமுடியாத விந்தை. மொழிக்கு அப்பாற்படட உணர்வின் வலைப்பின்னல். தங்களது தமிழைப் போலவே ஓர் அற்புதம் அது. அந்தக் கைகளைப் பிடித்துக் கொண்டு அழலாம் போல உணர்வு பிரவாகிக்கிறது. ஒரு கதை, ஒரு காவியம், ஒரு கவிதை எல்லாமே அந்த விரல்களில் ஒளிந்துகொண்டிருக்கிறது. தங்களால் மட்டும்தான் மனிதத்தை இப்படியெல்லாம் அறிய முடியும்; அறிமுகப்படுத்த முடியும். குடிப்பதைப் பற்றி தனியாக எழுதவேண்டாம். அது எப்போதும் போல தங்களின் கதை, கட்டுரை, நாவல்களில் ஒளிந்து கொண்டிருக் கட்டும். தனியாக வேண்டாம்.

தனுஷ்
15.2.2010

O

மன்னிக்க வேண்டும் சாரு.

குடி பற்றிய அந்தக் கேள்விக்கு முன்பாக இன்னும் நிறைய விஷயங்களை சொல்லிவிடவே நினைத்தேன். ஆனால் அவை பலரும் பலமுறை உங்களுக்கு எழுதியதாக அமைந்து விடக் கூடாது என்று சுருக்கமாக எழுத நினைத்தே அந்தக் கேள்வியைக் கேட்டேன்.

நான் உங்களை ரோல் மாடல் ஆகக் கொண்ட முதல் விஷயம்—

நீங்கள் உடன் இருப்பவர்களுக்கு அளிக்கும் சுதந்திரம்.

(இந்த வாக்கியமே கூட தவறுதான், இல்லையா?)

நீங்கள் அவந்திகாவிடம் பேசிய அதே வார்த்தைகளை என் காதலியி டமும், தோழியிடமும் கூறியிருக்கிறேன்.

அவர்கள் என் மாற்றத்தை அவதானித்து, வினா எழுப்பியபோது நான் கை காடடியது உங்கள் எழுத்துக்களைத்தான்.

எனினும் அவர்களால் அதை முழுமையாக நம்ப இயலவில்லை. "அதெப்படி வாசிப்பது ஒரு மனிதனை மாற்றும்?" என்றனர்.

நான் சொன்ன விளக்கம்: "சுரணை உள்ள எழுத்தை சரியாகப் படிப்பவன் நிச்சயம் மாற்றங்களை அடைவான். நான் சாருவின் எழுத்தில் அதைக் கண்டேன்; கொஞ்சம் கொஞ்சமாக மாறிக்கொண்டும் இருக்கிறேன்."

அதென்ன சுரணை உள்ள எழுத்து? இது அவர்களின் மறு வினா இதற்கு நான் எந்த விளக்கமும் சொல்லவில்லை. தங்களின் புத்தகங்களே

அவர்களின் கேள்விகளுக்கு சரியான பதிலாக அமையும்.

ஸீரோ டிகிரியை வாசித்து முடித்தபோது பெண்கள் வெறும் போகப் பொருள்தான் என்ற என்னுடைய மனப்பான்மை மாறியது. நமது சமூகச் சூழலில் அவர்கள் அனுபவிக்கும் கொடுமைகளும், அவர்கள் மீது செலுத்தப்படும் வன்முறையும் புரிய ஆரம்பித்தது.

இப்போது ராஸ லீலா வாசித்துக்கொண்டிருக்கிறேன். எப்படி இவ்வளவு தைரியமாக அரசு இயந்திரத்தை விமர்சனம் செய்தீர்கள் என்று நான் ஆச்சர்யம் அடையாத நேரம் இல்லை.

இதுபோல் தங்களின் ஒவ்வொரு பத்தியும், கேள்வி பதிலும், கட்டுரையும் ஒரு பரவச நிலையை (வந்துவிட்டது க்ளிஷே) அடையச் செய்கிறது என்னை.

என்னுடைய 9 வயதிலிருந்தே எனக்குக் கடவுள் நம்பிக்கை இருந்ததில்லை. (அதற்கு முன்பு இருந்ததா என நினைவில் இல்லை). இப்போதும் அப்படியே. நீங்கள் பெரியார் பற்றி எழுதிய அத்தனையும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. (நீங்கள் நாத்திகவாதி குறித்து சொன்ன ஒரு பீர்பால் கதையை ரொம்ப நாள் என் ஆர்க்குட் பக்கத்தில் வைத்திருந்தேன்).

எனது சொந்த ஊர் கரூர் மாவட்டத்தில் ஒரு சிற்றூர். தங்களின் மாமா ஒருவர் ரயில்வேயில் பணிபுரிந்தபோது நடந்தவற்றை எழுதிய கட்டுரையில் கரூர் பற்றிக் குறிப்பிட்டபோது ஏனோ அளவில்லாத உவகை கொண்டேன்.

2010 புத்தகச் சந்தையில் சந்தித்த வாசகர்கள் உங்கள் விருப்பதிற்குரியவர்களான போது, நான் அவர்கள் மீது பொறாமை கொண்டேன். நான் இரண்டு முறை உயிர்மை பதிப்பக ஸ்டால் வந்தபோதும் உங்களை சந்திக்க முடியவில்லை. இதை எண்ணி நானே என்னைத் திட்டிக்கொண்டேன்.

என்னுடன் பணிபுரியும் அனைவரும் ஹாலிவுட பற்றி மட்டுமே பேசியபோது, நான் எனக்குப் பிடித்தது லத்தீன் அமெரிக்க சினிமா என்று சொல்லியபோதும் என் மனதில் நீங்களே வந்து போனீர்கள்.

நான்ஸி அஜ்ரம்மின் oul tani keda போன்று இன்னும் பல பாடல்களின் அர்த்தம் புரியாமலே ரசிகன் ஆனதற்கும்,

எனக்குப் பெண்களை மிகவும் பிடிக்கும் என்று தைரியமாகச் சொல்வதற்கும்,

நானாக மலையாளம் கற்றுக்கொண்டதற்கும்,

சென்னையை விடடு கேரளாவிற்கு வேலைக்காக வந்ததற்கும்,

சமீப காலமாக நான் பேசுவதே புரிவதில்லை/சரியில்லை என்று என் சக தோழர்கள் (இவர்கள் நிறைய பேருக்குத் தங்களின் எழுத்து அலர்ஜி) பேசுவதற்கும்

ஏதோ ஒரு வகையில் தங்கள் எழுத்து எனக்குள் ஏற்படுத்திய மாற்றம் தான் காரணம். இதற்கு மேல் இதை எனக்கு விளக்கத் தெரியவில்லை.

இதுபோல எண்ணற்ற விஷயங்கள் உண்டு. ஐந்து வரிகளுக்கு மேல் எதையும் கோர்வையாக எழுத வராது எனக்கு. இதிலும் அதுபோல இருப்பதை மன்னிக்கவும்.

நன்றிகளுடன்

தயா

எர்ணாகுளம்

15.2.2010

○

அன்புள்ள தர்மசேனன்,

நாகூர்க்காரர் ஒருவருடன் பேசுவது உள்ளுக்குள் ஒரு கிளர்ச்சியையே ஏற்படுத்துகிறது. புத்தகச் சந்தையில்கூட நம்மூர்க்காரர் ஒருவரை சந்திக்க முடிந்தது. வயது 75 இருக்கும். தைக்கால் தெரு என்றும், இப்போது இருப்பது சென்னையில் என்றும் சொன்னார். கௌதியா ஸ்கூல், கலிஃபா சாபு என்று பல விஷயங்களை பேசிக் கொண்டிருந் தோம். கலிஃபா சாபு எனக்கு ஒன்பதாம் வகுப்பில் ஆசிரியராக இருந்தார். பிறகு அந்த நேஷனல் ஹைஸ்கூலில் இருந்து கௌதியா ஸ்கூலுக்கு ஹெச்செம்மாக போய் விட்டார் சுனாமிக்குப் பிறகு நம் ஊர் கடற்கரைக்குச் சென்றிருந்தேன். நான் பார்த்த சில்லடியா அது? குப்பைக் காடாக மாறியிருந்தது.

அடுத்து தயாவின் கடிதம் மீண்டும். ஆமாம், நீங்கள் சொல்வது போல் சுதந்திரம் என்பது யாரும் யாருக்கும் கொடுக்கக்கூடியது அல்ல. கொடுப்பது என்கிறபோதே சமத்துவம் போய்விடுகிறது. சுதந்திரம் என்பது நாம் அனுபவிக்க வேண்டியது.

சமீபத்தில் நண்பன் பாலாவுடன் ஸாரா பப்பில் பேசிக் கொண்டிருந் தேன் லேசாக வைன் அருந்தியபடி மதியம் ஒரு மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை நீண்டது பேச்சு. பாலாவின் வயது என் மகனின் வயதைவிட ஒரு வயது அதிகம். ஆனால் என்னை சாரு என்றே அழைப்பான் என் தோழி ஒருவரின் மகன். "என்னடா இது, அவ்வளவு வயதான மனிதரை சாரு சாரு என்று அழைக்கிறாய்?" என்று அவனுடைய அம்மா திட்டியபோது "அவரெல்லாம் 'யூத்' மா; நீங்கள்தான் வயதானவர்" என்று சொன்னான். வித்யா மந்திரில் படித்தவன் என்பதால்தான் பாலாவின் மீது எனக்கு ஈடுபாடு ஏற்பட்டது. ஒரு தேர்ந்த ஐரோப்பியனைப் போல் இருந்தது அவனுடைய மனோபாவம் (பொருள்: ஒரு தமிழ் எழுத்தாளனை விடவும் பரந்த மனப்பான்மையும், சாதி, மத விஷயங்களில் அடிப்படைவாதப் போக்கு இல்லாதவனாகவும் இருந்தான்). முக்கியமாக, குடி பற்றிய நிதானம்

இருந்தது அவனுக்கு. அதற்கு முந்தின நாள்தான் இரவு மூன்றரை வரை நண்பர்களுடன் விடியோ கேம்ஸ் ஆடிக்கொண்டிருந்ததாகச் சொன்னான். அந்த இடத்தில்தான் நான் முந்தின தலைமுறை ஆளாக உணர்ந்தேன். எனக்கு விடியோ கேம்ஸ் என்றால் என்னவென்று தெரிய வில்லை. "ஆடும்போது பியர் ஏதும் குடித்தீர்களா?" என்று கேட்டேன். "ம்ஹூம், சான்ஸே இல்லை" என்றான். இம்மாதிரியான இளைஞர்களின் உலகத்துக்குள் நான் செல்ல விரும்புகிறேன். பெண்கள் மீது மட்டும்தான் எனக்கு தனி கவனம், பெண்களோடு மட்டும்தான் பேசுவேன் என்பதெல்லாம் 'நான் குடிகாரன்' என்பதைப் போன்ற கட்டுக்கதைகளில் ஒன்று. நான் பாலாவுடன் நாள் பூராவும் பேசிக்கொண்டிருந்தது வேலண்டைன் தினம்.

ஆனால் இந்தத் தலைமுறை இளைஞர்களைப் போலவே தமிழ் பேச மட்டும்தான் தெரியும்; எழுத்துக் கூட்டி எழுத்துக் கூட்டித்தான் படிக்க முடியும். 12 ஆண்டுகள் தமிழ் படித்தும் இந்த நிலை. அதாவது, நான் 12ஆண்டுகள் பள்ளியில் ஆங்கிலம் படித்தும் சரியாகப் பேசவும், எழுதவும் தெரியாமல் இருப்பது போல். ஐரோப்பியர்கள் ஒரு மொழியை ஆறு மாதத்தில் கற்றுக் கொடுக்கிறார்கள். நம்முடைய கல்வி முறையில் ஒரு மொழியை 12 ஆண்டுகளில் கற்றுக் கொடுக்க முடியவில்லை.

"தமிழ் எடுத்தால் குறைவான மதிப்பெண்தான் வருகிறது என்று மாண வர்கள் சம்ஸ்கிருதம், இந்தி, ஃப்ரெஞ்ச் என்றல்லாவா எடுக்கிறார்கள்? நீ எப்படித் தமிழை எடுத்துப் படித்தாய்?" என்று கேட்டேன். "நீ எதை எடுத்தாலும் குறைவான மதிப்பெண்ணே வாங்குகிறாய்; அதனால் தமிழே எடு என்று சொல்லிவிட்டார்கள்" என்றான். ஆனால் குறைவான மதிப்பெண் எடுத்தாலும் இன்று மென்பொருள் துறையில் மிகப்பெரிய உத்தியோகத்தில் இருக்கிறான்.

பாலாவின் மற்றொரு விசேஷம், அவன் ஒரு மோட்டார் பந்தய வீரன். அதுபற்றிய பல நுணுக்கமான விஷயங்களை அவனிடமிருந்து கேட்டறிந்து கொண்டேன். "அஜித் போன்ற சினிமா நடிகர்களால் மட்டுமே கட்டுப்படி ஆகக்கூடிய ரொம்பவும் செலவாகிற விளையாட்டு ஆயிற்றே?" என்று கேட்டேன். ஆமாம் என்று சொல்லிவிட்டு என் னென்ன செலவுகள் என்று விவரித்தான். அதில் ஒரு விஷயம் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. மோட்டார் சைக்கிளை வேனில் வைத்துத்தான் பந்தயத் திடலுக்கு எடுத்துப் போக வேண்டுமாம். அம்மாதிரி பந்தய பைக்குகள் சாலைகளில் செல்ல அனுமதி இல்லை. மேலும் அவன் குறிப்பிட்ட ஒரு விஷயம், அஜித் போன்று கட்டுமஸ்தான உடல்வாகு கொண்டவர்கள் மோட்டார் பந்தயத்தில் ஈடுபடுவது சற்று சிரமம். உடல் மெலிந்து இருப்பதுதான் இந்த விளையாட்டுக்கு நல்லது. கட்டுமஸ்தான உடல் இருந்தால் அதற்கேற்றாற்போல் பெரிய பைக்கு களை ஓட்ட வேண்டியிருக்கும்.

இதையெல்லாம் கேட்டபோது எனக்கு கார்த்திக்கின் ஞாபகம் வந்தது. மோட்டார் பந்தயம் என்றால் அவனுக்கு உயிர் ஆனால்

அவ்வளவு பணம் செலவாகக்கூடிய விளையாட்டில் அவனைச் சேர்த்து விட என்னிடம் பணம் இல்லை. அப்படியே இருந்திருந்தாலும் சேர்க்க அனுமதித்திருக்க மாட்டேன். இப்போதுகூட அவன் பைக் வாங்க விரும்பியபோது நான் அவனிடம் சொன்னேன். "நான் உன்னிடம் எதுவுமே கேட்டதில்லை. இது ஒன்றை மட்டுமே கேட்கிறேன்" என்று முன்னுரையெல்லாம் சொல்லி, "நீ கார் வாங்கிக் கொள்; பைக் வேண்டாம்" என்றேன். அதற்கும் வழக்கம் போல் பல்லி கௌளி சொல்வது போல் ஏதோ ஒரு ஒலி எழுப்பினான். முடியாது என்று புரிந்துகொண்டேன்.

நான் அப்படிச் சொன்னதற்குக் காரணம், இங்கே இந்தியாவில் சாலைப் போக்குவரத்தைப் பார்த்தால் ஏதோ காட்டுமிராண்டிகள் வண்டி ஓட்டுவதுபோல் தெரிகிறது. சாலையில் சிவப்பு விளக்கு எரிகிறது. அதனால் அந்தப் பெண் தன் காரை நிறுத்தி வைத்திருக்கிறாள். அதற்குள் அவள் பின்னே காரில் வந்தவன் விடாமல் ஹார்ன் அடிக்கிறான். அவள் காரை எங்கே என்று நகர்த்துவாள்? பச்சை விளக்குக்காகக் காத்திருக்கிறாள். ஆனால் பின்னால் இருந்தவனின் ஹார்ன் சப்தம் நிற்கவே இல்லை. கண்ணிமைக்கும் நேரத்தில் காரிலிருந்து இறங்கியவன் முன்னே நின்று கொண்டிருந்த கார் கதவைத் திறந்து அந்தப் பெண்ணின் முடியைப் பற்றியிழுத்து தரதரவென்று ரோட்டில் இழுத்துக்கொண்டு வந்து அடிக்கிறான். இது நடந்த இடம் தில்லி. தில்லி மட்டும் அல்ல; இந்தியா முழுவதுமே இப்படித்தான். இப்படிப்பட்ட காட்டுமிராண்டிகள் வண்டி ஓட்டும் ஒரு தேசத்தில் பைக் ஓட்டலாமா என்றுதான் மறுத்தேன். காரிலும் பிரச்சினைதானே என்று கேட்கக்கூடாது. பைக்கைவிட காரில் பிரச்சினை கம்மி. ஆனால் என்னைவிட பாலாவின் பெற்றோர் சுதந்திர மனோபாவம் கொண்டவர்கள் பாலாவின் ஆசைக்குக் குறுக்கே நிற்கவில்லை.

"இப்போது ரேஸுக்குப் போகிறாயா?" என்று கேட்டேன்

"ஒரு விபத்தில் மாட்டிக் கொண்டேன்; அதிலிருந்து பைக்கை எடுப்பதில்லை; கார்தான்" என்றான் பாலா

(தொடரும்)

(பின்குறிப்பு: என்னை யாரும் பின்பற்ற வேண்டாம் என்று சொல்வதற்கு இன்னொரு காரணம், இந்தக் கட்டுரையை நான் காலை மூன்றரை மணியிலிருந்து டைப் செய்துகொண்டிருந்தேன். படுத்தது 12க்கு. ஆக மூன்றரை மணி நேரமே தூக்கம். இதை மற்றவர்கள் செய்தால் உடம்புக்குக் கேடு. எனக்கு ஏன் ஒத்துக்கொள்கிறது என்றால், நான் உறங்கச் செல்லும் போது செய்யும் தியானம் பல மணி நேர உறக்கத்துக்கு சமம். .)

16.2.2010

ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு...(3)

K.F. நல்ல பியரா என்று கேட்டிருக்கிறார் எர்ணாகுளம் தயா. நல்ல பியர்தான்; ஆனால் நான் பியர் குடிப்பதில்லை. பியர் குடித்தால் ட்ரைக்ளி ஸரைட் என்ற கொழுப்பு அதிகமாகி விடுகிறது. அதனால் எப்போதாவதுதான் பியர் குடிப்பேன். அப்படிக் குடித்தாலும் draught பியர் தான் குடிப்பது. ட்ராட் பியர் என்பது ஃப்ரெஷ் பியர். தயாரிக்கப்பட்ட ஓரிரு தினங்களிலேயே குடிக்கப்பட வேண்டும். இங்கே சென்னை போன்ற பாடாவதி இடங்களில் நட்சத்திர ஓட்டல் பார் களில் மட்டுமே கிடைக்கிறது.

ஒருநாள் கேபிள் ஷங்கர் போன் செய்தார் இரவு மணி ஒன்பது. வழக்கம்போல் அவந்திகா ஆசிரமம் சென்றிருந்தாள்.

"குடிக்கப் போகலாமா ?"

"போகலாம்; எங்கே இருக்கிறீர்கள் இப்போது?"

"சைதாப்பேட்டையில் தலைவரே; பத்து நிமிடத் தில் வந்துவிடுவேன் "

அன்றைய தினம் நான் கிட்டத்தட்ட உபவாசம். காலையிலும் ஓட்ஸ் கஞ்சி. மதியம் நூடுல்ஸ். இதெல்லாம் என் பசிக்கு ஜுஜுபி. அதனால் இரவாவது ராயசமாக சோறு வடித்து, சாம்பார்

செய்து சாப்பிடலாம் என்று கறிகாய்களை நறுக்கி வைத்து, சோறு வடித்திருந்தேன். இப்போது கேபிள் ஷங்கரின் போனைப் பார்த்தவுடன் எல்லாவற்றையும் பாதியிலேயே நிறுத்திவிட்டுக் கிளம்பினேன் வீட்டுக்குப் பக்கத்திலேயே பட்டினப்பாக்கம் பஸ் நிறுத்தத்தில் ஒரு டாஸ்மாக் இருக்கிறது. குளிரூட்டப்பட்டதுதான் என்றாலும் அது ஒரு நரகம். காரணம், அங்கே வருபவர்களின் கூச்சல். நம் மண்டையே உடைந்துவிடும் போல் அவ்வளவு சத்தமாகப் பேசு வார்கள்.

ட்ராஃபிக் ஜாமோ என்னவோ கேபிள் ஷங்கர் வர பத்து மணி ஆகிவிட்டது. கேபிளுடன் மற்றொரு நண்பர். உதவி இயக்குனராக இருக்கிறார். உதவி இயக்குனர் என்றாலே சொல்லத் தேவையில்லை; மதுரைக்காரர். அது மட்டுமல்லாமல் அச்சு அசல் வடிவேல் மாதிரியே பேசினார். மதுரைக்காரர்கள் எல்லாருமே அப்படித்தான் பேசுகிறார்கள். எனக்கு உதவி இயக்குனர்களை நினைத்தால் அடிவயிற்றில் ஒரு பயம் உருளும், வாழ்க்கையில் இவர்களின் கனவு நிறைவேறுமா என்று.

கேபிளும் அந்த நண்பரும் ஒரு குவார்ட்டரை வாங்கி ஆளுக்குப் பாதி குடித்தார்கள். நான் இரண்டு கே.எஃப். பக்கத்து இருக்கைகளில் ஒரு பத்து இளைஞர்கள் இமயமலையில் உள்ள கைலாசத்துக்கே கேட்கும் அளவில் கூச்சலிட்டுப் பேசிக்கொண்டிருந்தார்கள். பத்து மணி ஆகிவிட்டதால் லாஸ்ட் ஆர்டர். அவசர அவசரமாகக் குடித்து விட்டு வெளியே வந்தோம். முடிந்தவரை இனிமேல் டாஸ்மாக்குகளைத் தவிர்க்க வேண்டும் என்று திட்டமிட்டுக்கொண்டேன். ஒரு எழுத் தாளனுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியம் எனக்குக் கிடைத்தால் அன்றைய தினம் கேபிள் ஷங்கரையும், நண்பரையும் ஒரு நல்ல நட்சத்திர ஓட்டல் பாருக்கு அழைத்துச் சென்றிருக்கலாம் என்ற எண்ணம் மின்னலாகத் தோன்றி மறைந்தது.

மறுநாள் நடக்க இருக்கும் புத்தக வெளியீட்டுக்கு என்னை அன்புடன் அழைத்தார் கேபிள் ஷங்கர். மறுநாள் வேலைகள் ஏற்கனவே திட்ட மிடப்பட்டிருந்ததால் என் இயலாமையைத் தெரிவித்து வாழ்த்துக்களைச் சொன்னேன்.

இந்த இடத்தில் ஒரு விஷயம். வலைமனைகளில் எழுதப்படுவது பற்றி எனக்கு விமர்சனங்கள் இருந்தாலும் கணினி என்ற ஒன்று கண்டு பிடிக்கப்படாமல் இருந்திருந்தால் இவர்கள் அனைவரும் சிறு பத்திரிகை தான் நடத்தியிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. இன்றைய தமிழின் செறிவான இலக்கிய வளர்ச்சிக்கு சிறு பத்திரிகைகளின் பெரும் பங்கை யாரும் மறுக்க இயலாது. அச்சு ஊடகத்தின் வழியே வெளிவந்த சிறுபத்திரிகைகளுக்கு பதிலாகவே இன்றைய வலைமனை எழுத்துக்களை நாம் பார்க்க வேண்டும்.

இப்போது மீண்டும் தயாவின் கடிதத்துக்கு வருகிறேன் ஆனால் சாருஆன்லைனின் பழைய கட்டுரைகள் அனைத்தும் சில விஷமிகளால்

வைரஸ் புகுத்தப்பட்டு அழிந்துவிட்டதால் நீங்கள் பழைய கட்டுரைகளை எப்படி வாசிப்பீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. இதுபற்றி தங்கவேலிடம் ஏற்கனவே பலமுறை எச்சரித்திருந்தேன். மாதம் ஒருமுறையாவது "பழைய கட்டுரைகள் பத்திரமாக உள்ளனவா?" என்று கேட்பேன். "அதெல்லாம் கவலையே படாதீர்கள். Back up இல் பத்திரமாக உள்ளன" என்பார். இப்போது அந்த பேக் அப்பிலும் வைரஸ் புகுந்துவிட்டது. மேலும், நான் 35 ஆண்டுகளாக எந்தக் கூலியும் இல்லாமல் இலவசமாகவே எழுதி வருவது போல் தங்கவேலும் இந்த இணையதளத்துக்கு இலவச சேவையே செய்து வருவதால் "ஏன் இப்படி என்னைக் கை விட்டீர்?" என்று நான் அவரைக் கேட்க முடியாது.

ஆனால் ஒன்று நண்பர்களே. எத்தனை பேர் எவ்வளவு வைரஸைப் புகுத்தினாலும் நான் தொடர்ந்து எழுதிக்கொண்டுதான் இருப்பேன். சாருஆன்லைனில் எழுத முடியாவிட்டால் லக்கிலுக், நர்சிம், கேபிள் ஷங்கர் என்று நண்பர்களின் வலைமனைகளின் மூலமாவது எழுதுவேன். என் உயிர் உள்ளவரை யாராலும் எதனாலும் என் எழுத்தை நிறுத்த முடியாது.

ஓர் நற்செய்தி

வாசகர்களும் நண்பர்களும் என்னை மன்னிக்க வேண்டும். கடந்த நான்கைந்து நாட்களாக *உயிர்மை*க்கு எழுதிக்கொண்டிருந்தேன். அதனால் தான் நம்முடைய இணைய தளத்தில் எதுவும் எழுதவில்லை. நாம் கூர்ந்து கவனித்துப் பார்த்தால் தெரியும். கடந்த ஏழு ஆண்டுகளாக ஒவ்வொரு மாதமும் 15ஆம் தேதியிலிருந்து 20ஆம் தேதி வரை இணைய தளத்தில் என்னுடைய கட்டுரை கள் எதுவும் இருக்காது. அல்லது, ஒன்றோ இரண்டோதான் இருக்கும். காரணம், அந்தத் தேதிகளில்தான் *உயிர்மை*க்கு எழுதுவேன். ஆனால் இதன் பொருட்டு பல அரிய நண்பர்களை இழந் திருக்கிறேன். இந்தத் தேதிகளில் அவர்கள் போனில் அழைக்கும் போது நான் எடுப்பதில்லை என்ப தால் நட்பைத் துண்டித்து விடுவார்கள்

ஆனால் இவ்வளவு சிரமப்பட்டு எழுதும் கட்டுரை *உயிர்மை* வருவதற்குள் *கலா கௌமுதி*யில் வந்துவிடும். இப்போதுகூட *தமிழ்ப் படம்*, *கோவா*, *மை நேம் இஸ் கான்* ஆகிய மூன்று படங்களைப் பற்றியும் நான் எழுதிய கட்டுரை வரும் திங்கள் கிழமை அன்று *கலா கௌமுதி*யில் பிரசுரமாகிறது. ஆனால் *உயிர்மை* மார்ச் முதல் தேதிதான்

கிடைக்கும். *கலா கௌமுதியைப்* போல் *உயிர்மையையும்* வாரப் பத்திரிகையாக மாற்றுங்கள் என்று மனுஷ்ய புத்திரனிடம் எவ்வளவோ சொல்லிப் பார்க்கிறேன். மனுஷன் கேட்க மாட்டேன் என்கிறார்.

மிகுந்த சிரமம் எடுத்து எழுதிய கட்டுரை அது. *மை நேம் இஸ் கானை* இன்னொரு முறை பார்க்க வேண்டியிருந்தது. உடனே இன்னொரு முறையும் டிக்கட் எடுத்து அனுப்பினார் ராஜேஷ். நைட் ஷோ பார்த்துவிட்டு வெளியே வந்தால் ஆட்டோ கிடைக்கவில்லை. நள்ளிரவு ஒன்றரை மணி. சிட்டி செண்டரிலிருந்து வீட்டுக்குச் செல்ல ஒன்றரை கிலோ மீட்டர் நடக்க வேண்டும். நல்ல பசி. இரவு சாப்பிட்டிருக்க வில்லை. வீட்டில் கொஞ்சம் சோறும், ரசமும் இருந்தது. ரசத்தை சூடு பண்ணி சுண்டைக்காய் ஊறுகாயைத் தொட்டுக் கொண்டு சாப்பிட்டுவிட்டு கட்டுரையை எழுதி முடிக்கும்போது காலை எட்டு மணிக்கு மேல் ஆகிவிட்டது.

அன்றைய தினமே–அதாவது, நேற்று – கட்டுரை *கலா கௌமுதிக்கு* அனுப்பப்பட வேண்டும். அலுவலகத்துக்கு விடுப்பு சொல்லி விட்டு அந்த 16 பக்க கட்டுரையை உடனடியாக மொழிபெயர்த்து அனுப்பிய வர் முகேஷ். இப்படி என் எழுத்து இயக்கத்துக்கு பக்க பலமாக இருப்பவர்கள் பலர் இவர்களின் உதவி இல்லையேல் என் எழுத்து இல்லை. இவர்களுக்கு என் நன்றி.

நேற்று இரவு *கலா கௌமுதி* ஆசிரியர் போன் செய்தார். “இதுவரை நீங்கள் எழுதிய கட்டுரைகளிலேயே இதுதான் ஆகச் சிறந்தது” என்றார். “நீங்கள் கொடுக்கும் ஊக்கத்திற்கு நன்றி” என்றேன். சிரித்தபடியே “நீங்கள்தான் எங்களுக்கு ஊக்கமளிக்கிறீர்கள்” என்றார்.

நான் சொல்ல வந்த நற்செய்தி இது அல்ல. இந்த நற்செய்தியை நான் ஒரு மாதத்திற்கு முன்னமே சொல்லியிருக்க வேண்டும். ஆனாலும் பல லட்சக்கணக்கான மக்கள் வாசிக்கும் *குமுதம், விகடன்* ஆகிய பத்திரிகைகள் மூலம் இந்தச் செய்தியைத் தெரிவிக்க வேண்டும் என்று எண்ணியிருந்தேன். அதனால்தான் தாமதம். அடியேனின் *ஸீரோ டிகிரி* நாவல் கலிஃபோர்னியா ஸ்டேட் யூனிவர்ஸிட்டியில் Comparative World Literature-இல் பாடமாக வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவில் பத்துப் பதினைந்து மாணவர்கள் அல்லாமல் நூற்றுக்கணக் கான மாணவர்கள் படிக்கிறார்கள் என்பதால் இது ஒரு முக்கியமான விஷயம் என்று அறிந்தேன். இது தமிழர்கள் எல்லோருக்குமான பெருமை என்ற காரணத்தால்தான் இதை லட்சக்கணக்கான வாசகர் களுடன் பகிர்ந்துகொள்ள விரும்பினேன்.

இந்தக் காரணத்தினால்தான் உங்கள் ஊரிலுள்ள நூலகங்களில் *ஸீரோ டிகிரியின்* ஆங்கிலப் பதிப்பின் ஒரு பிரதியை வாங்கி வையுங் கள் என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டேன். இந்த சாதாரண உதவியைக்கூட செய்யாமல் என்னுடன் தொடர்ந்து பல மணி நேரங்கள் பேச நினைத்த தரங்கிணி போன்றவர்களின் சுயநலத்தைத் திட்டி

எழுதியதும் இந்தக் காரணத்தினால்தான். ஒரே ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்தி விடுகிறேன். நான் ஒருவரை – அவர் இளையராஜாவாக இருந்தாலும் சரி, யாருக்கும் தெரியாத ஒரு தரங்கிணியாக இருந்தாலும் சரி– விமர்சிக்கிறேன் என்றால் அது tip of the iceberg என்றுதான் புரிந்து கொள்ள வேண்டும். சொல்லப்படாத ஆயிரம் சேதிகள் அதில் இருக்கின்றன.

ஒருநாள் சினிமா பார்த்துக்கொண்டிருந்தேன். அந்த வாசகி அழைத்தார். தமிழ்க் கலாச்சாரத்துக்கும் கூச்சலுக்கும் உள்ள சம்பந்தம் உங்களுக்குத் தெரியும். காரணம் இல்லாமலே கூச்சல் போடுவார்கள். படமோ விஜய் நடித்தது. அவர் அடித்தால் பின்னணியிலிருந்து நூறு பேர் அய்யோ அம்மா என்று அடிக்குரலிலிருந்து சப்தம் எழுப்புகிறார்கள். சண்டைக் காட்சி. அழைத்தார் நிரஞ்சனா. போனை ஆன் பண்ணினேன். நான் திரையரங்கில் இருப்பதை அவரே புரிந்து கொள்ள முடியும் அல்லவா? ம்ஹூம். அதுதான் எருமைத்தோல் பூர்ஷ்வா ஆயிற்றே? மறுபடியும் போன். மறுபடியும் ஆன் பண்ணிக் காண்பித்தேன் ம்ஹூம். புரியவில்லை. இப்படியே இந்த அபத்த நாடகம் ஐந்தாறு முறை நடந்தேறியது. அவரும் விடுகிறாற்போல் இல்லை. நேரில் மாட்டியிருந்தால் அன்றைய தினம் உண்டு இல்லை என்று பண்ணியிருப்பேன். ஏற்கனவே அந்தப் படத்தைப் பார்த்து *(வேட்டைக்காரன்)* நான் வாழ்ந்து கொண்டிருப்பது ஒரு நாகரிகமடைந்த சமூகத்தில்தானா அல்லது ஏதோ ஒரு மெண்டல் அஸைலத்தில் இருந்து கொண்டிருக்கிறோமா என்ற சந்தேகத்தில் இருந்தால் இந்தப் பெண் வேறு போனில் டார்ச்சர் கொடுத்துக் கொண்டிருந்தார் இதில் பெரிய வேடிக்கை என்னவென்றால், இவர் ஒரு மனநோய் மருத்துவர் என்பதுதான்.

அதனால்தான் சொன்னேன், முழுக் கதையையும் எழுதினால் அது இன்னொரு *ராஸ லீலா*வாகப் போய்விடும் என்று. ஆனாலும் அந்தப் பெண்ணுக்குப் புரியவில்லை, 'நாம் என்ன தப்பு செய்தோம் என்று இந்த ஆள் இப்படிக் குதிக்கிறார்?' என்றே அவருடைய குழந்தை மனம் அவரைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. பாவம்.

இன்னொரு நற்செய்தி. தன்னுடைய ஒரே ஒரு படத்திற்காக ஏழு அவார்டுகளை வாங்கிக் குவித்திருக்கும் ஒரு ஹாலிவுட் இயக்குனர் போன் செய்தார். அவரை ஏற்கனவே ஒருமுறை சந்தித்திருக்கிறேன் என்பதால் ஓரிரு பக்கங்களை எழுதி முடித்துவிட்டு அவரை நான் திரும்ப அழைத்தேன் "உங்களுடைய *ஸீரோ டிகிரி*யை படித்துக் கொண்டிருக்கிறேன். அதைப் பற்றித்தான் உங்களிடம் பேச அழைத்தேன். ஆனால் இப்போது அந்த flow போய்விட்டதே; ம்.. சரி, திரும்பவும் வரும்; அப்போது அழைக்கிறேன்" என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிடாமல் மேலும் ஏதோ பேசிக்கொண்டிருந்தபோது, திரும்பவும் அந்த ஃப்ளோ கிடைத்து *ஸீரோ டிகிரி* பற்றி அரை மணி நேரம் மழையைப் போல் பொழிந்துகொண்டிருந்தார்

எனக்கு இந்த நாவல் பிடித்திருக்கிறதா இல்லையா என்று சொல்லத் தெரியவில்லை. ஒருவிதமான உன்மத்த நிலையில் இதனுள் ஆழ்ந்து கொண்டிருக்கிறேன் என்பது மட்டுமே புரிகிறது. எப்போது முடிப்பேன், முடிப்பேனா இல்லையா எதுவும் புரியவில்லை. ஒரு chaos. இந்த கேயாஸ் உங்கள் மொழியிலிருந்து உருவாகிறதா அல்லது வெளியிலேயே இருக்கிறதா அல்லது ஏதோ ஒரு வசியத்தின் மூலம் உங்களுடைய கேயாஸை எனக்குள் திணிக்கிறீர்களா.

இப்படியே ஆங்கிலத்தில் அமெரிக்க உச்சரிப்பில் அரை மணி நேரம்.

"நாவலில் எவ்வளவு தூரம் போயிருக்கிறது?" என்றேன்.

"முப்பது பக்கம் முடித்திருக்கிறேன்" என்றார். முழுசாக முடித்ததும் என்ன சொல்வார் என்பதைக் கேட்க நானும் உங்களைப் போலவே ஆவலுடன் காத்திருக்கிறேன். அவர் யார் என்று தெரிய வேண்டுமா? அதையும் பிறகு சொல்கிறேன். இப்போதைக்கு ஒரே ஒரு தகவல். அவர் ஆண்டனி ஹாப்கின்ஸின் நண்பர்!

20.2.2010

ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு...(4)

என் உடன் இருப்பவர்களுக்கு நான் 'அளிக்கும்' சுதந்திரம் பற்றி தயா குறிப்பிடுகிறார். இதுபற்றி மிஷ்கின் சொன்ன விஷயம் சுவாரசியமாக இருந்தது. "என்னுடைய சுதந்திரத்தை நான் என் தந்தையிடமிருந்து திருடிக்கொண்டேன்." இதை விட சுதந்திரத்தைப் பற்றி விளக்குவது கடினம். என்னுடைய சுதந்திரம் உங்களுடைய சட்டைப் பையில் இருந்தால் அதை அபகரித்துக்கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. உண்மையில் சொன்னால், சுதந்திரம் என்றால் என்ன அர்த்தம் என்றே எனக்கு விளங்கவில்லை. நானும் நீங்களும் சமம். அதோடு முடிந்தது. என்னுடைய சுதந்திரத்துக்குத் தடையாக இருக்கும் வெளிகளில் நான் செல்வதே இல்லை. அங்கிருந்து தப்பி வேறோர் சுதந்திரமான வெளிக்குச் சென்றுவிடுவேன். என்னுடைய சுதந்திரத்துக்கு யாரொருவர் தடையாக இருந்தாலும் அவரிடமிருந்து அகன்றுவிடுவேன். அதேபோல் அடுத்தவரின் சுதந்திர வெளியில் நான் குறுக்கிட மாட்டேன். அடுத்தவரின் சுதந்திரத்தில் குறுக்கிடாமல் இருப்பதே என்னுடைய மதம் என்றுகூட சொல்லுவேன். அதனால் தான் என்னால் எல்லோருடனும் சகஜமாகப் பழக

முடிகிறது. அதனால்தான் என்னால் இளமையாகவும் இருக்க முடிகிறது.

*ராஸ லீலா*வில் அரசு எந்திரத்தை நான் தைரியமாக எதிர்த்து எழுதியது பற்றி: மனுஷ்ய புத்திரனுக்கு மிகவும் பிடித்த நாவல் அது. அதைப் பற்றி அடிக்கடி மிகுந்த பிரியத்துடன் பேசுவார். சமீபத்தில்கூட அதன் முதல் பகுதி தனக்கு காஃப்காவை (1883–1924) ஞாபகப் படுத்தியதாகக் குறிப்பிட்டார். துரதிர்ஷ்டவசமாக எனக்கு காஃப்காவை துளியும் பிடிக்காது. நான் வெறுக்கும் ஒரு எழுத்தாளன் அவன். என்ன ஒரு துயரமான எழுத்து! அவன் எழுத்திலுள்ள gloominess எனக்குப் பிடிக்கவே பிடிக்காத ஒன்று.

சுந்தர ராமசாமி பள்ளியால் நேர்ந்த கேடுகளில் இதுவும் ஒன்று. காஃப்கா வின் மீதான ஈடுபாடு. எனக்கு காஃப்காவைப் பிடிக்காது என்றேன். பிறகு யாரைப் பிடிக்கும்? மர்க்கி தெ ஸாத் (1740–1814), ஆஸ்கார் வைல்ட் (1854–1900), அந்தோனின் ஆர்த்தோ (1896–1948), மூார் பத்தாய் (1897–1962) போன்ற ஃப்ரெஞ்ச் எழுத்தாளர்களே என்னுடைய முன்னோடிகள். ஜெர்மனியைப் பொறுத்தவரை அங்குள்ள இலக்கிய வாதிகள் அல்ல, தத்துவவாதிகளே என்னைக் கவர்ந்தவர்கள். ஃப்ரெட்ரிக் நீட்ஷே என்னுடைய ஆசான். மேலும், சு.ரா. பள்ளி, நகுலன் பள்ளி என்று தமிழ்நாட்டில் இருப்பதுபோலவேதான் ஐரோப்பாவிலும் உள்ளன என்று நினைக்கிறேன். இந்த காஃப்கா, கம்யூ கோஷ்டியெல் லாம் ஒரு பக்கம். நான் மேலே குறிப்பிட்ட ஆர்த்தோ பள்ளி ஒரு பக்கம்.

தயா, நான் கொச்சி பக்கம் அடிக்கடி வருவேன். அப்போது எந்தத் தயக்கமும் இல்லாமல் என்னை வந்து சந்தியுங்கள். எழுத்தாளனை அவனுடைய சிறந்த வாசகன் நேரில் சந்திக்க மாட்டான் என்று சுஜாதா சொன்னதை பல அன்பர்கள் சீரியஸாக எடுத்துக் கொண்டு விட்டார்கள் என்று நினைக்கிறேன். எழுத்தாளர்களின் இம்மாதிரி பிரகடனங்களை அவ்வப்போது கேட்டு ரசித்துவிட்டு மறந்துவிட வேண்டும்; புதிதாக அறிமுகமாகும் பெண்களிடம் ‘உங்கள் குரலைப் போல் நான் கேட்டதே இல்லை’ என்று சொல்வதில்லையா, அதுபோல.

ஆனால் ஒன்று, சில பேர் எனக்கு அவ்வப்போது மெண்டல் டார்ச்சர் கொடுத்து விடுகிறார்கள். சமீபத்தில் *உயிர்மை*க்கு ஐந்து நாள் எழுதிக் கொண்டு இருந்தேனா, பல தோழிகளின் போனை எடுக்கவில்லை. இதில் ஒரு தோழிக்கு ரொம்பக் கோபம், வருத்தம். ஆறாம் நாள் போன் செய்தபோது எடுத்தேன்; எதிர்ப்பக்கம் ஒரே அழுகை. அடப் பாவிகளா!

‘அந்த ஐந்து நாளில் நான் அந்தக் காலத்து தூரமான பெண் பிள்ளை போல்தான் இருப்பேன்; தவறாக நினைக்காதீர்கள்’ என்று சொன்ன பிறகுதான் அழுகை சிரிப்பாக மாறியது.

இப்போது மீண்டும் தயாவின் கடிதம் ஒன்று:

ஹய்யோ சாரு.

இந்த இரண்டு நாட்களாக என்னால் சத்தியமாக நடக்க முடிய வில்லை. நிச்சயமாக காற்றில்தான் பறந்து கொண்டிருக்கிறேன். ரஜினி யின் பரம ரசிகன் முன்பு திடீரென ரஜினிகாந்த் தோன்றி, அவனுடன் நேரடியாக உரையாடி ஆட்டோகிராப்பும் போட்டுத் தந்தால் எப்படி உணர்வானோ அதுபோலவேதான் நானும் இந்த நாட்களில் உணர் கிறேன்.

இன்றைய எழுத்துலகின் சூப்பர் ஸ்டார் நீங்கள்தான்.

நான் எதிர்பார்க்கவே இல்லை, என் கடிதத்துக்கு பதிலாக இவ்வளவு சிறந்த ஒரு கடடுரை கிடைக்கும் என்று. என் நண்பர்களுடன் இதைக் கொண்டாடத் திட்டமிட்டிருக்கிறேன்...

மேலும், கட்டுரை குறித்த வாசக நண்பர்களின் கருத்துக்களை முற்றிலும் ஏற்பதற்கில்லை. தங்களின் வாசகர்கள் குடியை மட்டுமே எடுத்துக் கொள்கிறார்கள் என்பது சரியல்ல. அது பற்றிப் பேசுவதும் விவாதிப்பதும் உற்சாகமானதாக இருக்கலாமே ஒழிய, 'இன்றைய இளைய சமுதாயம் குடித்து அழிந்து போகிறது; அதுவும் உங்களைப் படிப்பதால்' என்பது நிச்சயம் சரியான கருத்து அல்ல.

அங்ஙனம், உங்களின் உழைப்பையும் அர்ப்பணிப்பையும் கவனம் கொள்ளாத ஒருவன் தங்களின் முழுமையான வாசகனாக ஒரு போதும் இருக்க முடியாது.

மலையாளம் பேசுவது/படிப்பது ஆகியவற்றில் ஓரளவிற்கு முன்னேறிக் கொண்டிருக்கிறேன். அப்படியே ஸ்பானிஷ் மொழியையும் நானே கற்றுக் கொண்டு வருகிறேன். அடுத்ததாக அரபி என்று முடிவு...

என்றுமே நான் மொழியின்மீது வெறி கொண்டவன் இல்லை. தமிழ் தமிழ் என்று பிதற்றுவதிலும் விருப்பம் இல்லை. ஆனாலும் மூன்றாவ தாக ஒரு மொழி கற்கவேண்டும் என்ற உத்வேகமும் ஆசையும் எனக்கு உங்களைப் படித்தபோதுதான் தோன்றியது. ஆம், நான் உங்கள் மீது பொறாமை கொண்டதற்கு மற்றொரு காரணம், இந்த மொழிகளு டன் நீங்கள் கொண்டிருக்கும் பரிச்சயம்தான்.

எனக்குப் பிடித்த விஷயங்களில் ஒன்று, ஊர் சுற்றுவது. ஆறு மாதத் திற்கு ஒரு முறையேனும் ஒரு சுற்றுலா செல்வதில் பெரும் விருப்பம் உண்டு எனக்கு. சுற்றுலா என்றால் ஒரு சுற்றுலா தளத்திற்குப் போய், வெறும் புகைப்படங்களை எடுத்துக்கொண்டு வருவதல்ல. அங்கே ஆற அமர இருந்து அவ்விடத்தை முழுமையாக அனுபவித்து வருவது. நான் 'லஹௌல் ஸ்பிதி' பற்றித் தெரிந்துகொண்டதே உங்கள் எழுத்து மூலமாகத்தான். அப்போதே முடிவு செய்துவிட்டேன், வாழ்வில் ஒரு முறையேனும் அங்கே செல்ல வேண்டும் என்று. அதுவும் நிச்சய மாக சாருவுடன்தான். விரைவிலேயே அதற்கான பொருளாதாரத் தகுதியை அடைந்துவிட்டு தங்களை அழைக்க வேண்டும் என்று

இருக்கிறேன். வருவீர்கள்தானே?

என் வாசிப்பு குறித்து. நான் அதிக நேரம் விவாதிப்பது மிகச் சிலருடன்தான். அவர்களில் ஒருவர் என் பள்ளித்தோழி. இப்போது அதே பள்ளியில் ஆசிரியை. அந்தத் தோழியின் மகனுக்கு இரண்டு வயதாகிறது. அவள் என்னிடம் கொடுத்த வாக்குறுதி, என் மகனை நிச்சயமாக ஒரு நல்ல படிப்பறிவு உள்ளவனாக வளர்ப்பேன் என்றுதான். இத்தனையும் நான் இங்கே விவரிப்பதற்குக் காரணம், உங்களின் எழுத்து தூண்டுவது, ஒரு சமூக மாற்றத்தை. அந்த சமூக மாற்றம் ஒரு விடியலில் நிகழ்ந்துவிடக் கூடியதா என்ன?

இதையெல்லாம் முழுமையாக உள்வாங்காமல் நண்பர்கள் அப்படிச் சொல்வதும், கவலையுறுவதும் எனக்கு உவப்பானதாக இல்லை.

இன்னும் நிறைய உள்ளது.

Muchas gracias.

தயா,

எர்ணாகுளம்

16.02.2010

○

அன்பு சாரு,

வாழ்த்துக்கள் என்று ஒற்றை வார்த்தையில் சொன்னால் நிச்சயமாக அது சரி அல்ல.

முதல் நற்செய்தியைப் படித்ததும் நான் குதித்தேன்.

தங்களின் எழுத்துக்கு மற்றுமொரு சிறந்த அங்கீகாரம்.

நீங்கள் இவ்வளவு உயர்ந்த நிலையிலும், பல இடர்களைப் புறம் தள்ளிவிட்டு, தமிழில் எழுதுவது எங்கள் பாக்கியமே!

என் மனம் கொண்டாட்டமான மற்றும் பதற்றமான தருணங்களில் ஒரு மாதிரி படபடப்பாக இயங்கும். இப்போது இரண்டையுமே அனுபவிக்கிறேன். கொண்டாட்டம் மேலே சொன்னது. பதற்றம் கீழே:

'என்னடா இது, சந்தோசத்துக்கு மேல் சந்தோசமாக வந்து கொண்டிருக் கிறதே; என்ன ஆகப் போகிறதோ!' என்று ஒரு உறுத்தல் இருந்தது.

இன்று அலுவலகம் வந்து, தங்கள் இணையதளம் வாசித்த உடனே தெளிவாகிவிட்டது. எதிர்பார்த்தது போலவே அந்த எதிர்பாராதது நடந்து விட்டது!

ஆம்! இணையதள கட்டுரைகள் வைரஸ் புகுத்தி அழிக்கப்பட்ட விஷயம்.

ஏதேனும் ஒருவகையில் உங்கள் எழுத்து இயக்கத்தைக் குலைத்தே தீர வேண்டும் என்று திரியும் சில விஷமிகள் செய்த சதி இது.

தமிழில் தற்போது கொண்டாடப்படும் எழுத்தாளர் தாங்கள் தான். அதனால் விளைந்த பொறாமையின் செயலே இது.

"அடப்பாவிகளா! இன்னும் என்னவெல்லாம்தான் பண்ணப் போறீங்க" என்று அந்தப் பொறாமை மனிதர்களிடம் கேட்கத் தோன்றுகிறது.

ஆனாலும் அவர்களுக்கு ஒன்று தெரியவில்லை போலும், சாரு ஒரு டைனோசர் என்பதும், அவரிடம் இந்த வைரஸ் போன்ற விளையாட்டுப் பொருட்கள் எல்லாம் வேலை செய்யாது என்றும்.

இன்னும் என் இதயத் துடிப்பு குறையவில்லை.

எல்லாவற்றையும் தாண்டி, ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு...(3) இன் கடைசி வாக்கியங்கள்... என்னை மகிழ்ச்சியுறச் செய்து, சாந்தப் படுத்தியது.

தயா

எர்ணாகுளம்

❍

தயா, நீங்களாக மலையாளம் கற்றுக் கொள்வது, இப்போது ஸ்பானிஷில் இறங்கியிருப்பது, சிறிது நாளில் அரபி என்றெல்லாம் எழுதியிருக்கிறீர் கள். அந்தத் திறமைதான் எனக்கு வர மாட்டேன் என்கிறது. எல்லாமே அரைகுறையாகத் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறேன். ஃப்ரெஞ்ச், சம்ஸ்கிருதம் இரண்டும் கூட இந்தப் பட்டியலில் அடங்கும். தமிழைத் தவிர வேறு ஒரு மொழியும் ஒழுங்காக வர மாட்டேன் என்கிறது.

பயணம் குறித்து நிறைய திட்டங்கள் உண்டு. காசுதான் இல்லை. சமீபத்தில் பிரேம் என்ற நண்பரைச் சந்தித்தேன். லண்டனில் வசிப்பவர். அவர் கப்பலில் சமையல்காரராக இருந்து உலகம் முழுவதும் சுற்றிய அனுபவங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார். ரெஸிடன்ஸி டவர்ஸில் உள்ள பைக் அண்ட் பேரலில் மதியம் ஆரம்பித்த பேச்சு இரவுதான் முடிந்தது.

அவருடைய கப்பல் கின்யாவில் உள்ள மொம்பாஸா என்ற துறை முகத்தில் நின்றபோது நடந்த சம்பவம். ஒரு பாரில் அமர்ந்து குடித்துக் கொண்டிருந்த போது எதிர் இருக்கையில் அமர்ந்திருந்த வேசி ஒருத்தி இவருக்கு மிக அருகில் இருந்த நாற்காலியில் வந்து அமர்ந்து கொண் டாளாம். இவரிடமோ கையில் அவ்வளவு பணம் இல்லை. அதை அவளிடம் சொல்லியிருக்கிறார் அவளோ 'காசு இல்லாவிட்டாலும் பரவாயில்லை; என்னுடன் வீட்டுக்கு வந்து விட்டுப் போ" என்று சொல்லியிருக்கிறாள் பார்ப்பதற்கு பிரேம் ஆமிர் கான் மாதிரி

இருப்பார். இவர் தயங்க, அவள் வற்புறுத்த, இவர் தயங்க, அவள் வற்புறுத்த, கடைசியில் அவளுடன் சென்றுவிட்டார் பிரேம்.

ஆனால் பாருங்கள், கடைசியில் சொதப்பிவிட்டார். செக்ஸ் என்பது உளவியலும் சேர்ந்தது அல்லவா? கையில் பணம் இல்லாத யோசனையில் பிரேமுக்கு விரைவிலேயே ஆட்டம் க்ளோஸ். மறுநாளும் கப்பல் அங்கேயே இருக்கும் என்பதால் இன்றைய தினமும் சந்திப்போம் என்று சொல்லி வந்திருக்கிறார். மறுநாள் ஷோக்காக கையில் பணம் எடுத்துக்கொண்டு அதே பாருக்கு வந்தார் பிரேம். அன்றைக்கு அவர் நிச்சயமாக சொதப்பப் போவதில்லை. குறித்த நேரத்தில் அவளும் வந்தாள். மிக ஆடம்பரமான பகட்டு ஆடையை உடுத்தியிருக்கிறாள். ஆனால் செக்ஸ் வேண்டாம் என்று சொல்லிவிட்டாளாம். நிறைய இடங்களுக்கு ஷாப்பிங் சென்று பிரேமுக்கு என்னென்னவோ பரிசுப் பொருட்களை வாங்கிக் கொடுத்திருக்கிறாள். நல்ல சாப்பாடு. கடைசியில் டாட்டா. எந்தச் செலவுக்கும் அவரைப் பணம் கொடுக்கவே அனுமதிக்கவில்லை அவள். வாழ்வில் மறக்கவே முடியாத ஒரு மிகப் பெரும் கொண்டாட்டமான நாள் அது.

“மறுநாள் கப்பல் கிளம்பி விட்டது. நடந்து பத்து ஆண்டுகள் இருக்கும். இன்று வரை அவளைப் பார்க்கும் சந்தர்ப்பம் அமையவில்லை” என்று முடித்தார் பிரேம்.

அவருக்குக் கண் கலங்கவில்லை. எனக்குக் கலங்கி விட்டது.

லண்டனிலிருந்து கிளம்பி லாட்வியா, எஸ்தோனியா, உக்ரேய்ன், அஸர்பெய்ஜான், உஸ்பெக்கிஸ்தான் போன்ற அந்தக் காலத்து சோவியத் நாடுகளின் சாலை வழியே செல்லலாம் என்று அவரும் நானும் சேர்ந்து ஒரு திட்டம் போட்டோம். பார்க்கலாம்.

அது ஒரு பக்கம் இருக்க, லஹெளல் ஸ்பிதிக்கு யார் கூப்பிட்டாலும் வருவேன். கரும்பு தின்னக் கூலியா?

ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு...(5)

தயாவின் கடிதத்தில் தெரியும் ஒரு பரவச உணர்வு பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும்.

சில தினங்களுக்கு முன்பு *உயிர்மை* அலுவலகத் துக்குச் சென்றிருந்தேன். மனுஷ்ய புத்திரனும் நானும் எதிர் எதிர் இருக்கைகளில் அமர்ந்து ஒருவரை ஒருவர் முறைத்துப் பார்த்துக்கொண்டி ருந்தோம். எனக்கு அவரிடம் சில விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டும். ஆனால் போலீஸ் கமிஷனரை வைத்துக்கொண்டா வங்கிக் கொள்ளை பற்றித் திட்டமிட முடியும்? அவர் பக்கத்தில் அவ்வளவு ஆட்கள் இருந்தார்கள்.

அப்போது எக்ஸ்க்யூஸ் மீ என்ற இனிய குரலில் ஒரு பெண் உள்ளே வந்தார். வயதை அனுமானிக்க முடியவில்லை. 22 இருக்கலாம். நானும் எத் தனையோ பேரை அழகி அழகி என்று எழுதி யிருக்கிறேன். ஆனால் அத்தனை பேரும் இந்தப் பெண்ணுக்கு முன்னால் உறை போடக் காணாது. சிலுக்கு ஸ்மிதா, நமீதா இரண்டு பேரையும் சேர்த்து செதுக்கியது போன்ற ஒரு உருவம். மை காட்! இப்படி ஒரு படு பயங்கரமான அழகை என் நேர் வாழ்க்கையில் கண்டதே இல்லை. வந்த பெண் என்னைப் பார்த்து ஹாய் சாரு என்றார். பிரிட்டிஷ் உச்சரிப்பு. அவருக்கு என்னைத்

தெரிந்திருக்கிறது என்று மட்டுமே புரிந்துகொண்டேன் அவரை எனக்கு முன்பின் தெரியாது. பிறகு மனுஷ்ய புத்திரனிடம் "சாருவின் எல்லாப் புத்தகங்களும் வேண்டும்" என்றார்.

அடியேனின் 27 புத்தகங்களும் வந்தன.

"ஓ, இவ்வளவையும் எடுத்துக்கொண்டு போவது கஷ்டம்... என்று சொல்லிவிட்டு கதைகளை மட்டும் தனியே எடுத்து வைத்தார் மற்ற புத்தகங்களை நான் சொல்லும்போது லண்டனுக்கு அனுப்பி வையுங்கள் என்று சொல்லி, எல்லாப் புத்தகங்களுக்கும் பணத்தைக் கொடுத்தார்.

மனுஷ்ய புத்திரனின் மனதில் ஓடிய எண்ணங்களை அப்படியே என்னால் படிக்க முடிந்தது. ஒரு பக்கம், புத்தகங்கள் விற்பனை ஆவதால் சந்தோஷம். மறு பக்கம். சரி, அடுத்தவர் மனதைப் படிப்பது அத்துமீறிய செயல். விட்டுவிடுகிறேன்.

அவர் சென்றதும் மனுஷ்ய புத்திரனிடம் "என்னங்க இது?" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன். "ஸ்டன்னிங் ப்யூட்டி" என்றார்.

பிறகு என்னை வாசிக்கும் – ம்ஹூம், தப்பர்த்தம் வருகிறது – என் எழுத்தை வாசிக்கும் வாசகர்கள் பெரும்பாலும் பிற எழுத்தாளர்களை வாசிப்பதில்லை என்ற விஷயத்தைப் பற்றி மனுஷ்ய புத்திரனும் நானும் விவாதித்தோம். "ஜெயகாந்தனுக்கும் உங்களுக்கும்தான் இப்படி ஒரு Cult ஸ்டேடஸ் ஏற்பட்டிருக்கிறது" என்றார் மனுஷ்.

ம்... தன் கோபத்தை இப்படித்தான் ஒருவர் வெளிப்படுத்த முடியும் என்று புரிந்துகொண்டேன். பிறகு அது பற்றியோசித்தேன். ஜெய காந்தன் ஒரு இருண்ட உலகைக் காண்பித்தவர். நான் அப்படி அல்ல என்று உங்களுக்குத் தெரியும்.

ஜெயகாந்தனுக்கு பதிலாக என் எழுத்தோடு நெருங்கி வருபவர் சுஜாதா என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. அவருக்குத்தான் இப்படிப் பலதரப்பட்ட மட்டங்களில் வாசகர்கள் இருந்தார்கள். சுஜாதாவைத் தவிர அவர்கள் வேறு யாரையும் படிக்க மாட்டார்கள். இப்போது சுஜாதாவின் வாசகர்கள் பலர் என் எழுத்தின் பக்கம் வருவதைக் காண்கிறேன்.

வயகரா பற்றித் தமிழில் எழுதிய இரண்டு எழுத்தாளர்கள் சுஜாதாவும் அடியேனும்தான். அடியேனுடையது *காமரூப* கதைகளில் காணக் கிடைக்கிறது.

சுஜாதாவின் வயகரா கதை ரொம்பப் புகழ் பெற்றது.

ஒரு ஆள் தன் காதலியிடம் சொதப்பிவிடக் கூடாது என்ற பயத்தில் ஒரேயடியாக ஐந்து வயகராவைப் போட்டுவிட்டான். ஐந்து வயகரா போட்டால் நேரடி மோட்சம்தான், ஆள் காலி. ஆனால் அவனுடைய சவப்பெட்டியை மட்டும் மூடவே முடியவில்லை.

ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு என்ற இந்தக் கட்டுரையைப் படிப்பவர்களுக்கு ஒரு எண்ணம் தோன்றும், மஹாராஜாவைப் போல் வாழ்கிறான் இவன் என்று. தப்பில்லை. பல தருணங்களில் அப்படித் தான் வாழ்கிறேன். ஆனால் எல்லா தினங்களும் அப்படி இருப்பதில்லை. ஒருநாள் மஹாராஜா மறுநாள் பிச்சைக்காரன்.

சமீபத்தில் நடந்த ஒரு விஷயம். காலையில் ஓட்ஸ் கஞ்சி. மதியம் கொஞ்சம் கேரட்டும் தக்காளிப் பழமும். அவந்திகா ஊரில் இல்லை. எனக்கோ சமைக்க முடியாதபடி வேலை. மாலை நான்கு மணிக்குக் கொலைப் பசி. கையில் 50 ரூ. இருந்தது. நேராக ஐசிஐசிஐ சென்றேன். நம்பினால் நம்புங்கள்; இல்லாவிட்டால் உங்கள் இஷ்டம். 53 பைசா தான் கணக்கில் இருந்தது. கையில் இருந்தது 50 ரூ. அதோடு ராயர் கஃபே சென்றேன் பயந்து பயந்து ஒரு மைசூர் போண்டாவும், ஒரு அடையும் சாப்பிட்டேன். மிக அற்புத ருசியும், சென்னையிலேயே கம்மி விலையும் கொண்ட உணவு விடுதி அது. இருந்தாலும் ஒரு பயம். காபியைக்கூட வேண்டாம் என்று சொல்லிவிட்டுக் கிளம்பி னேன். எனக்கு ராயர் கஃபே காபி என்றால் உயிர் என்று ராயருக்குத் தெரியும். பலமுறை வற்புறுத்தி தருகிறேன், தருகிறேன் என்றார் நேரமாகிவிட்டது என்று பொய் சொல்லிவிட்டு ஐம்பதை நீட்டினேன். 32 ரூபாயைத் திருப்பிக் கொடுத்தார் சே, காபி குடித்திருக்கலாம். ஆனால் இப்போது கேட்க முடியாது. அடக்கிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தேன்.

25.2.2010

ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு...(6)

வணக்கம் சாரு,

நலமா?

நீண்ட நாடகள் கழித்து தங்களுக்கு மின்னஞ்சல் அனுப்புகிறேன். அகநாழிகை புத்தக வெளியீட்டில் சந்தித்தது. ஞாநிக்கும் தங்களுக்கும் பூங்கொத்து தந்தது அடியேன்தான். நினைவு இருக்கிறதா?

சமீபத்தில் தங்களுடைய 'ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு' கட்டுரைகளைப் படித்தேன். பழைய கண்ணதாசன் பாடல்களைக் கேட்டதொரு பரவசம். 'ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு' எவ்வளவு நேர்மையாக இருக்கிறது! எவ்வளவு அழகான போதை தரும் வரிகள்!

கண்ணதாசனுக்கு அடுத்து குடியைக் கவித்துவமாகச் சொன்னது இரண்டு பேர். ஒன்று, மனுஷ்யபுத்திரன் ('கடைசிக்கோப்பை'). அடுத்து நீங்கள். அரசனைப் போல குடிப்பதாகச் சொல்லியிருந்தீர்கள்.

'நினைவின் புதர்ச் சரிவுகளிலிருந்து' என்ற தங்களின் ஒரு சிறுகதை கணையாழியில் வந்தது. அதில் ராகவனுக்குப் பலகாலமாய் ஒரு கனவு இருக்கும். குளிர்சாதன வசதி செய்யப்பட்ட

பார் ஒன்றில் அரையிருட்டில் டன்ஹில் சிகரெட் புகைத்தபடியே ஒரு பாட்டில் பீர் அருந்த வேண்டும். எனக்கும் அதுபோல் ஒரு கனவு. டன்ஹில்லுக்கு பதில் இந்த சினிமா கிளைமாக்ஸில் காட்டு வார்களே. அதுபோல ஒரு பெண் நடனமாட குடித்தபடியே ரசிக்க வேண்டும். அடலீஸ்ட் இந்த பெல்லி டான்ஸ் இருக்கே.. நம் ஊர் டாஸ்மாக்கில் பல்லி டான்ஸ்தான் பார்க்கமுடியும்.

நன்றி

என்.விநாயக முருகன்

○

டியர் முருகன்,

நீங்கள் கொடுத்த பூங்கொத்தை என் வாழ்நாளில் மறக்க முடியுமா? அன்பின் வெளிப்பாடாக நீங்கள் கொடுத்த பூங்கொத்தை ஞாநி பொதுமேடையில் வைத்து அவமானப்படுத்த, அதை நான் விமர்சிக்க, இன்றளவும் குமுதத்தில் என்னை ‘இன்டெர்நெட் பிச்சைக்காரன்' என்று திட்டிக் கொண்டிருப்பதை எப்படி மறப்பது? கவலைப்படாதீர் கள். நாம் நரகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எனவே நரகத்தின் விதிமுறைகளுக்கு அனுசரித்துத்தான் போக வேண்டும்.

இந்த நாடு நரகம் அல்லாமல் வேறு என்ன? ஒருவருக்கு நீங்கள் பூங்கொத்து கொடுக்கிறீர்கள். அவர் அந்தப் பூங்கொத்தைக் கொடுத்த தற்காக உங்களைச் சாடிவிட்டு அதை வேறொருவருக்குக் கொடுக்கிறார். நீங்கள் அன்பாக எனக்குக் கொடுக்கும் பொருளை வாங்கி உங்கள் கண் முன்பாகவே குப்பைத்தொட்டியில் வீசி எறியும் நாகரீகத்தையும், பண்பாட்டையும் நாம் இந்தியாவில் அன்றி வேறு எந்த தேசத்தில் காண முடியும்?

சமீபத்தில் நண்பர் பசுபதி எனக்கு போன் செய்தார் லண்டனில் வசிப்பவர். அப்போது நான் கொஞ்சம் அவசர வேலையில் இருந்தேன். அப்புறம் கூப்பிடுங்கள் என்றேன். “ஓ, அப்படியா? நான் சென்னை விமான நிலையத்தில் இருக்கிறேன்; மூன்று நாள் வேலையாக வந் திருக்கிறேன். அவசரமாக ஒரு விஷயம் சொல்ல வேண்டும்” என்றார். அவர் அப்படிச் சொன்னபிறகு நான் என் வேலையை ஒத்தி வைத்து விட்டேன் விமான நிலையம் என்றதும் எனக்கும் பதற்றம் கூடி விட்டது. இந்தியா நரகம் என்றால் விமான நிலையம் நரகத்தின் நுழைவாயில். வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கு நரக வாழ்வின் அறிமுகப்படலம் நடக்கும் இடம்.

ஆச்சரியமாக இருக்கிறது; என் எழுத்தை ஆழ்ந்து படிக்கும் பசுபதி போன்ற நண்பர்கள் இந்தியாவைப் பற்றி என்ன நினைத்துக் கொண் டிருக்கிறார்கள் என்றே புரியவில்லை. இந்தியாவிற்குள் நுழைந்ததும்

அவர் என்ன செய்திருக்க வேண்டும்? குடியுரிமை அதிகாரிகள் அவருடைய பாஸ்போர்ட்டையும், வீசாவையும் பரிசோதித்து அனுப்பிய வுடன் பேசாமல் நடையைக் கட்டியிருக்க வேண்டாமா? அவர் அப்படிச் செய்யவில்லை. மீனம்பாக்கம் விமான நிலையத்தை ஹீத்ரோ விமான நிலையம் என்று நினைத்துவிட்டார் போலும். பக்கத்தில் வளைகுடா நாடுகளில் கூலி வேலை செய்யும் தமிழர்கள் குடியுரிமைப் பிரிவில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யத் தெரியாமல் திணறு வதைப் பார்த்து 'கொடுங்கள், நான் பூர்த்தி செய்து தருகிறேன்' என்று சொல்லி, அந்தப் படிவங்களை தமிழில் பூர்த்தி செய்து கொடுத்திருக் கிறார். ஏனய்யா, தமிழ்நாட்டில் எவனாவது தமிழில் பூர்த்தி செய்து கொடுக்க முடியுமா? இது என்ன அறிவாலயமா? அல்லது, தாலுகா ஆபீசா? விமான நிலையம். அங்கே இருப்பவர்கள் ஒருத்தருக்குக் கூட தமிழ் தெரியாது. குடியுரிமைப் பிரிவில் இருப்பவர்கள் அனைவரும் மலையாளிகள். மற்றவர்கள் அனைவரும் வட இந்தியர்கள். ஒருத்தருக் கும் ஒரு வார்த்தை தமிழ் தெரியாது.

தமிழில் எழுதியதோடு நிறுத்தவில்லை; பசுபதி அந்தக் குடியுரிமை அதிகாரிகளிடம் விவாதம் வேறு செய்திருக்கிறார். மலேஷிய விமான நிலையங்களில் தமிழில் எழுதலாம்; சிங்கப்பூரில் தமிழில் எழுதலாம்; ஏன், தமிழர்களைக் கொன்று குவிக்கும் இலங்கையில் கூடத் தமிழில் எழுதலாம்; தமிழ்நாட்டில் தமிழில் எழுதக்கூடாதா?

இப்படியெல்லாம் ஷங்கரின் *அந்நியன்* பட வசனமெல்லாம் பேசினால் இங்கே இந்தியாவில் கஞ்சா கடத்தியதாகச் சொல்லி உள்ளே தள்ளி விடுவார்கள். பத்து வருடங்களுக்கு வெளியே வர முடியாது. அதையே தான் குடியுரிமை அதிகாரிகளும் பசுபதியிடம் சொல்லியிருக்கிறார்கள். இப்போதே இங்கேயே மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுக்காவிட்டால் ஜெயில்தான் என்று சொல்லியிருக்கிறார்கள் குடியுரிமை அதிகாரிகள். பசுபதியும் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்து விட்டு ரத்தம் கொதிக்க என்னிடம் பேசினார். ஏதாவது செய்யுங்கள் சாரு; பத்திரிகை யில் எழுதுங்கள் சாரு... என்னது, பத்திரிகையில் எழுதுவதா? அப்படி எழுதினால் பசுபதியை என்றென்றைக்கும் ப்ளாக் லிஸ்ட் செய்து ஓரம் கட்டிவிடுவார்கள். அப்புறம் வெளிநாட்டுப் பக்கமே போக முடியாது.

பொதுவாக ஹிட்லரின் ஜெர்மனியில் பசுபதி போன்ற அராஜகவாதி களை, கலகக்காரர்களை அந்தக் குடியுரிமை அதிகாரிகளின் பூட்ஸ்களை நாக்கினால் நக்கச் சொல்வார்கள். இந்தியா அந்த விதத்தில் கொஞ்சம் பரவாயில்லை. பூட்ஸையெல்லாம் நக்கச் சொல்ல மாட்டார்கள். மன்னிப்புக் கடிதமே போதும்.

என்ன நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள் பசுபதி? இந்தியா ஒரு நரகம். இங்கே வாழ்வதாக இருந்தால் நரகத்தின் விதிமுறைகளை மட்டுமே நீங்கள் பின்பற்ற முடியும். இதே விதியின்படிதான் பூங்கொத்து கொடுத்த விநாயகம் முருகனின் மீதும் தடியடிப் பிரயோகம் நடத்தப்

பட்டது.

அந்தச் சம்பவம் ஞாபகம் இருக்கிறது முருகன்; மறக்கவே மாட்டேன்.

இப்போது குடிக்கு வருவோம். குடியைக் கவித்துவமாகச் சொன்ன கண்ணதாசன், மனுஷ்ய புத்திரன்... குடியை மட்டும் அல்ல; குட்டிகளைப் பற்றியும் இரண்டு கவிஞர்களும் விளைந்து விளைந்து எழுதியிருக்கிறார்கள்.

இதோ இன்றைய *உயிர்மை*யில் வந்திருக்கும் மனுஷ்ய புத்திரனின் கவிதையைப் பாருங்கள்.

இன்று ஒரு புதிய மச்சத்தைக்
கண்டு பிடித்தேன்
ஒரு புதிய தீவிற்கு
ஒரு புதிய நடசத்திரத்திற்கு
ஒரு புதிய எரிமலைக்கு
அதைக் கண்டுபிடித்தவனின் பெயரை
இடுவதைப் போல
அந்த மச்சம் என் பெயரால்
அழைக்கப்படலாம்

இவ்வளவு காமம் ததும்பும் வரிகளை சமகாலக் கவிஞன் வேறு எவனாவது எழுதியிருக்கிறானா? பாப்லோ நெருதா கூட எழுதவில்லை.

மனுஷ்ய புத்திரனை நேரில் சந்திக்கும்போதுதான் மச்சத்தை அவர் எங்கே கண்டுபிடித்தார், என்ன ஏது என்று விசாரிக்க வேண்டும். லேசில் சொல்ல மாட்டார். அப்ஸொலூட் வாட்காவை ஊற்றி ஆளை சரித்த பிறகுதான் கேட்டு வாங்க வேண்டும்.

முருகன் சொல்லும் பெல்லி டான்ஸை ஏற்கனவே பார்த்து எழுதி விட்டேன். ஸேடி என்பது அவர் பெயர். என்னுடைய இப்போதைய மனநிலையில் ஸேடியின் டான்ஸெல்லாம் ஈர்க்கவில்லை. நிலவிலேயே வாழ்ந்து கொண்டிருப்பவனிடம் காகித நிலவைக் காண்பிக்க முடியுமா? இதெல்லாம் ஜுஜுபி என்று தோன்றுகிறது. மன்னிக்கவும். இதற்கு மேல் எழுத முடியாது.

சராசரி மனிதர்களின் குடிக்கும், எழுத்தாளர்களின் குடிக்கும் வித்தியாசம் இருக்கிறது என்று குறிப்பிட்டேன். கடந்த வேலண்டைன்ஸ் டே அன்று காலை எட்டு மணிக்கு ஒரு போன் வந்தது. க.சீ. சிவகுமார். ஆள் நல்ல போதையில் இருந்தது போல் தெரிந்தது. “என்னய்யா இது, இவ்வளவு காலையில்?” என்று கேட்டேன் “ம்ஹும், நேற்று மாலையிலிருந்து குடித்துக்கொண்டிருக்கிறேன்” என்றார் பிறகு அபிராமி அந்தாதியிலிருந்து

பதத்தே உருகி, நின் பாதத்திலே மனம் பற்றி, உன்தன்
இதத்தே ஒழுக, அடிமை கொண்டாய், இனி, யான் ஒருவர்
மதத்தே மதி மயங்கேன், அவர் போன வழியும் செல்லேன்—
முதல் தேவர் மூவரும் யாவரும் போற்றும்முகிழ் நகையே

என்ற பாடலைப் பாடி அதுபற்றி நீண்ட நேரம் பேசினார்.

உன் பாதத்தையே பற்றும்படிச் செய்துவிட்டாய் தேவி. இதை உணர்கின்ற ஒவ்வொரு கவிஞனும் குடிக்கலாம்.

2.2.2010

சாரு இந்த நூலில்
விவாதிக்கும் பல
பிரச்சினைகள் நமது
கலாச்சார
மதிப்பீடுகளோடும்
நுண்ணுணர்வுகளோடும்
தொடர்புடையவை. குடி,
கவிதை, பூங்கொத்துகள்,
உடல் குறைபாடுகள்,
கசப்புகள், பிரியங்கள்
என பல்வேறு
தளங்களில் இவை
கூர்மையான
கேள்விகளை
எழுப்புகின்றன.

உயிர்மை
பதிப்பகம்

₹ 60

ISBN-978-93-81095-01-0

www.uyirmmai.com